சிவமயம்.

# அருணகிரிநாதர்

அருளிச்செய்த

# கந்தரந்தாதி மூலமும்

அவர்காலத்திற்றானேயதற்கு

## வில்லிபுத்தூரார்செய்தவுரையும்

இக்காலத்திற்கையெழுத்துப்பிரதிகடோறும்
மிகவும்பிழையுற்றுவழங்குவதைநோக்கி
தூத்துக்குடி

## முத்துசாமியையாவெனும்

வைதிகர்-சுத்தபாடமாகப் பிரசித்தஞ்செய்யும்படி
கேட்டுக்கொண்டதினால்
அஷ்டாவதானம்

## வீராசாமிசெட்டியாரவர்கள்

மாணாக்கராகிய- காலேஜ்-முனுஷி

## கதிர்காமமுதலியாரால்

பலபிரதிகளைக்கொண்டுபரிசோதிக்கப்பட்டு

ஸ்ரீபெரும்பூதூர்

## அகத்தீஸ்வரமுதலியா

ரவர்களால்
தமதுகலைமகள்விலாசஅச்சுக்கூடத்தில்
அச்சியற்றப்பட்டன.

சிவமயம்.

# கந்தரந்தாதி-மூலமும்-உரையும்.

## காப்பு.

வாரணத்தானை யயனைவிண்ணோரை மலர்க்கரத்து *
வாரணத்தானை மகத்துவென்றோன்மைந் தனைத்துவச - *
வாரணத்தானைத் துணைநயந்தானை வயலருணை - - *
வாரணத்தானைத் திறைகொண்டயானையை வாழ்த்துவனே *

(இதன் பதப்பொருள்.)

வாரணத்தானை - அயிராவதத்தையுடைய விந்திரனையும் — அயனை-பிரமாவையும் — விண்ணோரை-தேவர்களையும் — மலர்க்கரத்து-தாமரைமலர்போன்றகையில் — வாரணத்தானை- சங்கையுடைய விஷ்ணுவையும் — மகத்து - (தக்கனது) வேள்வியில் — வென்றோன்- (வீரபத்திர முகூர்த்தங்கொண்டு) செயித்தவனாகிய பரமசிவனது — மைந்தனை-புதல்வனும் — துவசவாரணத்தானை- கோழிக்கொடியையுடைய குமாரக்கடவுளை — துணைநயந்தானை-தம்பியாகவிரும்பியவனும் — வயல்சூழ்-பழனஞ்சூழ்ந்த — அருணை-அருணாசலத்தில் — வாரணத்தானை - கயமுகாசுரனை — திறைகொண்ட - வெற்றிகொண்ட — யானையை- யானைமுகனுமாகிய கணபதியை — வாழ்த்துவன்- (யான்) வணங்குகிறேன் என்றவாறு. யான் - தோன்றாவெழுவாய்-வாழ்த்துவன்-பயனிலை. ஏகாரம்-ஈற்றசை.

(கருத்துரை.)

தக்கனது வேள்வியில் இந்திரன்-பிரமா-விஷ்ணு-விண்ணோர் இவர்களை வீரபத்திரமுகூர்த்தங்கொண்டு வென்ற பரமசிவனது மைந்

தனும், குமாரக்கடவுளுக்குத் துணைவனும், கயமுகாசுரனை வெ
றோனுமாகிய அருணகிரியில் வீற்றிருக்கும் யானைமுகவிநாயகனை
யான் வணங்குகின்றேன்-என்பதாம். (

(இதுவுமது.)

உண்ணாமுலையுமை மைந்தாசரணம் பரருயிர்சேர் - - -
உண்ணாமுலையுமை மைந்தாசரண மருணைவெற்பாள் - -
உண்ணாமுலையுமை மைந்தாசரணந் தனமுமொப்பில் - -
உண்ணாமுலையுமை மைந்தாசரணஞ் சரணுனக்கே - - -

(இ-ள்.) உண்-(கன்றுகள்) உண்ணும்—ஆ-பசுக்களையுடைய—மு
லை-முல்லைநிலத்திற்கு—உ-இறைவனாகிய விஷ்ணுவினது—மை-மே
கநிறத்தையும்—மைந்து-வலிமையையும்—ஆசு - (உவர்ப்பாகிய
குற்றத்தையுமுடையதாய்—அரண்-காவலாயிருக்கிற—அம்பரா
சமுத்திரத்திருந்த அசுரரது—உயிர்சேர்-ஆவியைமாய்த்து—உள்
தேவர்கள்மனத்திருந்த—தாம் - அச்சத்தை—உலையும்-கெடுத்த
னும்—ஐ-சுவாமியே—மை-ஆட்டுவாகனத்தை—தா-ஏறும்—சா
(உஷ்ணத்தையுடைய) அக்கினி—அண்-சேர்ந்திருக்கும்—நம்-ந
மடைக்கலம்புகுதற்கிடமாகிய—அருணைவெற்பாள்- அருணகிரிய
ல்வாழுமம்மையாகிய—உண் மிகுதியாக—ஆம் - பெருகும்—
லையும்-கற்புடைமைக்கும்—ஐ - அழகிய—மை - அஞ்சனந்தீட்டி
ய—தா-குழையைவெட்டுகின்ற—சர-அம்புபோன்றகண்ணினளு
—தந்தனமும்-கிருபைக்கும்—ஒப்பில் - இணையில்லாத—உண்ணா
முலையுமை-உண்ணாமுலையென்னும் பெயரையுடைய பார்வதியின
து—மைந்தா- புதல்வனே—சரணஞ்சரணுனக்கு - உன்னிடத்தே
யான் சரணம்புகுந்தேன்சரணம்புகுந்தேன்—(எ-று.) யான்-தே
ன்றுவெழுவாய்-சரணஞ் சரணம்-பயனிலை-ஏ- அசை - (கருத்து
திருமானிறம்போற்கறுத்து உவர்ப்பையுடையதாயும் வலியவா
யுமிருக்கிறசமுத்திரத்திருந்தஅசுரரைத்தேவரச்சந்தீரும்படி வ
த்தவனே-அக்கினிசொரூபமாகிய அருணகிரியிலமர்ந்தருளி கற்ப
லும் கடாக்ஷத்திலுந்தனக்கொப்பில்லாத உண்ணாமுலையம்மையு
ந்தவனே-யானுனடைக்கலம்புகுந்தேன்-என்பதாம். (உ

# நூல்

திருவாவினன்குடி பங்காளரெண்முது சீருரைச - - *
திருவாவினன்குடி வானார்பரங்குன்று சீரலைவாய் - - *
திருவாவினன்கூட மேரகங்குன்றுதொறாடல்சென்ற - - *
திருவாவினன்குடி கொண்டதண்கார்வரை செப்புமினே - *

(இ-ள்.) திரு-மகாலக்ஷிமிக்கு—ஆவி-உயிராகிய(திருமாலும்)—நன்குடி- நற்றேவியை—பங்காளர்- பாகத்திலுடைய பரமசிவனும்—எண்- மதிக்கத்தக்க—முது - பழமையாகிய —சீர் - சிறப்புப் பொருந்திய—உரை- (வேதாகமப்பொருளை) சொல்லிய —சதிர்-சதுர்ப்பாட்டையுடைய—உவாவினன்-இளையோனாகிய(கந்தசுவாமிக்கு)—குடி-உறைவிடமாகிய—வான்- ஆகாசத்தை—ஆர்-அளாவிய—பரங்குன்று-திருப்பரங்குன்றையும்—சீரலைவாய்- திருச்செந்திற் பதியையும்—திரு- செல்வநிறைந்த—ஆவினன்குடி- பழனியையும்—ஏரகம்-சுவாமிமலையையும்—குன்றுதொறாடல்-(அக்கடவுள்) திருவிளையாட்டியற்றும் பலகுன்றங்களையும்—சென்று- நடந்து—அதிர்-முழங்கும்—உவா-யானைகளின்—இனன்-கூட்டங்கள் குடிகொண்ட- நீங்காதுறைகின்றதும்—தண்கார்- குளிர்ந்தமேகந் தவழ்வதுமாகிய—வரை - பழமுதிர்சோலையையும்—செப்புமின்-துதிசெய்யுங்கள்—(எ-று.) நீவிர்-தோன்றுவெழுவாய்-செப்புமின் பயனிலை-ஏ-அசை(கருத்து) (பார்வதிசமேதரான பரமசிவனும்) லக்ஷ்மிசமேதரான திருமாலும், புகழ்கின்றகீர்த்தியும் வல்லமையுமுடைய குமாரக்கடவுளுக் குறைவிடமாகிய திருப்பரங்குன்றம்-திருச்செந்தூர்-பழனி-திருவேரகம்-குன்றுதொறாடல்- பழமுதிர் சோலைமலை-இவ்வாறுதலங்களையுந் துதியுங்கள்-என்பதாம். (௧)

செப்புங்கவசங் கரபாலகதெய்வ வாவியம்பு - *
செப்புங்கவசங் கரிமருகாவெனச் சின்னமுன்னே *
செப்புங்கவசம் பெறுவார்களுந்தெய்வ யானைதனச் - *
செப்புங்கவசம் புனைபுயன்பாதமெழுன் சென்னியதே. - *

(இ-ள்.) செ- ரிஷபத்தையுடைய—புங்கவ- தேவாகிய—சங்கர பாலக-சங்கரன்பாலனே—தெய்வ-தெய்வீகமாகிய—வாவி- அவ

ணப்பொய்கையின்—அம்பு-ஜலத்தில்—செ-உற்பவித்த—புங்கவ-
உயர்ந்தோனே—சங்கு-சங்கையுடைய—அரி-விஷ்ணுவுக்கு—ம
ருகா-மருகனே—என-என்று—சின்னம்-திருச்சின்னமானது—
முன்னே-முதலில்தானே—செப்பு-சொல்லியார்க்கின்ற—உங்கு-
உவ்விடத்திலேயே(கேட்டு)—அவசம்பெறுவார்-மயக்கம் அடை
யும்(பவனி) மாதரது—கணும்-விழிப்பார்வையையும்—தெய்வா
னை-தெய்வானையினது—தனச்செப்பும்-கொங்கையாகிய கலசத்
தையும்—கவசம்புனை-சட்டையாகவணிந்த—புயன்-தோளையுடை
யவனாகிய முருகக்கடவுளின்—பாதம்-திருவடி—என்சென்னியது-
என்றலைமீதுற்றது—(எ-று.) பாதம்-எழுவாய்-சென்னியது-பய
னிலை-ஏ-அசை-(கருத்து) பரமசிவன்மைந்தனே-சரவணோற்பவ
னே-திருமால்மருகனே-என்று சின்னம் ஆர்ப்பதைக்கேட்டு மயங்
கும் பெண்களின் பார்வையையுந் தெய்வயானையின் கொங்கை
யையும் கவசமாகத்தரித்த குமாரக்கடவுள் திருவடி என்றலையின்
கண்ணது-என்பதாம். (௨)

செல்னியமோகந் தவிராழுதோகண் டிகிரிவெண்ணெய்ச் - *
சென்னியமோகம் படவூதெனத்தொனி செய்தபஞ்ச - *
சென்னியமோகந் தரம்புனத்தேன்புணர் தேவத்தெய்வச் - *
செல்னியமோகம் பணிபணியேரகத் தேமொழிக்கே - *

(இ-ள்.) சென்னி-சிரசின்கண்ணே—அம்-(கங்கா) சலத்தின்—
ஓகம்-ஆரவாரம்—தவிரா-நீங்காத (பரமசிவன்)—அழுதோ-உன்
டருஞ்சுதானோ—கண்-விழியானது—திகிரி-சக்கரத்தையேந்தி—
வெண்ணெய்-நவநீதமுண்ட—செல்னிய-கீதமிசைக்கின்ற திருமா
லே—மோகம்பட-(தேவரும்)மயல்கொளும்படி—ஊதென-ஊ
தென்று சொல்ல—தொனிசெய்த-முழக்கின—பஞ்சசென்னிய
மோ-பாஞ்சசன்னியமென்னுஞ்சங்கந்தானோ—கந்தரம்-கழுத்தா
னது—புனத்தேன்-(தினைப்புனத்தின்கண்) மதுரபாஷிணியாகிய
வள்ளிநாயகியை—புணர்-தழுவும்—தேவை-குமாரக்கடவுளை—
தெய்வச்சென்னி-தெய்வத்தன்மையையுடைய சோழராஜன்—அ
மோகம்-அதிகவாசையுற்று—பணி-வணங்கிய—பணி-கட்டுவித்த-
ஏரக-சுவாமிமலைச்சார்பில்வாழும்—தேமொழிக்கு-இனியமொழி
யையுடையபெண்ணுக்கு.—(எ-று.) கண்-கந்தரம்-இரண்டும் எழு

வாய்-அமுது பஞ்சசன்னியம்-இரண்டும்பயனிலை-ஏ-அசை- (கருத்து) தெய்வச்சோழனானவன் கந்தக்கடவுளைவழிபட்டசுவாமிமலையினில் வாழும் பெண்ணினுடையகண் பரமசிவனுண்ட நஞ்சோ அவள் கழுத்து திருமால்முழக்கின சங்கமோ-எ-ம். (௩)

தேமொழியத்தம் பெறவோர்தனக்கன்று சேணுலகத் - - *
தேமொழியத்தம் சினங்காட்டவுணரைச் சேமகரத் - - *
தேமொழியத்தம் புயமவர்சூடிகை சிந்தவென்ற - - - *
தேமொழியத்தம் பதினாலுலகுமந் தித்ததொன்றே - *

(இ-ள்) தேமொழி - இனிய மொழியை யுடையவளாகிய பார்வதியின்—அத்தம் - பாதியாகிய (பரமசிவன்)—பெற - உபதேசம் பெற்றுக்கொள்ள—ஓம்தனக்கு - பிரணவத்திற்கு—அன்று-பூர்வத்தில்—சேணுலக - தேவலோகத்தின்—தேம் - நன்மையெல்லாம்—ஒழிய - அற்றுப்போகும்படி—தம் - தங்கள்—சினம் - கோபத்தை—காட்டு - காட்டிய—அவுணரை - அசுரரை—சேமகர-ஆண்சுறாமீனுக்கு—தேம்- இடமாகியசமுத்திரத்தில்—மொழி-கணுக்களையுடைய—அத்தம்-கரங்களும்—புயம்-தோள்களும்—அவர்-அவர்களுடைய—சூடிகை-கிரீடங்களும்—சிந்த- சிதற—வென்ற-சங்கரித்துச்செயித்த—தே-குமாரக்கடவுளானவர்—மொழி-உரைத்தருளிய—அத்தம்-பொருள்—பதினாலுலகும்- ஈரேழுலோகத்தினும்—அந்தித்தது-பொருந்திநின்றது—ஒன்று- ஓரேதன்மையாக—(எ-று) அத்தம்-எழுவாய்-அந்தித்தது-பயனிலை-ஏ-அசை (கருத்து) விண்ணுலகநன்மையை யொழித்துவந்த அசுரரைச்சமுத்திரத்தில்சங்கரித்துவென்ற குமாரக்கடவுள் பரமசிவனுக்கு உபதேசித்த பிரணவப்பொருளானது பதினாலுலகத்தினு மோரேதன்மையாய்ப் பொருந்தினது-என்பதாம். (௪)

தித்தவித்தார மனித்தனைத்தேவர் வணங்கமுன்போ - - *
தித்தவித்தாரகை மைந்தர்செந்தூர்க்கந்தர் சித்துரவா - - *
தித்தவித்தார முடையாரருள்வெள்ளந் தேக்கியன்பு - *
தித்தவித்தாரந் தனிவீடுறத் துக்கச்செவ்வனவே - *

(இ-ள்) தித்தவித்தாரம்- தித்தவென்னுந்தாளவிரிவினால்—மன்-நிலைபெற்ற—நித்தனை-நடனமிடும்பரமசிவனுக்கு—தேவர்-அமர

ரீகள்—வணங்க-வந்திக்கும்படியாக—முன்-முற்காலத்தில்—போதித்த - உபதேசித்தவராகிய—வி-விசேஷமான—தாரகை-கார்த்திகைப்பெண்களின்—மைந்தர்- புதல்வரும்—செந்தூர்க்கந்தர்-செந்திற்பதிவாழ்கந்தவேளும்—சிந்தூரம் - திலதத்தை—ஆதித்த-சூரியனைப்போலுடைய—வி - நல்ல—தாரமுடையார்-(வள்ளிதெய்வயானையென்னும்) தேவிகளையுடையவருமாகிய குமாரக்கடவுள்—அருள்வெள்ளம் - தமதுகிருபாநதியை—தேக்கி-என்னுள்ளத்துநிறைத்து—அன்பு-பத்தியை—உதித்து- தோற்றுவித்து—அவித்தார்-தணித்தார்—அம்-அழகிய—தனி-ஒப்பற்ற—வீடு-மோட்சம்—உற-அடையும்படி—துக்கம் - இம்மையை(விளக்கின்ற)—செ-செனனமாகிய—அனல் - அக்கினியை—(எ-று)மைந்தர் முதலிய-எழுவாய்-அவித்தார்-பயனிலை-ஏ-அசை-(கருத்துரை)முற்காலத்திற்பரமசிவனுக்குபதேசித்தவரும் கார்த்திகேயரும் வள்ளிதெய்வானைபாகருமாகிய செந்தூர்க்கந்தனென்னுள் கருணைவெள்ளத்தைநிறைத்து யான்கதியடையும்பொருட்டாகக் கொடியாக்கினிபோன்றதுன்பத்தை விளைக்குமென்பிறப்பை யொழித்தார்- என்பதாம்.

செவ்வந்திநீலப் புயமுருகாபத்தர் சித்தமெய்யிற் - *
செவ்வந்திநீலத்தை யுற்றருள்வாய்திங்கட் சேய்புனைந்த *
செவ்வந்திநீலத் தொருபாகர்போன்ற தினிச்சிந்தியார் *
செவ்வந்திநீலத்தி னீடுமுற்றுத திமிரமுமே - - *

(இ-ள்)செவ்வந்தி - செவ்வந்தியென்னும் பூமாலையையும்—நீலம் - கருங்குவளைமாலையையும்(புனைந்திடும்)—புயம் - புயங்களையுடைய—முருகா-முருகக்கடவுளே—பத்தர்-அன்பரது—சித்தமெய்யில்-இருதயவுண்மைநிலையில்—செவ்வு- செம்மையாக—அந்தி-பொருந்தியிருக்கின்ற—நீ-நீ—லத்தையுற்று-கிருபைகூர்ந்து—அருள்வாய் - (அம்மாலையை) எனக்குத்தந்தருளவேண்டும்—திங்கட்சேய்-குழவித்திங்களை—புனைந்த - அணிந்த—செவ்வந்தி- சிவந்தமாலைக்காலமானது—நீலத்தொருபாகர் நீலநிறத்தையுடைய பார்வதிபங்கரை—போன்றது - தோன்றிவிளங்குகின்றது—இனி-இனிமேல்—சிந்தியார்-(உன்னை)தியானியாதவர்கள்(அடையும்)—செ-செனனமாகிய—வந்தி-வருத்தத்தை(விளைக்கும்)—நீலத்தின்-அஞ்ஞானவிருளைப்போல—நீடும்- நீடித்துநிற்கும்—முற்றுத-தொலை

யாத—திமிரமும்-இருட்டும்—(எழு)நீ-எழுவாய்-அருள்வாய்-பயனிலை-ஏ-அசை (கருத்து) செவ்வந்திநீலோத்பலமாலிகையணியுமுருகாபரமசிவனைப்போல இளம்பிறையுஞ் செவ்வானமுந்தோன்றியமாலைக்காலமும்உன்னைநினையாரடையுஞ்செனன விருளைப்போலஇருட்டும்வந்தது-அன்பராதுசித்தத்தில்வீற்றிருக்கின்ற நீகருணையுற்றம்மாலையை யெனக்கருளவேண்டும்- என்பதாம். (௬)

திமிரத்திமிரக் கதரங்கப்காப செவ்வேலகைவேல் - - *
திமிரத்திமிரக் குலாந்தகவரைத் தேன்பெருகுந் - - *
திமிரத்திமிரத் தனையாவியாளு மெம்சேவகனே - *
திமிரத்திமிரக் கனலாயசந்தன சீதளமே - - *

(இ-ள்.) திமிர - இருணிறத்ததும்—திமி- திமிங்கலமீனை—ரக்க- இரட்சிப்பதுமாகிய—தரங்கம்-சமுத்திரத்தை—கோப-கோபித்தவனே—செவ்-சிவந்த—வேல-வேலாயுதத்தையுடையானே—கைவேல்-கையின்வேலாயுதமும்—திமிர-திமிராகும்படி—திமி-குற்றுகின்ற—ரக்கருலாந்தக- அசுரர்குலத்துக்குயமனே—வரைத்தேன் பெருகு-மலையினின்றுவீழுந்தேனூற்பெருகிய—உந்திமிர் - கானியாற்றையுடையபுனத்தில்வாழும்வள்ளிநாயகீ—அத்திமிர்- ஐயிராவதத்தால்வளர்க்கப்பட்டதெய்வானைநாயகீ—ஆத்தனை -அவ்வளவு—ஆவி- (என்) பிராணனை—ஆளும்-ஆண்டுகொள்ளுங்கள்—என்-என்றிங்கிதம்பேசும்—சேவகனே-வீரனே—திமிரத்திமிர-பூசப்பூச—அனலாய-அக்கினிபோலிருக்கின்றன—சந்தனசீதளம்-(யான் திமிர்ந்திருக்கின்ற) சந்தனமுதலியகுளிர்ந்தவஸ்துகளும் (ஆதலால்வந்துதழுவியருளவேண்டும்)—(எழு.)தரங்ககோபமுதலியன-எழுவாய் - என்னைத் தழுவவேண்டும் - என்னும் பயனிலையை-குறிப்பாய்க் காட்டிநின்றன. ஏ-அசை. (கருத்து.) திமிங்கலமீனையுடைய விருண்ட சமுத்திரத்தைக் கோபித்தவனே, வேல்வனே; அசுரர்குலாந்தகனே, வள்ளிதெய்வயானையென்னு நாயகிமார்தழுவும்படி இதம்பேசும் வீரனே, யான்பூசுஞ் சந்தனமுதலிய குளிர்ந்தவஸ்துகளிப்போதுன் விரகதாபத்தா லெனக்கு வெப்பத்தை விளைக்கின்றன-என்பதாம். ஆதலால் என்னைத் தழுவவேண்டுமெ ன்பது குறிப்பு. (௭)

சீதனங்கோடு புயங்கைகொண்டார்தந் திருமருக - - - *
சீதனங்கோடு முடியாளர்சேய்தனக் கேதுளதோ - - - *
சீதனங்கோடு னிதரும்மென்பார்தொழுந் தேவிபெறுஞ் - - *
சீதனங்கோடு கொடிவேன்மயூரஞ் சிலையரசே - - - - *

(இ-ள்.) சீ மகாலக்ஷ்மியினது—தனம்-கொங்கையையும்—கோடு-சங்கத்தையும்—புயம்-திருத்தோளிலும்—கை-திருக்கரத்திலும்—கொண்டார்தம்-தரித்தவிஷ்ணுவினது—திருமருக-சிறந்தமருகனும்—சீதம்-சந்திரனை—அம்-அழகிய—கோடு-கோணல்வடிவாக (தரித்த)—முடியாளர்-பரமசிவன்-சேய்தனக்கு-மைந்தனுமாகிய குமாரக்கடவுளுக்கு—ஏதுளதோ-உள்ளதென்னெனில்—சீ-இகழத்தக்க—தனம்-திரவியம்—கோள்-குற்றத்தையும்—துனி-துன்பத்தையும்—தரு-கொடுக்கத்தக்கது—என்பார்-என்று நீக்கியவன்பர்கள்—தொழும்-வணங்குகின்ற—தேவி-வள்ளிநாயகியால்—பெறுஞ்சீதனம்-கிடைத்தவரிசையாகிய—கோடு-கொம்பினோடு—கொடி-கோழிக்கொடியும்—வேல்-வேலாயுதமும்—மயூரம்-மயில்வாகனமும்—சிலை-குறிஞ்சிநிலமாகியமலைகளின்—அரசு-ஆளுகையுமாம்—(எ-று) ஏதுளது-எழுவாய்-இவைகளுடைமையாம்-பயனிலை-ஏ-அசை-(கருத்து.) திருமாலுக்கு மருகோனும் பரமசிவனுக்கு மைந்தனுமான குமாரக்கடவுளுக்கு வள்ளிநாயகி சீதனத்தாற்பெற்ற கொம்புடன் கோழிக்கொடியும் வேலாயுதமு மயில்வாகனமும் மலைகளின் ஆளுகையும் உடைமைகளாம்-என்பதாம். (அ)

சிலைமதனம்படுமாறெழுஞ்சேய்மயி லுச்சிட்டவெச் - - *
சிலைமதனம்படு சிந்துவையிந்துவைச் செய்வதென்யான் - *
சிலைமதனம்படு காட்டிவர்கேளிருஞ் செங்கழுநீர்ச் - - - *
சிலைமதனம்படு தாமரைவாவி திரள்சங்கமே - - - - - *

(இ-ள்.) சிலை-கருப்புவில்லையுடைய—மதன்-மன்மதனது—அம்பு-புஷ்பபாணம்—அடுமாறெழும்-கொல்லும்படிவருகின்றன—சேய்மயில்-குமாரக்கடவுளின்மயிலினது—உச்சிட்ட-எச்சிலாகியபாம்பினது—எச்சிலை-எச்சிலாகிய தென்றற்காற்றையும்—மதனம்படு-கடையப்பட்ட—சிந்துவை-சமுத்திரத்தையும்—இந்துவை-சந்திரனையும்—செய்வதென்யான்-நானென்னசெய்யக்கடவேன்—சிலை-[illegible]போடு—மதம்-ஆங்காரத்தை—நம்படு-

நம்மிடத்திலே—காட்டுவர்-அலர்தூற்றிக்காட்டாநின்றார்கள்—சே
ரிரும்-சுற்றத்தாரனைவரும்—செங்கழுநீர்-குவளைமலர்நிறைந்த—
சிலை-திருத்தணிமலையின்கண்ண—மது-தேனும்—அனம்-அன்னப்ப
ட்சியும்—படு-உண்டாகிய—தாமரை-தாமரைகளையுடைய—வாவி-
பொய்கையில் (வாழும்)—திரள்-கூட்டமாகிய—சங்கமே - சங்கி
னங்களே - (எ-று.) யாம்-எழுவாய்-செய்வதென்-பயனிலை - (கரு
த்து) குமாரக்கடவுளினது தணிகையங்கிரித் தாமரைத்தடாகத்தில்
வாழுஞ் சங்கினங்களே என்மேல் மன்மதன் பாணப்பிரயோகஞ்
செய்யாநிற்கின்றான்-தென்றலும் சந்திரனும்கடன்முழக்கமும் வ
ருத்துகின்றன-சுற்றத்தாரது கோபதாபமும் உண்டாயிருக்கின்ற
ன-இவற்றை என்னசெய்து கடப்பேன்-என்பதாம். (௬)

திரளக்கரக்கரை வென்கண்டவேலன் றிசைமுகன்மால் - - *
திரளக்கரக்கரை யாம்பாடநாடுதல் செய்யசங்க - - - *
திரளக்கரக்கரை கான்பான் கைநீத்திசை வார்பனிக்க - - *
திரளக்கரக்கரை வானீட்டுமைந்தர்புந் திக்கொக்குமே - - *

(இ-ள்.) திர-உறுதியான—ளக்க-லட்சமான—ரக்கரை- அசுரர்க
ளை—வென்கண்டவேலன் - புறங்காட்டச்செய்தவேலாயுதனை—தி
சைமுகன்-பிரமாவுக்கும்—மால்-மாயோனுக்கும்—திரள்-அநேக
—அக்கர்-கண்ணையுடைய இந்திரனுக்கும்—அக்கர்- உருத்திராட்ச
மாலையையுடைய பரமசிவனுக்கும்—ஐ-சுவாமியாகியகுமாரக்கட
வுளை—யான்பாடநாடுதல்-நான்பாடும்படிகருதுகின்றது— செய்
ய-அழகிய—சங்க-சங்குகள்—அதிர்-முழங்கும்—அளக்கர்-சமுத்
திரத்தை—அக்கரைகாண்பான் - கரைகாணும்படி—கைநீத்திசை
வார்-கையினால்நீந்திப்போவாரது(புத்திக்கும்)—பனிக்கதிர்- தண்
ணிரையுடையசந்திரனை—அள- பிடித்துக்கொள்ளும்படி—கரக்க
ரை-கையளவை—வானீட்டுமைந்தர்- ஆகாசத்திலேநீட்டுஞ்சிறுவர்
களது—புந்திக்கு-புத்திக்கும்—ஒக்கும்-ஒப்பாகும். (எ-று.)நாடுத
ல்-எழுவாய்-ஒக்கும்-பயனிலை. ஏ-அசை.(கருத்து)அசுரர்களைச்செ
யித்தவரும், பிரமன்முதலியோருக்குச்சுவாமியுமாகியகுமாரக்கட
வுளை யான் பாடக்கருதுதல் கையினாற்கடலைநீந்தவும், கையைநீட்
டிச்சந்திரனைப்பிடிக்கவும், நினைப்போர்புத்திக்கொப்பாயிருக்கின்
றது-என்பதாம். (௭)

திக்கத்திக்கோடு படிபுடைச்சூதத் தெறிபடபத்தி *
திக்கத்திக்கோடு கடடக்கடறடி சேப்படைச்சத்தி *
திக்கத்திக்கோடு துறைத்திறத்தற்ற குறக்குறச்சத்
திக்கத்திக்கோடு பறித்துக்கொடாதி சிறைபிறப்பே *

(இ-ள்.) திக்க-திகைக்கும்படி—திக்கோடு-திசைதோறும்படர்ந்த—படி-பூமியின்கண்—புடை-நீக்கியருள்வாய்—சூத-மாமரமாய்நின்றசூரனை—தெறி-விளங்கிய—படபத்தி-ஆயிரம்படங்குடத்தையுடையஆதிசேடனது—கத்து-தலையிலே—இக்கோடு-இந்தச்சங்குகள்—உகள-உளரும்படியாழ்ந்த—தடக்கடல்-பெரியசமுத்திரத்தின்கண்ணே—தடி-கொன்ற—சேப்படைச்சத்தி-சிவந்தவெற்படையையுடையவனே—கத்தி-கதறி—கோடு-மாறுபட்ட—துறைத்திறத்து-பரசமயவழியில்—அற்ற-மறைந்து நிற்பவனே—குற-குறச்சாதியில்பிறந்த—குறச்சத்திக்கு-வள்ளிநாயகிக்கு—அத்திக்கோடு-ஆனைக்கொம்பை—பறித்து-பிடுங்கி—கொடு-கொடுத்த—ஆதி-முதல்வனே—சிறை-பஞ்சேந்திரியங்களால்கட்டுண்டிருக்கிற—பிறப்பு-(எனது) சென்னத்தை—எ-று- நீதோன்று வெருவாய்—புடை-பயனில்லை-எ-அசை-(கருத்து) சமுத்திரத்தின்கண்மாவுருக்கொண்டுநின்றசூரனைவென்ற வேலாயுதனே மாறுபாடுடைய பரசமயவழிக்கெட்டாதவனேவள்ளியம்மைக்கு யானைக்கோட்டைப்பிடுங்கி விளையாடக்கொடுத்த முதல்வனே பூமியின்கண் ணெல்பிறப்பையொழித்துவிடு- என்பதாம். (௰க)

சிறைவரவாமயி லேறிச்சிகரி தகரவந்து *
சிறைவரவாமையில் கூட்பிடத்தானவர் சேனைகொண்ட *
சிறைவரவான்மயில் வாங்கிதன்றேங்கழல் யாங்கழலாச் *
சிறைவரவாமையி னெஞ்சுடனேநின்று தேங்குவதே *

(இ-ள்.) சிறை-சிறகையும்—வர-வரப்பிரசாதத்தையுமுடைய—வாமயிலேறி-தாவுமயிலேறி—சிகரி-கிரவுஞ்சகிரி—தகர-பொடியாகும்படி—வந்து-எழுந்தருளி—சிறை-கனாயினால்—வர-சூழப்பட்டும்—ஆமை-ஆமைக்கு—இல்-இருப்பிடமுமாகிய(கடல்)—கூட்பிட-இரங்க—தானவர்சேனை-இராக்ஷதசேனைகள்—கொண்டுபோன—சிறைவர-தேவர்சிறைமீளும்படி—ஆம்-

குந்த—ஐயில்வாங்கிதன்- வேலெடுத்தகுமாரக்கடவுளது—தேங்கழல்-இனியபாததாமரையை—யாம்-நான்—கழலா- அனுகாமற்பிரிந்ததறல்—சிறு-சிறிய—ஐவர்- பஞ்சேந்திரியங்களில்—அவா-ஆசையாகிய—மையில்- இருளில்—நெஞ்சு- என்னிருதயம்—உடனேநின்று-அவ்விருளோடுநின்று—தேங்குவது- திகைக்கின்றது—(எ-று) நெஞ்சு-எழுவாய். தேங்குவது- பயனிலை-ஏ-அசை- (கருத்து.) கிரவுஞ்சகிரிபொடிபடவும், சமுத்திரமுறையிடவும், அசுரரினின்றுதேவர்சிறைமீளவும், வேற்படையெடுத்துமயில்மீதெழுந்தருளியகுமாரக்கடவுளினது பாததாமரையைநண்ணுதலே என்னிருதயத்தில் ஐம்புலவாசைகளாறும் அகலாது நிறைந்திருக்கின்றது-என்பதாம். (௰௨)

தேங்காவனமும் மதகரிவேந்துடன் சேர்தவிண்ணோர் - ✻
தேங்காவனமுனை யவ்வேற்பணியெனுஞ் சேயிடமேல் - ✻
தேங்காவனமுந் தளர்நடையாயஞ்சல் செண்பகப்பூந் - ✻
தேங்காவனமுங் கழுநீரிலஞ்சியுஞ் செந்திலுமே. - ✻

(இ-ள்.)தேங்கு-நிறைவாகிய—ஆவன- பசுநிரைமேய்த்ததிருமாலையும்—மும்மத - மும்மதம்பொழியும்—கரி- ஐயிராவதத்தையுடைய—வேந்துடன்- இந்திரனோடு—சேர்ந்த-கூடிய—விண்ணோர்-தேவர்களையும்—தேம்-அத்தேவர்கட்கிடமாகிய (அமராபதியையும்)—காவல்-காப்பது—நம்-நமது—முனைய-கூரிய—வேல்-வேலாயுதத்தின்—பணி- தொழில்—எனும் - என்றுகட்டளையிட்ட—சேயிடம்- குமாரக்கடவுளின்வாசஸ்தலம்—மேல்- முன்னேயிருக்கின்றன—தேங்கா- திலகத்து—அனமும்- அன்னப்பட்சியும்— தளர்நடையாய்-தோற்கின்றநடையவளே—அஞ்சல்-பயப்படாதே—(அவை)செண்பக-செண்பகவிருட்சத்தால்—பூம்-பொலிந்த—தேங்காவனமும்-இனியபூஞ்சோலையும்—கழுநீரிலஞ்சியும்- செங்கழுநீர்மடுவும்—செந்திலும்- திருச்செந்தூருமாம்.(எ-று)நீ-தோன்றுவெழுவாய்-அஞ்சல்-பயனிலை-ஏ- அசை- (கருத்து) அன்னமுந்தோற்குநடையையுடையவளே, விஷ்ணுமுதலியதேவர்களையும்அமராபதியையுங்காக்கும்படி வேலையனுப்பியகுமாரக்கடவுளினது திருச்செந்திற்பதியும் பூங்காவனமும் செங்கழுநீர்ச்சுனையும் அணித்தாயிருக்கின்றன பயப்படாதே-என்பதாம். (௰௩)

செந்திலகத்தலர் வாணுதல்வேடிச் சிமுகபங்க - - *
செந்திலகத்தலர் துண்டமென்றுநின்ற சேயசங்க - *
செந்திலகத்தல ராசிதந்தானைச் சிறையிட்டவேற் - *
செந்திலகத்தலர் தூற்றிடுங்கேள் துதிவாகருளே - - *

(இ-ள்) செம்-சிவந்த—திலகத்து-பொட்டினால்-அலர்ந்த- பரந்த—வாள்-ஒளிபொருந்திய—நுதல்- நெற்றியையுடைய—வேடிச்சி-வள்ளிநாயகியினது—முகம்- வதனம்—பங்கசெம்-தாமரையாகும்—திலகத்து-எள்ளினது—அலர்- பூ—துண்டம்-மூக்காகும்—என்றுநின்ற - என்றுநலம்புனைந்துரைக்கும்—சேய - குமாரக்கடவுளே—சங்க-கூட்டமாகிய—செந்து- சீவராசிகட்கு—இலக-இருப்பிடமான—தலராசிதந்தானை-அண்டங்களைப்படைத்த பிரமனை—சிறையிட்டவேல் - சிறைப்படுத்திய வேலாயுதத்தையுடைய—செந்தில்- செந்திற்பதியோனே—அகத்து- அகங்காரத்தினால்—அலர்தூற்றிடும் - அலர்தூற்றுகின்ற—கேள் - சுற்றத்தாரும்—துதி-(யாவரும்) துதிக்கத்தக்க—வாகு - உனதுபுயத்தை—அருள்-கிருபைசெய்யவேண்டும்—(எ-று)- நீ - தோன்றுவெழுவாய்-அருள்-பயனிலை-எ-அசை-(கருத்து) வள்ளிநாயாகியினது முகத்தைத் தாமரையென்றும்மூக்கைஎட்பூவென்றும் வியக்குங்குமாரக்கடவுளே பிரமனைச் சிறையிட்டசெந்திநாயகனே - சுற்றத்தார்மிகவும்அலர் தூற்றுகின்றார்கள்- (அதுநீங்க) உனதுதிருப்புயந் தந்தருளவேண்டும்—என்பதாம். (௰௪)

திவாகரகன்ன கொடைப்பாரியென்றுழ றீனவல்லீர் - *
திவாகரகன்ன புரக்குழைவல்லி செருக்குரவந் - - *
திவாகரகன்ன சுகவாசகதிறல் வேல்கொடென்புந் - *
திவாகரகன்ன மறலியிடாதுயிர்ச் சேவலுக்கே - - *

(இ-ள்) திவா-பகலிலே—கரகன்ன-கன்னனைப்போற் கொடுக்குங்கரத்தோனே—கொடைப்பாரி - வள்ளலைப்போற் கொடுக்குங்கொடையோனே—என்று- (புல்லரிடஞ்சென்றுசொல்லி) உழல்-வருந்தச்செய்யும்—தீன- வறுமையாகிய—அல்- இருளை—ஈர்- நீக்கும்—திவாகர - ஞானசூரியனே—கன்னபுரக்குழை - கன்னப்புரக்குழையென்னும்பணியணிந்த—வல்லி- வள்ளிநாயகி—செருக்

து-களிப்புறத்தழுவும்---உர- மார்பையுடையோனே---அந்தி-மாலையின் செவ்வானம்போலும்---வாகு-அழகையுடைய---அர- பரமசிவனது---கன்ன - திருச்செவிக்கு---சுகவாசக - இனியவசனமுபதேசித்தவனே---திறல்- வலிமையையுடைய---வேல்கொடு- வேலாயுதத்தைக்கொண்டு---என்-எனது---புந்தி- இருதயத்தில்---வர்-வரக்கடவாய்- -கர-ஒளித்துநின்று---கன்னமறலியிடாது-இயமனுனவன்கொள்ளைகொள்ளாமல்---உயிர்-என்னுயிரை---சேவனுக்கு-அவ்வுயிரைக்காப்பாற்றும் பொருட்டாக.---(எ-று) நீ-தோன்றுவெழுவாய்-வர-பயனிலை-வ-அசை. (கருத்து) வறுமையினால்பிறரிடத்துக்கொள்ளையிற்கல்லனே வள்ளலேயென்று புகழ்ந்திரப்பதையொழிக்கும் ஞானசூரியனே, வள்ளிநாயகிதழுவுமார்பனே, பரமசிவனுக்குபதேசித்தவனே, என்னுயிரை யமன்கைப்பற்றிக்கொள்ளாதபடியென்னைவந்துகாத்தருள் என்பதாம். (௰௫)

சேவற்கொடியும் பனிசாந்தகனுந் திருக்கரத்துச் - ✻
சேவற்கொடியுங் கொடிதுகண்டாய்தினை சூழ்புனத்துச் - ✻
சேவற்கொடியுந் திவளத்தவளுந் தந்திக்களபச் - ✻
சேவற்கொடியு முடையாய்பிரியினுஞ் சேரினுமே - ✻

(இ-ள்.) சேவற்கு- இடபவாகனத்தையுடையபரமசிவனால்---கொடியும்பல்- பல்லுதிர்க்கப்பட்ட---நிசாந்தகனும்- இருட்கூற்றாகிய ஆதித்தனும்---திருக்கரத்து- (உனது) அழகியகையினிடத்திலிருக்கின்ற---சேவற்கொடியும்- கொடியாகிய சேவலும்---கொடிதுகண்டாய் - பொல்லாதவைகளாயிருக்கின்றன---தினைசூழ் புனத்து- தினைநிறைந்தபுனத்தை---சேவல்-காப்பவளும்---கொடி-நீண்ட---உந்தி-கான்யாற்றின்---வளத்தவளும்- வளப்பத்தையுடையவளுமாகிய (வள்ளியம்மையையும்)--- தந்தி- ஐயிராவதம் வளர்த்த---களப- சந்தனமணிந்த---சே- சிவந்த --வல்- சொக்கட்டான்காய்போல்றகொங்கையையும்---கொடியும்- கொடிபோன்றவிடையையுமுடைய (தெய்வானையையும்)---உடையாய்- இருபாகத்துமவைத்திருக்கின்றகந்தசுவாமியே---பிரியினும் - உன்னைப்பிரிந்த(பகல்)காலத்தும்---சேரினும் - உன்னையடைந்த(இராக்) காலத்தும்(எ-று.) நிசாந்தகனும்- சேவற்கொடியும்---எழுவாய்-கொடிய- பயனிலை-ஏ-அசை- (கருத்து) வள்ளிநாயகியையுந் தெய்வானை நாயகியையு

முடையகந்தனே, உன்னைத்தழுவிய காலத்திரவுநீடியாமல் வே
கூவியும்-உன்னைப்பிரிந்தகாலத்து மாலை விரைந்துவராமல் ப
நீடித்தும் கொடுமைசெய்வனவாயிருக்கின்றன என்பதாம். (௰

சேரிக்குவடு மொழிவிழியாடனச் செவ்விகுறச் - - - -
சேரிக்குவடு விளைந்ததன்றேநன்று தெண்டிரைநீர் - - - *
சேரிக்குவடு கடைநாளினுஞ்சிதை வற்றசெவ்வேள் - - - *
சேரிக்குவடு புடைசூழ்புனத்திற் றினைவிளைவே - - - - *

(இ-ள்) சேர்-இசைந்த—இக்கு-கரும்பையும்—வடு- மாவடுவையும் (ஒத்த)—மொழிவிழியாள்-மொழியையும் விழியையுமுடைய வள்ளிநாயகியின்—தனச்செவ்வி - கொங்கையின்றன்மை—குறச்சேரிக்கு-குறவர்குடியிருப்புக்கு---வடு- (காந்தருவமணம் நடந்ததென்னும்)குற்றமாகிய சொல்லை---விளைந்தது-உண்டாக்கினது—அன்றே-அக்காலத்திற்றானே---நன்று- நன்றாயிருந்தது---தெண்டிரைநீர்-கடலனைத்தும்---சேரி-ஒருமித்து---கு-உலகத்தை-- அடு-அழிக்கின்ற---கடைநாளினும்- உகாந்தகாலத்தினும்- -சிதைவற்ற-அழிவில்லாத- -செவ்வேள்- குமாரக்கடவுளது---சேரி - (தென்சேரி வட)சேரியாகிய---குவடு-மலையின்---புடை-பக்கத்தில்-- சூழ்-சூழ்ந்த--புனத்தில்-தினைப்புனத்தில்--தினை சதினை---விளைவு-விளைவானது---(எ-று-) வடு-விளைவு-எழுவாய்-விளைந்தது- நன்று- பயனிலை- ஏ-அசை. (கருத்து.) குமாரக்கடவுளாளுகைக்குள்ளடங்கிய மலைப்பக்கத்திற் றினைநன்றாய்விளைந்தது-உடனே கன்னல்போன்மொழியும் மாவடுப்போல் விழியுமுடைய வள்ளிநாயகியின் யௌவனத்தால் குறவர்குடிக்கு வடுவிளைந்தது-என்பதாம். (௰௭)

தினைவேத்தியன்புசெய் வேந்தன்பதாம்புயத் திற்பத்திபுந் - *
தினைவேத்தியமுகந் தேற்றினர்மாற்றினர் பாற்றினந்தித் - *
தினைவேத்தியர்நெறி செல்லாதவிந்தியத் தித்தியினத் - - *
தினைவேத்தியங்குயிர் கூற்றூரினூசிடுஞ் சியுடம்பே - - - *

(இ-ள்.) தினை-தினைப்புனத்துக்கு---எத்தி-இறைவியாகிய வள்ளிநாயகி---அன்புசெய்-இச்சைகொள்ளும்---வேந்தன்- குமாரக்கடவுளது---பதாம்புயத்தில்-திருவடித்தாமரையில்---பத்தி-அன்பையும்---புந்தி-அறிவையும்---நைவேத்தியம் நைவேத்தியமாக---உகந்து-விரும்பி---ஏற்றினர்-(சமர்ப்பித்து) வணங்கின வடியார்கள்-

மாற்றினர்-(உண்மையாய்)ஒழித்துவிட்டார்கள்---பாற்றினம்-பரு ந்துக்கூட்டங்களும்---தீ-நெருப்பும்---தின்-பட்சிக்கத்தக்கதும்--- ஐ-அழகிய---வேத்தியர்-அறிஞோர்---நெறி-(விதித்த) நல்வழியில் ---செல்லாத-ஒழுகாததும்---இந்திய - பஞ்சேந்திரியவசத்ததும்--- இத்தியின்த்தின்-உணவுவகைகளினால்---நைவு-கழிவாகிய(மலசலாதி களை)---ஏந்து-ஏந்திக்கொண்டதும்---இயங்குயிர்- (உண்ணின்று) இயங்கும்பிராணனை---கூற்று-யமனானவன்---ஆரில்-உண்டுவிட்டா ல்---உவசிடும்- நாறிப்போகத்தக்கதுமாகிய---சீ- இகழ்ச்சிக்கிடமா ன---உடம்பு-தேகத்தை---(எ-று) ஏற்றினர்- எழுவாய்-மாற்றினர்- பயனிலை-ஏ-அசை-(கருத்து)வள்ளிநாயகிவிரும்பிய கந்தசுவாமியி னதுதிருவடித்தாமரையில் அன்பையும் அறிவையும் செலுத்தின வர்கள் பருந்துக்குந்திக்குமிரையாய்நெறியொழி யைம்புலனுகர் ச்சியையுடைய மலபாண்டமும் பிராணன்விட்டுப்பிரிந்தா னாறிப் போவதுமாகிய உடலையொழித்துவிடுவார்கள்- என்பதாம். (௰௮)

சீயனம்போதி யெனவாய்புதைத்துச் செவிதர்த்தோல் - - *
சீயனம்போதி யமலையிற்றுதை சிறுமுனிவன் - - *
சீயனம்போதி கடைந்தான்மருகன்செப் பத்திகைத்தார் - *
சீயனம்போதி லரனாதிருக்கென் செயக்கற்றதே - - *

(இ-ள்) சீயன்-பார்வதிபாகரானசிவன்---நம்-நம்மை---போதி- உபதேசி---என- என்று---வாய்புதைத்து - வாய்மூடி---செவிதர- கேட்கவும்---தோல்-யானையும்---சீய- சிங்கமும்---நம்பு- தஞ்சமா யுறைகின்றதும்---ஓதிய - கல்விக்குறைவிடமான---மலையிற்று தை-பொதியமலைக்குமுதல்வரான---சிறுமுனிவன் - அகத்தியமுனி க்கு---சீயன்-பாட்டனாகிய---அம்போதிகடைந்தான்- பாற்கடலைக் கடைந்தவிஷ்ணுவினது---மருகன்- மருமகனானகுமாரக்கடவுள்--- செப்ப - உபதேசிக்க---திகைத்தார் - (பிரணவப்பொருள்தெரியா மல்) தியக்கமுற்றிருந்தார்---சீ-இகழத்தக்க---அனம்பேர்திறல்-அன் னவாகனத்தின்மேற்செல்லும்---அரன்- பிரமன்---ஆதி- முதன்மை யாகிய---ருக்கு- வேதத்தை---என்-என்ன---செய-செய்யும்படி--- கற்றது-கற்றுக்கொண்டது,---(எ-று) அரன்- எழுவாய் - கற்றது- பயனிலை-ஏ-அசை. (கருத்து) பார்வதிபாகரான பரமசிவன் வாய்

மூடிக்கேட்கவும், திருமான்மருகனை குமாரக்கடவுள் பிரணவப் பொருளைச் சொல்லத்திகைத்துநின்ற பிரமா ஆதிவேதத்தை யேன் கற்றான்-என்பதாம். (௰௯)

செயதுங்கபத்திரி போற்றும்பகீர திகரசெவ்வேற் - - - *
செயதுங்கபத்திரி சூடுங்குறத்தி திறத்ததண்டஞ் - - - - *
செயதுங்கபத்திரி பத்திரிபாதத்தர் செல்வதென்பாற் - *
செயதுங்கபத்திரி யத்திரியாதிரொன் சிந்தையிலே - *

(இ-ள்.) செய-சிறந்த—துங்கபத்திரிபோற்றும் - துங்கபத்திரியென்னும்நதிவணங்குகின்ற—பகீரதிகர- கங்காதேவியின்கையிலிருப்பவனே—செவ்வேல்- சிவந்தவேலாயுதத்தையுடைய—செய- செயம்பொருந்தியகுமாரக்கடவுளே—துங்கபத்திரி- சுரப்புன்னையிலையை—சூடும்-புனைகின்ற—குறத்திதிறத்த - வள்ளிபங்காளனே—தண்டம்-தண்டாயுதமும்—செய - வெற்றியும்—துங்க - பெருமையும்—பத்தி-ஒழுக்கமுமுடைய—ரிபு-மாறுபட்ட (காலன்)—திரி-கெடும்படி (உதைத்த)—பாதத்தர்-திருவடியையுடைய பரமசிவன்—செல்வ-புதல்வனே—தென்பால்-தென்திசையில்—செய்-போகச்செய்வதாகிய—அதுங்கு - யாவருமொதுங்கும் — அபத்து-தீநெறியினால்—இரிய- எனதுசிந்தைமுறிந்தோட—திரியாது-உழலாமல்—இரு- நீதங்கியருளவேண்டும்—என்சிந்தையில் - என்மனதின்கண்ணே—(எ-று.) நீ-தோன்றுவெழுவாய்-இரு-பயனிலை. (கருத்து.) காங்கேயனே, வேலாயுதனே, வள்ளிநாயகனே, பரமசிவனதுமைந்தனே, யான் இடமதண்டனுடைய விளைக்குமவநெறியிற்சிக்காவண்ணம் என் சிந்தையில் வீற்றிருக்கவேண்டும் - என்பதாம். (௨௰)

சிந்தாகுலவரி சைப்பேருமூருநஞ் சீருமென்றோர் - - *
சிந்தாகுலவரி டத்தனுகாதரு டமதலை - - - *
சிந்தாகுலவரி மாயூரவீர செகமளப்பச் - - - *
சிந்தாகுலவரி மருகசூரனைச் செற்றவனே - - *

(இ-ள்.) சிந்தா-ஒருக்காலும் அழியமாட்டாதுகள்—குலவரிசைப்பேரும்-நமதுவமிசபாரம்பரைநாமமும்—ஊரும்- நமதுநகரமும்—நஞ்சீரும்-நமதுசிறப்பும்—என்றோர் - என்றெல்லானுகின்

று—சிந்தாகுலவரிடத்து-வருந்துமனத்தையுடைய அஞ்ஞானிகள்பால் — அணுகாதருள் - சேராதிருக்க வனுக்கிரகிக்கவேண்டும்—தீமதலை-அக்கினியிற்பிறந்தகோழியை—சிந்தா- கொடியாகக்கொண்டவனே—குலவு-பிரகாசிக்கின்ற—அரி - பச்சைநிறம்பொருந்திய—மாயூரவீர - மயிலேறுஞ்சேவகனே—சகம் - பூமியை—அளப்ப-அளக்கும்படி—சிந்தாகு-வாமனனாகி—உலவு-உலாவின—அரி-விஷ்ணுவின்—மருக-மருகனே—சூரனை-சூரனை— செற்றவனே-செயித்தவனே—(எ-று.) நீ-தோன்றாவெழுவாய் - அணுகாதருள்-பயனிலை. (கருத்து.) கோழிக்கொடியோனே, பச்சைமயில் வீரனே, வாமனாவதாரங்கொண்ட மான்மருகோனே, சூரசங்காரனே, லௌகிகவாழ்வை நித்தியமாய் நம்பி மனம் வருந்துவோர் பாற் சேராதிருக்கவெனக்கருள்செய்-என்பதாம். (௨௧)

செற்றைவரும்பழ னஞ்சோலையிஞ்சி திகழ்வரைமேற் - - *
செற்றைவரும்பழ னிக்கந்ததேற்றிடு நூற்றுவரைச் - - *
செற்றைவரும்பழ நாடாளநாடிகண் சேய்விடுத்த - *
செற்றைவரும்பழ மாங்கூடுவேமத்தி னத்தில்வந்தே - *

(இ-ள்.) செற்றை-செற்றையென்னுமீனினம்—வரும்-உலாவுகின்ற—பழனம்-வயலும்—சோலை-பொழிலும்—இஞ்சி- மதிலும்—திகழ்-விளங்காநின்ற—வரைமேல் - பருவதத்தின்மேல்—செல்-மேகம்—ஐவரும்-தவழுகின்ற—பழனிக்கந்த - பழனிமலைக்கந்தனே—தேற்றிடு-அபயந்தந்தருள்வாய்—நூற்றுவரை - துரியோதனன்முதலிய நூறுபேரையும்—செற்று-கொன்று—ஐவரும்-பாண்டவர்கள்—பழநாடு- பழையராச்சியத்தை—ஆள - ஆளும்படி—நாடி-கருதியகிருஷ்ணமூர்த்தியினது—கண்-விழியாகிய (ஆதித்தன்)—சேய்-மைந்தனாகியகாலன் — விடுத்த- அனுப்பிய—செற்றைவரும்-தூதர்கூட்டம்வரும்—பழமாங்கூடு-வார்த்திகத்தையடைகின்றவிவ்வுடலானது—வேம்-பிராணனீங்கித்தகிக்கப்படுகின்ற—அத்தினத்தில்வந்து-அன்றுனியெழுந்தருளிவந்து—(எ-று.)நீ-தோன்றாவெழுவாய்-தேற்றிடு-பயனிலை ஏ-அசை. (கருத்து.) பழனிமலையாதிபனே, விஷ்ணுவின்விழியாகிய சூரியனது மைந்தனாகியகாலன்விடுத்ததூதர்கூட்டம்வரும்புழுக்கூரம்பையாகிய என்னுடலழியுங்கால் நீயெழுந்தருளிவந்து அபயந்தந்தருள்-என்பதாம் (௨௨)

தினகராக்கர தங்கெடுத்தார்குரு தேசிகர்செந் - - *
தினகராக்கர மாறுடையார்தெய்வ வாரணத்தந் - - *
தினகராக்கர சத்தியின்றெனிலத் தேவர்நண்ப - - *
தினகராக்கர தந்திர்வரீர்வர் செகமெங்குமே - - *

(இ-ள்.) தினகர-பகல்பூடாவென்னு மிரண்டாதித்தர்களுடைய---அக்க-கண்ணையும்---ரதம்-பல்லையும்---கெடுத்தார்- அழித்தபரமசிவனுக்கு --- குருதேசிகர் - போதகாசிரியரும் --- செந்தினகரார்- செந்திற்பதியினரும்--அக்கரமாறுடையார்-சடாக்ஷரப்பொருளானவரும்---தெய்வ-தெய்வீகமாகிய---ஆரண- வேதம்பூசித்த---தந்தி-பாம்புபோன்றபிரகாரத்தையுடைய---நகர்-திருச்செங்கோட்டுமலையையுடையவருமாகிய (கந்தசுவாமி)யினது---அர- அரத்தாற்கூர்மையிட்ட---கர- திருக்கையிற்றரித்த---சத்தி - வேலாயுதமானது---இன்றெனில்-இல்லாவிட்டால்---அத்தேவர்நண்பதி- அத்தேவர்கள்பொருந்தியபொன்னகரமும்—ந- இல்லாமற்போவதுமன்றி—கர-வஞ்சகநிறைந்த—ரக்கர்-அசுரரும்—அதந்திர்வர்-இறப்புமொழிவார்கள்—ஈர்வர்செகமெங்கும்- உலகமுழுவதையும் நிர்மூலமாக்கியும்விடுவார்கள்—(எ-று.) அரக்கர்-எழுவாய்- அதந்திர்வர்- ஈர்வரீ-பயனிலை- ஏ-அசை, (கருத்து.) பரமசிவனுக்குக்குருவாய் செந்தூரில்வாழும் சடாக்ஷரப்பொருளாகிய திருச்செங்கோட்டுமலையையுடைய கந்தசுவாமியினது திருக்கைவேலெழுந்தருளாவிடில் அமராபதி யழிந்துபோவதுமன்றி அசுரரும் ஸ்திரமாயிருந்து உலகமுழுவதையு நாசஞ்செய்துவிடுவார்கள்- என்பதாம். (௨௫)

செகம்புரவார்கிளை யெல்லாமருண்டு திரண்டுகொண்ட - *
செகம்புரவாதிங்ஙன் செய்வதென்றேமயல் செய்யவன்பு - *
செகம்புரவாச மெனத்துயில்வார்செப்ப பங்கபங்க - *
செகம்புரவாமுரல் செத்தாரவென்னத் தெளிதருமே - *

(இ-ள்.) செகம்-உலகத்திலும்—புர-ஊரிலுமுள்ள—வார்- ஒழுங்கான—கிளையெல்லாம்-சுற்றத்தாரெல்லாரும்—மருண்டு- மயங்கி—திரண்டுகொண்டு-கூடிக்கொண்டு—அகெ- ஆட்டினுடைய—கம்-தலையை—புரவாது-காப்பாற்றாமல்—இங்ஙன் - இவ்விடத்தில் —செய்வதென்றே- வெறியாடற்செய்ய நினைப்பதென்ன விபரீத

ம்—மயல்-(கைக்கிளையாகமயங்கியவிட்டமாதின்)விரகதாபம்—செய்ய-சிவந்த—வன்-வலிய—புசகம்- ஆதிசேடனை—புரவாசமென-ஆதியானவிடமாய்க்கொண்டு—துயில்வார்-திருக்கண்வளர்கின்றதிருமால்—செப்பு-புகழ்கின்ற—அபங்க-பங்கமிலாதவனே—பங்கசெ-தாமரைத்தடாகத்தில்—கம்பு-சங்கினங்கள்—உரவா-உரக்க—முரல்-சப்திக்கின்ற—செந்தூர-திருச்செந்திற்பதியோனே—என்ன-என்றுசொல்லில்—தெளிதரும்-(அக்ஷணமே)தீர்ந்துவிடுவதுநிச்சயம்—(எ-று.) மயல்-எழுவாய்- தெளிந்திடும்- பயனிலை-ஏ-அசை. (கருத்து.) புத்தகளெல்லாரும் மயங்கி வினையாட்டைப்பலியிடுவதா லிவள்மையல்தணியுமோ (தணியாது) திருமால் புகழத்தக்க மாசற்றவனே-செந்தூரானேயென்று சொல்லிற்றணிந்திடும்-என்பதாம். (உ௪)

தெளிதருமுத்தமிழ் வேதத்திற்றெய்வப் பலகையின்கீழ் - *
தெளிதருமுத்தமி ழாநித்தர்சேவித்து நின்றதென்னாள் - *
தெளிதருமுத்தமிழ் தேய்நகைவாசகச் செல்விதினைத் - *
தெளிதருமுத்தமிழ் செவ்வேளிருப்பச் செவிகுனித்தே - *

(இ-ள்.) தெளிதரு-ஆராயப்படுகின்ற—முத்தமிழ்-இயல்-இசை-நாடகம்- எனும் முத்தமிழிலும்— வேதத்தில்- வேதத்திலும்—தெய்வப்பலகையின்கீழ் - தெய்வத்தன்மையான சங்கப்பலகையிலும்—தெளி-மாசற்ற—தரு - குற்றுவின்கீழும்—முத்து-முந்தியிருந்தருளுகின்ற—அமிழா நித்தர்- அழிவில்லாதநித்தியராகியபரமசிவன்—சேவித்துநின்றதென் - பணிந்துநின்ற காரணமென்ன—நாள்-நக்ஷத்திரம்(போல)—தெளிதரு-பிரகாசிக்கும்—முத்து-முத்தையும்—அமிழ்து-தேவாமுதத்தையும்—ஏய்-ஒத்த—நகை-பல்லையும்—வாசக- சொல்லையுமுடைய—செல்வி- மங்கையாகிய—தினை-தினையை—தெளி-கொழிக்கின்றவள்ளிநாயகியார்—தருமுத்து-கொடுக்குமுத்தத்தினால்— அமிழ்- ஆநந்தத்திலாழ்ந்தவராகிய—செவ்வேள்-முருகவேளானவர்—இருப்ப- எழுந்தருளியுபதேசிக்க—செவிகுனித்து-செவியைத்தாழ்த்திக்கொண்டு—(எ-று.) நித்தர்-எழுவாய்- சேவித்துநின்றதென்-பயனிலை- ஏ-அசை. (கருத்து.) வள்ளிநாயகியின் முத்தத்தால்மகிழும் குமாரவேளிருந்துபதேசிக்க முத்தமிழிலும் வேதத்திலும் சங்கப்பலகையிலும் குற்றுவின்

கீழ் முதல்வராயிருக்கிற நித்தியரானபரமசிவன் பணிவோடுநின்று
கேட்டதென்னகாரணம்-என்பதாம். (௨௫)

செவிக்குன்றவாரண நல்கிசைபூட்டவன் சிந்தையம்பு - - *
செவிக்குன்றவாரண மஞ்சலென்றாண்டது நீண்டகன்மச் - *
செவிக்குன்றவாரண வேலாயுதஞ்செற்ற துற்றனகட் - - *
செவிக்குன்றவாரண வள்ளிபொற்றாண்மற்றென் றேடுவதே *

(இ-ள்.) செவிக்கு-என்காதுக்கு—உன்-உனது—தவா- தவிராத
—ரண-உரிமையை—நல்கு-கொடுக்கும்—இசை - கீர்த்தியை—பூ
ட்ட-அணிய—வன்-வலிய—சிந்தை-(என்) இருதயமாகிய—அம்பு
செ-தாமரையிலிருக்கும்—வி-பட்சியாகியவான்மா—குன்ற- வரு
ந்துகையில்—வாரணம்-நின்கோழிக்கொடியெழுந்தருளி—அஞ்ச
லென்று-பயப்படாதேயென்று—ஆண்டது-அடிமைகொண்டது
—நீண்டகன்ம-பெரிதானமுன்செய்வினையாலாகும்—செ- சென
னத்துக்குவித்தாகிய—இக்குன்று-இம்மலைபோன்ற-- அவா-ஆசை
யை—ரண-அமர்புரியும்—வேலாயுதம்- அயிலானது—செற்றது-
கொன்றுவிட்டது—உற்றனை-என்சென்னிமேலேவீற்றிருந்ததுகள்
—கட்செவி - பாம்புபோன்ற — குன்ற - திருச்செங்கோட்டுமலை
யையுடையகந்தசுவாமியே--வாரண-தெய்வயானை—வள்ளி-வள்ளி
யாகியநாயகிமாருடைய—பொற்றாள் - பொன்னடிகள்—மற்றெ
ன்றேடுவது- இனிநான்சம்பாதிக்கவேண்டியது வேறென்ன விருக்
கின்றது—(எ-று)யான்-தோன்றுவெழுவாய்- தேடுவதென்-பயனி
லை-ஏ-அசை- (கருத்து.) நாகமலையில்வாழுங் கந்தசுவாமியே-யுன்
திருப்புகழையான்கேட்டமாத்திரத்தில்நினது கோழிக்கொடி
யென்னைத்துமாரவைஅபயங் கொடுத்தாண்டுகொண்டது - உன்வே
லாயுதம்பிறப்புக்கிடமான பேராசையையொழித்துவிட்டது-உன்
றேவிமாரது திருவடியுங்கிடைத்ததினியான் றேடவேண்டியதென்
னவிருக்கின்றது-என்பதாம். (௨௬)

தேடிக்கொடும்படை கைக்கூற்றடாதுளஞ் சேவின்மைமீன் - *
தேடிக்கொடும்படை கோமான்சிறைபட வேறுளபுத் - *
தேடிக்கொடும்படை யாவெகுநாட்டன் சிறைகளையுந் - *
தேடிக்கொடும்படை மின்கேள்வனற்றுணை சிக்கெனவே - *

(இ-ள்.) தேடிக்கொள்-இப்பொழுதேசம்பாதித்துக்கொள்வாயா க—தாம்பு-பாசத்தை—அடை-பொருந்திய—கை-கையையுடைய—கூற்று-இயமன்—அடாது-அழிக்காதபடி—உளம்-நெஞ்சமே—செ-இடபம்—வில்-தனுசு—மை-மேஷம்—மீன்-மீனம்—தேள்-விருச்சிகமென்னுமிராசிகளையும்—திக்கொடும்-திக்குகளையும்—படை-சிருட்டித்த—கோமான்-பிரமதேவனை—சிறைபட-சிறைப்படுத்தி—வேறுளபுத்தேள்-மற்றைத்தேவராது—தி-புத்தியில்—கொடும்பு-திருகுதலை—அடையா-சேராத—வெகுநாட்டன்-ஆயிரங்கண்களையுடையவிந்திரனது—சிறை-சிறையை—களை-ஒழித்தவரும்—உந்து-தீரினும் (நெருப்பிலும்) சமணர்செலுத்திய—ஏடு-(ஏடு) களையும்—இக்கொடும்-அவர்கள்செய்தகொடுமைகளையும்—படு-தாழ்த்திவிட்ட—ஐ-சுவாமியாகிய—மின்கேள்வன்-தெய்வயானை நாயகனது—நற்றுணை-நல்லனுக்கிரகத்தை—சிக்கெனவே-உறுதியாக—(எ-று.) நீ-தோன்றுவெழுவாய்-தேடிக்கொள்-பயனிலை-ஏ-அசை-(கருத்து) நெஞ்சமே பாசதரனாகிய யமனுன்னை நலிவு செய்யாதபடி பிரமாவைச்சிறைப்படுத்தி இந்திரனைச்சிறைதவிர்த்துச்சமணரிட்டஏட்டையும் வாதையுஞ்செயித்தகுமாரக்கடவுளது துணையை உறுதியாகச்சம்பாதித்துக் கொள்-என்பதாம். (உஎ)

சிக்குறத்தத்தை வழங்காதிழந்து தியங்குவதே - *
சிக்குறத்தத்தை வடிவேலெனூர்சில ரன்பர்செந்தாள் - *
சிக்குறத்தத்தை கடிந்தேனல்காக்குஞ் சிறுமிகுறிஞ் - *
சிக்குறத்தத்தை யணகிலெப்போதுந் திகழ்புயனே - - *

(இ-ள்.) சி-இகழ்தற்கிடமாகிய—குறு-குறைவுபடத்தக்க—அத்தத்தை-பொருளை—வழங்காது-நல்வழியிற்செலுத்தாமல்—இழந்து-பலவழியாயிழந்து—தியங்குவர்-வருந்துவார்கள்—தேசு-(தங்களுடைய) கீர்த்தியும்—இக்குற-மங்கிப்போகும்படியாய்—தத்து-பொங்குமுற்ற—ஐ-அழகிய—வடிவேலெனூர்சிலர்-கூரிய வேலாயுதமென்றுதுதியாதசிலபேர்கள்—அன்பர்-அவ்வேலைத்துதிக்குமடியார்கள்—செந்தாள்-உனது செவ்வியதிருவடியை—சிக்குற-அகலாதுறையக்கண்டும்—தத்தைகடிந்து-கிளியோட்டி—ஏனல்காக்கும்-தினைப்புனங்காக்கும்—சிறுமி-சிறுமியாகிய—குறிஞ்சிக்குறத்து-மலைநிலத்துக்குறவரிடம்வளர்ந்த—அத்தையல்-அ

ந்தவள்ளிநாயகியினது—நகில் - கொங்கைச்சுவட்டால்—எப்போதும்-சதாகாலமும்—திகழ்புயனே- பிரகாசிக்கின்றபுயத்தையுடைய குமாரக்கடவுளே (எ-று.) சிலர்-எழுவாய்-இயங்குவர்-பயனிலை (கருத்து.) வள்ளிநாயகியினது கொங்கைச்சுவடுதிகழும்புயத்தோனே அன்புற்றவர்களுனது திருவடியிலகலாதுறைதலைக்கண்டும் சிலருனதுவேலாயுதத்தைத்துதியாமல் அநித்தியமான கைப்பொருளையுமிழந்துவறுமையால்வருந்துகின்றார்கள் என்பதாம். (உஅ)

திகழுமலங்கற் கழல்பணிவார்சொற் படிசெய்யவோ - *
திகழுமலங்கற் பகவூர்செருத்தணி செப்பிவெண்பூ - *
திகழுமலங்கற் பருளுமென்றுவமண் சேனையுபா - *
திகழுமலங்கற் குளாத்தோனலதில்லை தெய்வங்களே - *

(இ-ள்.) திகழும்-விளங்காநின்ற—அலங்கல்-மாலையையணிந்த—கழல் தனதுதிருவடியை—பணிவார்- வணங்குவோர்—சொற்படி செய்ய-திருவாக்கின்படிநடக்க—ஓதி-தமிழ்வேதமென்னுந்தேவாரத்தைமொழிந்தருளினவரும்—கழுமலம்- தானவதாரஞ்செய்தசீகாழியையும்—கற்பகவூர் - தான்காத்தருளியகற்பகத்தருவையுடைய அமராபதியையும்—செருத்தணி- தானுறையுந்திருத்தணியையும்—செப்பி - துதிசெய்து—வெண்பூதி- திருவெண்ணீறனது—கழும்-போக்கடிக்கும்—மலம்-மும்மலத்தையும்—கற்பு-பரம்பொருளிதேயென்றநம்புங்கற்புடைமையை—அருளும்- கொடுத்தருளும்—என்று-என்றுநினையாத—அமண்-சமணர்—சேனை- கூட்டங்களை—உபாதி- வருத்தமான—கழு- கழுவிலேற்றி—மலங்கற்கு- கலக்கமுற்றழியும்படிக்கு — உளாத்தோனலது - வாதுமொழிந்த சம்பந்தப்பிள்ளையுமாகியகுமாரக்கடவுளையன்றி—இல்லைதெய்வங்களே - பிரத்திக்ஷமான தெய்வங்கள்வேறில்லை.—(எ-று.) தெய்வங்கள் எழுவாய்-இல்லை-பயனிலை-ஏ-அசை (கருத்து.) தன்னடித்தொண்டர்க்குநல்னெறியாக தேவாரத்தைமொழிந்தருளினவரும் திவ்வியஸ்தலங்களைத்துதியாமலும்திருநீற்றுமகத்துவத்தைக்கைக்கொள்ளாமலுமிருந்தசமணர்கள் கழுவேறும்படி வாதினால் வென்றவருமாகியசம்பந்தாவதாரங்கொண்ட குமாரக்கடவுளையன்றிவேறு தெய்வமில்லையென்பதாம். (உகூ)

12876



தெய்வமணம்புணர் தீகால்வெளிசெய்த தேவரைந்த
தெய்வமணம்புண ராரிக்குமருக செச்சையந்தார்
தெய்வமணம்புணருங்குழலாளைத் தினைப்புனத்தே
தெய்வமணம்புணர் கந்தனென்னீருங்க டீதறவே

(இ-ள்.) தெய்வ-தேவர்களையும்—மண்-பூமியையும்—அம்பு-சலத்தையும்—உணர்-அறிவையும்—தீ-நெருப்பையும்—கால்-காற்றையும்—வெளி-ஆகாசத்தையும்—செய்த-படைத்த—தே-பிரமாவானவன்—வரைந்தது-பொறித்தலிபியை-எய்வ-(குமாரக்கடவுளினது நாமகீர்த்தனமானது) செயிக்குமாதலால்—மண்-மாசற்ற—அம்-அழகிய—புள்-கருடவாகனத்தையுடைய—நராரிக்கு-நரசிங்கஅவதாரமெடுத்ததிருமாற்கு—மருக-மருகோனே—செச்சையந்தார்-அழகியவெட்சிமாலையையணிந்த—தெய்வ-கடவுளே—மணம்புணரும்-வாசனையையணிந்த—குழலாளை-கூந்தலையுடைய (வள்ளி) நாயகியை—தினைப்புனத்தே-தினைப்புனத்திலே—தெய்வமணம்புணர்-காந்தருவமணமாகப்புணர்ந்த—கந்தன்-குமாரக்கடவுளே—என்னீர்-என்றுதோத்திரம்பண்ணுங்கள்—உங்கள்-உங்களுடைய—தீது-வினை—அற-ஒழியும்படி.—(எ-று.) நீர்-தோன்றுவெழுவாய்-என்னீர்-பயனிலை-ஏ-அசை (கருத்து.) திருமான்மருகோனேவெட்சிமாலையையணிந்தோனே-வள்ளிநாயகியைத்தினைப்புனத்தின் மணந்த கந்தசுவாமியேயென்று துதித்தாலது பஞ்சபூதமுதலானவற்றைப்படைத்த பிரமாவின் விதியையு நீக்குமாதலாலுங்கள்தீவினையறும்பொருட்டு அப்படித் துதியுங்கள்-என்பதாம். (௩௰)

தீதாவசவ னுபவிக்கமண்ணிலும் விண்ணிலுஞ்செந்
தீதாவசவ னியாஞ்செய்வேதிய ரோதியங்காத்
தீதாவசவ னிமலர்செல்வாசாக் கிரவசத்த
தீதாவசவன் புறப்பாரொணுமுத்தி சித்திக்கவே

(இ-ள்.) தீதா-பொல்லாங்காகிய—வசவு-இகட்சிச்சொல்லை—அனுபவிக்க-அனுபவித்தற்கிடமாய்—மண்ணிலும்-பூலோகத்திலும்—விண்ணிலும்-தேவலோகத்திலும்—புகழையும்-போகத்தையும்பெறநினைத்து—செந்தி-சிவந்தவக்கினிபகவான்—தாவ-ஏறுகின்

ற—அச-ஆட்டை—அனியாயஞ்செய்-சிவகாருணியமில்லாமல் வதைத்துயாகஞ்செய்கின்ற—வேதியரே- மறையோரே—இயங்கா- இனியப்படித்திகைக்காத—தீ-நல்லறிவை—தா-தந்தருள்வாயென்றும்—விசவ-இடபவாகனத்தையுடைய—நிமலர்-பரமசிவனது—செல்வா-மைந்தனே—சாக்கிரவசத்து- ஆன்மாசாக்கிரவவத்தையிலறிவோடிருக்கிறகாலத்திலும்—அதிதா- துரியாதீதவவத்தையிற்கருவிகரணங்களொடுங்கி—வச-வசமாகுங்காலத்திலும்—அன்புறப்பாரெனும்- உனக்கெங்களிடத்திலன்புண்டாகி கடாக்ஷிக்கவேண்டுமென்றுந் துதியுங்கள்—முத்தி-மோக்ஷமானது—சித்திக்க - உங்களுக்குக்கிடைக்கும்படி.—(எ-று.) நீங்கள் தோன்றுமெழுவாய்-துதியுங்கள்-பயனிலை-ஏ-அசை-(கருத்து.) இம்மையிற்புகழையும் மறுமையிற்போகத்தையும் பெறநினைத்து பழிக்கஞ்சாமல் சீவனைக்கொன்று வேள்விசெய்கின்ற மறையோரே முத்திவேண்டுமானால் பரமசிவனது மைந்தனே- சாக்கிரவவத்தையிலும் துரியாதீதத்திலும் எங்களுக்கு நல்லறிவுண்டாக அன்புவைத்தருளென்று துதியுங்கள்-என்பதாம். (௩௧)

சித்திக்கத்தத்து வருத்திரபாலக செச்சைகுறிஞ் - - *
சித்திக்கத்தத்து வரத்தியின்மாவென்ற சேவகவிச் - - *
சித்திக்கத்தத்து வர்வாய்மொழிமாதர்க் கெனுந்திணைவா - *
சித்திக்கத்தத்து வருத்தப்படாதநற் சேதனமே - - *

(இ-ள்.) சித்திக்க- அடியேனுக்குக்கிடைக்கவருளவேண்டும்—தத்துவ-தத்துவசொரூபியே—ருத்திரபாலக-சிவனதுமைந்தனே—செச்சை-வெட்சிமாலையணிந்த—குறிஞ்சித்திக்க - குறிஞ்சிநிலத்திசைக்கிறைவனே—தத்து- அலைமோதுகின்ற—உவர்- உவர்ப்பையுடைய—அத்தியில்-சமுத்திரத்தின்கண்—மா-மாவுருக்கொண்டசூரனை—வென்ற-செயித்த—சேவக-வீரனே—இச்சித்து- விரும்பி—இக்கத்து-கரும்பும்—அத்துவர்-அந்தசிவந்தபவளமும்—வாய்-வாயும்—மொழி- மொழியுமாகும்—மாதர்க்கு- மடவார்க்கு—எனுந்திணை-என்றுதலம்புனைந்துலாக்குங்காமநூலை—வாசித்து - ஒழியாமற்படித்து—இக்கத்தத்து - இதற்கினமானவெகுளியினும்—வருத்தப்படாது-துன்பமடையாது—நற்சேதனம்- நல்லஞானவறிவு—(எ-று.) நீ-தோன்றாவெழுவாய்-சித்திக்கவருளவேண்டும்- பயனி

லை-எ-அசை (கருத்து.) தத்துவசொரூபியே-சிவனதுபுத்திரனே-குறிஞ்சி நிலத்திறைவனே - சமுத்திரத்தின்கண் சூரனை வதைத்தவனே-மாதராது சொல்லைக் கரும்பென்றும்- வாயைப்பவளமென்றும்-நலம்பாராட்டும் காமநூலின்வாஞ்சையையும்-வெகுளியையும் விட்டு உன்னையறியும் நல்லறிவை-என்க்குக் கிருபைசெய்யவேண்டும்-என்பதாம். (௬௨)

சேதனந்தந்துறை யென்றுமைசெப்புங் குருந்துறைகாற் - *
சேதனந்தந்துறை யல்லிமன்வாவிச்செந் தூர்கருத - *
சேதனந்தந்துறை யென்றறியார்திற நீங்கி நெஞ்சே - *
சேதனந்தந்துறை மற்றுமுற்றுடித் திரிகைவிட்டே - *

(இ-ள்.) சே-அழகிய—தனந்தந்து-திருமுலைப்பாலூட்டி—உறு-பெரும்பேறுயுற்ற—ஐயென்று- ஐயனேயென்று—உமைசெப்பும்-பார்வதியருமையாய்மொழியும்—குருந்து-பாலகனாகிய குமாரக்கடவுள்—உறை-அமர்ந்தருளிய—காற்சேது-சிவந்தகாலையுடைய—அனம்-அன்னங்களும்—தந்துறை-நூலோடுகூடிய—அல்லி-ஆம்பல்களும்—மன்-அகலாதிருக்கின்ற—வாவி-தடாகங்கள்சூழ்ந்த—செந்தூர்-திருச்செந்திற்பதியை—கருது- நீசிந்தைசெய்—அசேதனம்-அறிவின்மையான—தம்- தங்கள்தங்கள்—துறையென்று-சமயக்கோட்பாடென்று—அறியார்திறநீங்கி- தெளியாமலுழலும் பரசமயவாதிகளின்கூட்டத்தைநீங்கி—நெஞ்சே-மனமே—சேது-சேதுமுதலிய—அனந்தந்துறைமற்றும்-மற்றநேக கடல்நதிகளையும்—உற்றுடித்திரிகைவிட்டு - போய்ப்போய்த்தானஞ்செய்தலைவதைவிடுத்து.—(எ-று.) நீ - தோன்றுவெருவாய்—கருது- பயனிலை-வ-அசை- (கருத்து.) நெஞ்சமேபரசமயவாதிகளோடிணங்காமல் சேதுமுதலியதீர்த்தங்களாடக்கருது மனதைவிட்டுப் பார்வதி திருமுலைப்பாலுண்ட குமாரக்கடவுள் வாசஞ்செய்கின்ற திருச்செந்தூரையேநாடுக-என்பதாம். (௬௩)

திரிகையிலாயிர வெல்லாழிமண்விண் டருகிடபாத் *
திரிகையிலாயிர வானந்தநாடகி சேர்மகோத் *
திரிகையிலாயிர மிக்குமைந்தாசெந்தி லாயொருகால் *
திரிகையிலாயிரக் கோடிகற்றுடுந் திருக்குளமே *

(இ-ள்.) திரிகையிலாய்-மாறுபடாதநித்தியனே—இரவு-இராத்
திரியையும்—எல்-பகலையும்—ஆழி- கடலையும்—மன் - பூமியையு
ம்—விண் - ஆகாசத்தையும்—தரு - மூவரின்முதல்வனாயிருந்து
சிருஷ்டித்தவரும்—சிரயாத்திரி-பிரமகபாலத்தைப் பலிக்கலமாக
க்கொண்டவரும்—கயிலாயி-கயிலாசத்தையுடையவரும்—ரவு-ஆ
ரவாரத்தையுடைய—ஆனந்தநாடகி- ஆனந்தநடனஞ்செய்கின்ற
பரமசிவனுக்கும்—சேர்-அவர்பாலிருக்கின்ற—இமகோத்திரி- இ
மயமலையின்—கையில் இடத்திலுற்பவித்துவளர்ந்த—ஆயி - பார்
வதிக்கும்—ரமிக்கும்-மகிழ்வைவிளைக்கும்—மைந்தா- புதல்வனே
—செந்திலாய்-திருச்செந்திற்பதியோனே—ஒருகால்-ஒருதரம்—
திரிகையில் - குலாலன்சக்கரஞ்சுற்றிவருவதற்குள்—ஆயிரக்கோடி
சுற்றேறும் - ஆயிரங்கோடி-தரஞ்சுற்றிவருவதாகிய—திருத்துளம்-
(என்னுடைய) மனதைத்திருத்தியருளவேண்டும்--(எ-று.) நீ-தோ
ன்றுவெழுவாய்-திருத்து-பயனிலை-ஏ-அசை. (கருத்து.)நித்தியமா
னவனே-சராசரங்களைப்படைத்தும் பிரமகபாலமேந்தியும் ஆன
ந்தநடனஞ்செய்து கயிலாசத்திலுறைகின்ற- பரமசிவனுக்கும்-இ
மயமலையின் குமாரியாகிய பார்வதிக்குமைந்தனே-திருச்செந்திற்
பதியோனே- என்னுள்ளமானது குலாலன்சக்கரமொருதரம்சுற்
றுவதற்குள் - அனேககோடிதரம் சுற்றிவருகின்றது அதையடக்கி
யருளவேண்டும்-என்பதாம். (௩௪)

திருத்துளவாரிகல் போதுடன்சேன்மழை தூங்குஞ்சங்க - *
திருத்துளவாரிதி கண்டுயிலாதிசெ யன்மாண்டசிந்தை - - *
திருத்துளவாரன்னை செந்தூரையன்னள்செம் மேனியெம்பு- *
திருத்துளவார்சடை யீசர்மைந்தாவினிச் செச்சைநல்கே - *

(இ-ள்)திருத்துளவார் திருத்துழாய்மாலையையணிந்த விஷ்ணு
வினது—இகல்-கரியநிறத்தைப்பகைக்கின்ற—போதுடல்- மாலை
க்காலத்தோடு—சேண்- ஆகாசத்தினின்றும்— மழைதூங்கும்- ம
ழைபெய்கிறது—சங்கது-சங்கினங்களை—இருத்துள- உடையதா
யிடமகன்ற—வாரிதி-சமுத்திரம்---கண்டுயிலாது- ஓயாமல்முழங்
குகின்றது---இசெயன்மாண்டசிந்தை- இந்தவிரகதாபத்தினால்மெ
ய்மறந்துகிடக்கின்றவென்மனதை— திருத்து- ஆற்றுதற்கு---உள-
உரியவர்--ஆர்-யார்---அன்னை-தாயும்-- செந்தூராயன்னள்-பகை

யாகியசெந்திற்பதியை யொத்திருக்கின்றன்---செம்-சிவந்த---மேனி-திருமேனியில்---என்பு-எலும்பையும்---உதிருத்தள-உதிரத்தக்க திருநீற்றுப் பொடியையுமுடைய---வார்-நீண்ட---சடை-சடாபாரத்தையுமுடைய---ஈசர்-பரமசிவனது--மைந்தா-புதல்வனே---இனி-இனிமேல்சகிக்கப்படாதாதலால்---செச்சை-உனதுவெட்சிமாலையை---நன்று-எனக்களித்தருளவேண்டியது---(எ-று.)நீதோன்றுவெழுவாய் நல்கு-பயனிலை-ஏ-அசை-(கருத்து.) திருமேனியில் நீறும்எலும்பு மணிந்த நீண்டசடாபாரத்தையுமுடைய பரமசிவனதுமைந்தனே-கார்காலமும் மாலைப்போதும் ஒத்திருக்கின்றன-சமுத்திரமுமுழங்குகின்றது என்னைத்தேற்றுபவரியாவர்அன்னையும்பகையாயிருக்கின்றனள்- ஆதலாலினிச்சகிக்கமுடியாது உனதுவெட்சிமாலையைத்தந்தருளவேண்டும்-என்பதாம். (௩௰)

செச்சையவாவி கலயில்வல்வாயிடைச் சேடனிற்கச் - *
செச்சையவாவி பருகுஞ்சிகாவல செங்கைவெந்தீ - - *
செச்சையவாவி விடுகெனுஞ்செல்வநின் றாளணுகச் - *
செச்சையவாவி னுயிர்வாழ்வினியலஞ் சீர்ப்பினுமே - *

(இ-ள்.) செச்சைய-வெட்சிமாலையையுடையோனே—வாவு-தாவுதலையும்—இகல்-பகைமையையும்—அயில்-கூர்மைபொருந்திய—வல்-வலிய—வாயிடை-வாயினிடத்தில்—சேடன்-பாம்பு—நிற்க-இருக்க—சே-சிவந்த—ஐய-மலையின்கண்—ஆவி-அதனுயிரை—பருகும்-உண்ணுகின்ற—சிகாவல-மயில்வாகனனே—செம்-சிவந்த—கை-கரகத்தினிலேந்தி—வெம்-வெவ்விய—தீ-அனற்பொறியை—செச்சைய-ஆட்டுவாகனத்தையுடைய வக்கினிதேவனே—வாவி-சரவணப்பொய்கையில்—விடுகெனும்-(பரமசிவன்)கொண்டுபோய்விடுகெனவதிலுற்பவித்த—செல்வ-பாலகனே—நின்றாள்-உன்னுடையதிருவடிகளை—அணுகச்சே-நாங்களடையக்கிருபைசெய்—சை-இகழ்தற்கிடமான—அவாவின்-ஐம்புலவாசையால்—உயிர்வாழ்வு-உயிரோடுவாழ்வதை—இனியலம்-இனியுண்டேயமல்லேம்—சீர்ப்பினும்-செல்வமதிகரிக்கினும்—(எ-று) நீ-தோன்றுவெழுவாய்-அணுகச்செய்-பயனிலை-ஏ-அசை-(கருத்து)வெட்சிமாலையுடையவனே-பாம்பினுயிரையுண்ணுமயில்வாகனனே-பரமசிவனிடத்திலனற்பொறியாய்த்தோன்றி வக்கினிதேவனாற்சரவணப்

பொய்கையில் விடப்பட்டதில் வளர்ந்தபாலகனே- இனி நாங்களும் இருந்தசெல்வமடையினு மவ்வாசையிலழுந்தி யுடலையோம்போ ம்நின்றிருவடியிற் சேர்த்துக்கொள்-என்பதாம். (௩௬)

சீர்க்கைவனப்பு மலர்வேங்கையானவன் செஞ்சிலையோர் - *
சீர்க்கைவனப்பு னிதத்தவவேடன் றினைவளைக்குஞ் - *
சீர்க்கைவனப்பு னமதுருக்காட்டிய சேய்தமிழ்நூற் - *
சீர்க்கைவனப்பு னிமிர்சடையோன்மகன் சிற்றடிக்கே - *

(இ-ள்.) சீர்க்கை-மனந்திருந்துதல்—வனப்பு- அழகாகும்—மலர்-புஷ்பங்களையுடைய—வேங்கையானவன்- வேங்கைமரமாய் நின்றவனும்—செஞ்சிலையோர்-அழகியவில்லையுடையகுறவர்கள்—சீர்-சந்தேகப்பட்டதன்மையை—கை-சோபித்து—வன- வனத்தில்—புனித-பரிசுத்தமான—தவவேடன்- தவவேடங்கொண்டவனும்—தினைவளைக்கும்- தினைப்புனத்தைக்காக்கின்ற—சீர்க்கு-சிறந்த வள்ளி நாயகிக்கு—ஐவனப்புனமது- மலைநெல்விளைகின்றப்புனத்தின்கண்—உருக்காட்டியசேய்- தன்னிசுரூபத்தைக்காட்டிய குமரனும்—தமிழ்நூற்சீர்க்கு- இயற்றமிழ்நூலுக்குரிய முப்பதுசீருக்கும்—ஐ புலவனாகியதேவனும்—வன- கங்கையையும்—புல்- அறுகையுமணிந்த—நிமிர் - நீண்ட—சடையோன்- சடாபாரத்தையுடையபரமசிவனது—மகன்- மைந்தனுமாகிய முருகக்கடவுளினது— சிற்றடிக்கு - சிறியதிருவடித்தாமரைகளை யடைதற்கே—
(எ-று.) சீர்க்கை-எழுவாய்-வனப்பு-பயனிலை- ஏ-அசை-(கருத்து.)
தினைப்புனத்தில் முன்சந்தேகித்தசந்தேகம்குறவர்நீங்கும்படி வேங்கைமரமாய்நின்றவனும் தவவேடங்கொண்டு வள்ளிநாயகிக்குத் தன்னிசுரூபத்தைக் காண்பித்தவனும்- இயற்றமிழ்ப் புலமையையுடைய பரமசிவனதுமைந்தனுமாகியக் குமாரக்கடவுளினது திருவடியையடைதலே யழகாகும்-என்பதாம். (௩௭)

சிற்றம்பலத்தைய னன்புநெய்நூற்றிரி சிந்தையிடுஞ் - *
சிற்றம்பலத்தை வரஞானதீபமிட் டார்க்குப்பரி - *
சிற்றம்பலத்தை யருளுஞ்செந்தூரர் பகைக்குலமாஞ் - *
சிற்றம்பலத்தை பதவாந்தேரளிலிந் தீவரமே - *

(இ-ள்.) சிற்றம்பலத்து-ஞானவெளியாகிய—ஐயர்- சுவாமியும்—அன்பு-பக்தியென்னும்—நெய்- நெய்யைவார்த்து—நூல்- ஆக

மநாலென்னும்—திரி-திரியை—சித்தை-இருதயமாகிய—இடம்-தீ
யமேற்றுகின்ற---இல்-தகழியிலிட்டு---தம்ப ஆன்மாவுக்குப்பற்று
க்கோடாகிய---லத்தைவர- கிருபையுண்டாகும்பொருட்டு- - ஞா
னதீபம்-மெய்ஞ்ஞானதீபத்தை---இட்டார்க்கு-,ஏற்றினவடியார்க
ளுக்கு---பரிசில்-ஈவாக---தம்பலத்தை-தமது சாயுச்சியமென்னும்
பலனை---அருளும்-கிருபைசெய்கின்ற---செந்தூரர்- திருச்செந்தி
லாயகருமாகிய கந்தசுவாமியினது---பகைக்குலமாம்- சத்துருக்க
ளாகியவசுரக்குலத்தைவேரறுத்த---சிற்று-சிறிய---அம்பல- பாண
மல்ல---தைப்பது- என்னிருதயத்தில்தைத்துவருத்துவது---அவர்-
அக்கடவுளது---அம்-அழகிய---தோளில் - புயத்திலணிந்த---இந்தீ
வரம்-நீலோற்பலமாகியபாணமே---(எ-று.) இந்தீவரம்-எழுவாய்-
தைப்பது-பயனிலை-ஏ-அசை- (கருத்து.) இருதயத்தைத் தகழியா
க்கி அன்பாகியநெய்யைவார்த்து-ஆகமமாகியதிரியையிட்டுஞான
த்தைவிளக்காயேற்றின வடியார்களுக்குச்சிதாகாசமானசாயுச்சிய
பதவியையருளுகின்ற திருச்செந்திலாயகர் சத்துருசங்காரஞ்செ
ய்த பாணமிருக்க அவர்புயத்திலணிந்த நீலோற்பலமாலையே மன்
மதன்பாணத்திலொல்லாகவென்னகத்திற்றைக்கின்றது-என்பதாம்.

தீவரகந்தரி தாம்பகிராருற வானசெம்பொற் - - *
றீவரகந்தரி யாநொந்தபோதினிற் செச்சையவிந் - - *
தீவரகந்தரி சிந்துரைபாக சிவகரண - - - - *
தீவரகந்தரி புந்திருணதடி சேமநட்பே - - - *

(இ-ள்.) தீ-தீய்ந்துபோன—வரகு-வரகென்றுந்தானியத்தில்—
அந்து-வண்டுகளால்---அரி-அரிக்கப்பட்டபதரையும்---தாம்பகிரா
ர்-தரம்பங்கிட்டுக்கொண்டார்கள்—உறவான - உறவினராய்—செ
ம்பொன்றீவர்- சிவந்தபொன்விளையுந்தீவிலிருப்பவரும்—அகந்த
ரியா - பாவத்தைத்தரித்து மனம் பொறுக்கக்கூடாமல்—நொந்த
போதினில்-வருந்துங்காலத்தில்—செச்சைய் - வெட்சிமாலையையு
டையோனே—இந்தீவர- செங்கழுநீர்மாலையையுடையோனே—
கந்தரி-மலைக்குகையிலிருந்தவள்ளிநாயகியையும்—சிந்துரை-ஆயி
ராவதத்தினிடம்வளர்ந்த தெய்வயானை நாயகியையும்—பாக-இரு
பக்கத்திலுமுடையவனே—சிவகரண-சிவகரணம்புரிகின்ற—தீ-பு
த்தியை—வர-வரமாகக்கொடுக்கின்ற—கந்த - குமாரக்கடவுளே—

ரிபு-சத்துருக்களை---தீர்-சம்மாரஞ்செய்யத்தக்க---உனதடி - உன
துதிருவடித்தாமரையே---சேமநட்பு-பொக்கிஷமும்உயிர்த்துணை
யுமாம்---(எ-று.) அடி-எழுவாய்-சேமநட்பு- பயனிலை- ஏ-அசை-
(கருத்து.) வெட்சிமாலையையுஞ்செங்கழுநீர்மாலையையுமணிகின்ற
வனே-வள்ளிதெய்வயானைபாகனே- சிவகர்ணவறிவினர்களுக்கு அ
னுக்கிரகஞ்செய்கின்றவனே-எனக்குறவென்பவர்கள் பொன்விளை
யுந்திவிலிருப்பவராயினும்- வறுமையால்வருந்துங்காலத்தில் அந்
து அரித்துதீய்ந்தவரகையாவ துதவவல்லரோ ஆதலினுனது திரு
வடியே பொக்கிஷமும்உறவுமாம்-என்பதாம். - (௩௧)

சேமரவிக்கம் படையாகவீசுப தேசமுன்னூற் - - *
சேமரவிக்கம் பலந்தருவாய்செரு வாயவெஞ்சூர் - *
சேமரவிக்கந் திரித்தாய்வருத்திய தன்றிதென்றல் - - *
சேமரவிக்கம் புயவாளிவிண்டிளை தெண்டிரையே - *

(இ-ள்.) சேம-சிவந்த---ரவிக்கு-சூரியனுக்கு---அம்-சலத்தை---
படையாக-அசுராதிதடையைவிலக்குமாயுதமாக---வீசு-இறைக்கி
ன்ற---உபதேசம்-உபதேசத்தையும்---முன்னூல்-முப்புரிநூலையும்
---சேமர்-காப்போராகிய வேதியர்செலுத்தும்---அவிக்கு- அவிர்
ப்பாகத்திற்கு---அம்-அழகிய---பலம்-நற்பயனை---தருவாய்- அளி
ப்போனே---செருவாய-பேரினையுடைய---வெஞ்சூர்- கொடியசூ
ரனாகிய---சே-வயிரம்பொருந்திய---மர-மாமரத்தினால்---விக்கம்-
தேவர்கட்குண்டானவிக்கினத்தை---திரித்தாய்- ஒழித்தவனே---வ
ருத்தியது-என்னைத்துன்பப்படுத்துகின்றது---அன்றில் - காமசின்
னமாகியவன்றிற்பட்சியும்---தென்றல்- அவனதுதேராகியதென்ற
லும்---சே- கழுத்தில்மணியொலியைச்செய்தலினாலிடபமும்---ம
ரவிக்கு-கருப்புவில்லும்---அம்புயவாளி- தாமரைப்பூவாகியவம்பு
ம்---விண்டு- ஆர்ப்பரித்து---இளை - முழங்குகின்ற---தெண்டிரை-
தெளிந்ததிரையையுடையகடலும்(ஆகியவிவ்வாறும்)---(எ-று.) அ
ன்றில்முதலியவாறும்-எழுவாய்-வருத்தியது- பயனிலை-ஏ - அசை-
(கருத்து.) ஆதித்தனுக்கம்பாகச் சந்தியாவந்தனஞ்செய்யு முந்நூ
லாளராகிய மறையவாது வேள்விக்குத்தக்கப் பலனளிப்போனே
மாமரமாய்நின்றசூரனைவென்றவனே-இடபமணியோடுகாமனது

ன்னங்களாகிய அன்றிலும் தென்றலும்-கரும்பும் தாமரைப்பூவும்-கடலும் என்னைவருத்துகின்றன-என்பதாம். (௪௰)

தெண்டன்புரந்தர வக்குன்றில்வாழ்கந்த சிந்துவினுந்
தெண்டன்புரந்தர லோகஞ்செருதுசெற் றோய்களைவாய்
தெண்டன்புரந்தர நற்கேள்சிறுவ ரழச்செய்தெம்மைத்
தெண்டன்புரந்தர வின்படிநூக்கிய தீநரகே

(இ-ள்.) தெண்டன்-வணங்குகிறேன்---புரந்து- குறைவறக்காப்பாற்றி---அரவக்குன்றில் - திருச்செங்கோட்டுமலையில்---வாழ்-வசித்திருக்கிற---கந்த-குமாரக்கடவுளே---சிந்துவில்-சமுத்திரத்தில் கலந்த உத்தெண்டன்-வலிமையுடையசூரனை---புரந்தரலோகம் - இந்திரலோகத்தை---செருது- அழிக்காதபடி---செற்றோய் - வதைத்தவனே---களைவாய்-ஒழித்தருளவேண்டும்---தெண்டன்-தெண்டாயுதத்தையுடையகாலன்---புரந்தர்-தொன்றுதொட்டுவருகின்ற---அய்-அழகிய---நற்கேள்-நற்சுற்றத்தாரும்---சிறுவர்-பிள்ளைகளும்---அழச்செய்து-சூழ்ந்தழுமுறையிடும்படி---எம்மை-எம்முயிரைப்பிரித்து---தெள்-தெளிந்த--தன்புரம்-தனதுலோகத்திற்கொண்டுபோய்---தரவின்படி-தனதுகட்டளையின்படி---நூக்கிய தீநரகு-தள்ளுதற்கிடமாகிய கொடியநரகாக்கினையை---(எ-று.) தீ-தோன்றுவெறுவாய்-களைவாய்-பயனிலை-ஏ-அசை. (கருத்து.) திருச்செங்கோட்டுமலைக்கந்தனே - தேவலோக மழிந்துபோகாதபடி சூரனைவென்றோனே உன்னை வணங்குகிறேன்- இயமன்வந் தென்சுற்றத்தாரும் பிள்ளைகளும் சூழ்ந்தழும்படி யென்னைத்தன் னுடையலோகத்திற்கொண்டுபோய் நரகாக்கினைசெய்யாமற் காத்தருளவேண்டும்-என்பதாம். (௪௧)

தினந்தினத் தரச்செல்வர்யாற்சென் றெனக்கென்பதோர் - ❋
தினந்தினத் துழுதரானலஞ்சுடச் சேர்ந்துகூடுந் ❋
தினந்தினத் தவிகளைசெங்கோட்டினன் செந்திலந்நீர் ❋
தினந்தினத் தவத்துட்பிரசதஞ் செய்யவற்றே ❋

(இ-ள்.) தீ-புத்தி---நந்து-கெட்ட---இனத்து - கூட்டத்தாருக்குள்---உதர-உதாரத்துவம்பேசும்---செல்வர்பால்-ஐசுவரியவான்களிடம்---சென்று-போய்---எனக்கென்று [illegible]

ன்றிரக்கும்படிசெய்கின்றதாகிய—ஒர்-ஒப்பற்ற—தீனம்-வறுமை
நோயானது—தினத்தும்-நாடோறும்—உதரானலம்-வயிற்றுப்
பசியாக்கினி—சுட-தகிக்கும்போது—சேர்ந்து-(அதனுடன்) சே
ர்ந்து—சுடும்-தகிக்கின்றது—இ-இக்கொடிதான—நம்-நமது—
தினத்துனி-நித்தியத்துன்பத்தை—களை-நீக்குகின்ற—செங்கோட்
டினல்-திருச்செங்கோட்டுமுருகக்கடவுளது—செந்தில்-திருச்செ
ந்திற்பதியின்—அம்-அழகிய—நீர்-சலமானது—தீம்-இனிய—
நந்தின்-சங்கினிறம்போல—அத்து-சிவப்பை—உதவ-கொடுக்கின்
ற—துப்பு-பவளம்போன்றவதரத்தில்—இரசதம்-வெண்மைநிறத்
தை—செய்யவற்றே-செய்யவல்லதோ—(எ-று.) நீர்-எழுவாய்-தர
வல்லதோ-பயனிலை-ஏ-அசை. (கருத்து.) திருச்செங்கோட்டு முரு
கக்கடவுளது திருச்செந்திற்பதியின்றீர்த்தம்-நாம் நாடோறுமிரத்
தலாலுண்டாகுந் துன்பத்தை யொழிக்கவல்லதாயினும் பவளம்
போலும் சிவந்தவிதழைசங்குபோலும்வெண்மையாக்கவல்லதோ
என்பதாம். (௪௨)

செய்யசெந்தாமரை யில்லாதமாதுடன் செந்தினைசூழ் - *
செய்யசெந்தாமரை மானார்சிலம்பிற் கலந்துறையுஞ் - *
செய்யசெந்தாமரை யென்னுங்குமார சிறுசதங்கைச் - *
செய்யசெந்தாமரை சேர்வதென்றோவினை செய்தொலைத்தே *

(இ-ள்.) செய்ய-தினைவிளைநிலத்தையுடைய—செம் ஒழுங்கான
—தாமரை-சிறுகுடியென்னுநகரத்தாருக்கு—இல்லாது-தெரியா
மல்—அமாதுடன்-அப்புனங்காத்திருந்த வள்ளியம்மையை—செ
ந்தினைசூழ்செய் - செந்தினைக்கொல்லைப்பயிரைசூழ்ந்துகொண்டி
ருந்த—அசெம்-காட்டாடும்—தா-தாவுகின்ற—மரை- கடம்பையு
ம்—மால்-மானும்—ஆர்-நிறைந்த—சிலம்பில்-மலையின்கண்ணே—
கலந்துறையுஞ்செய்-காந்தருவமணம்புணர்ந்துறையுங்குமாரக்
கடவுளே—செம்- அழகிய—தாமர்- கொன்றைமாலையையுடைய
பரமசிவன்—ஐயென்னுங்குமார-ஐயனேயென்றுசொல்லப்பட்ட
குமாரக்கடவுளே—சிறு-சிறிய—சதங்கை- சதங்கையணிந்த—செ
ய்ய-அழகிய—செந்தாமரை- உனதுசிவந்ததிருவடித்தாமரையை
—சேர்வதென்று-யானடையுங்காலமென்றைக்கு—வினை - இருவி
னைகளையும் - செய்-தூரத்தில்—தொலைத்து-ஒழித்துவிட்டே.எ-று

யான்-தோன்றுவெழுவாய்-என்று-பயனிலை-ஓ-ஏ-அசை-(கருத்து)
மலையிற்குடியிருக்குங் குறவரறியாமற் றினைப்புனத்தில்வள்ளியம்
மையை மணம்புணர்ந்தவனே-கொன்றைமாலையையுடைய பரம
சிவனுலையனேயென்று துதிக்கப்பட்டக் குமாரக்கடவுளே-இருவி
னைப்பரப்பைக்கடந்துன்றிருவடியை யானடையுங்காலமென்றை
க்கு-என்பதாம். (௪௫)

சேதாம்பலத்துறை வேறும்பணிகங்கை செல்வநந்தன் - *
சேதாம்பலத்துறை யாதசிற்றுயன் றிருமருக - - *
சேதாம்பலத்துறை செவ்வாய்க்குறத்தி திறத்தமுத்திச் - *
சேதாம்பலத்துறை யீதென்றெனக்குப தேசநல்கே - *

(இ-ள்.) சேதாம்-சேதுவென்னுந்தீர்த்தமுதலாகிய—பலத்துறை
வேறும்-மற்றைப்பலதீர்த்தங்களும்—பணி-வழிபடத்தக்க—கங்
கை-பகீரதியில்—செல்வ-மைந்தனே—நந்தன்சே-நந்தகோபன்-
பாலகனாகிய—தாம்பலத்து-நவநீதக்கள்வராய்க்கட்டுண்டகயிற்றால
ன்றி—உறையாத-மற்றொன்றாலுங்கட்டுண்ணப்படாத—சிற்றுய
ன்-சிற்றிடையனான கிருஷ்ணமூர்த்தியினது—திருமருக-சிறந்தம
ருகோனே—சேதாம்பலத்து-சிவந்தவாம்பற்பூநிறத்தைப்போலு
ம்—உறை-உற்ற—செவ்வாய்-சிவந்தவாயையுடைய—குறத்திதிற
த்த-வள்ளிநாயகிமணாளனே—முத்திச்சே-எனக்கு முத்திக்குமிருக்
கிறதூரத்தை—தாம்-கடப்பதாகிய—பலத்துறையீதென்று-நற்பல
னைத்தரும் வழியிதுவென்று—எனக்கு-அடியேனுக்கு—உபதேச
நல்கு-உபதேசமருளவேண்டும்—(எ-று.) நீ தோன்றுவெழுவாய்-
நல்கு-பயனிலை-ஏ-அசை. (கருத்து.) கங்காதேவியின்மைந்தனே,
திருமான்மருகோனே, வள்ளிநாயகனே, எவற்றினுந் தூரமாயிரு
க்கின்ற மோக்ஷத்தைச்சேரு நல்வழியிதென்றடியேற் குபதேசி
த்தருளவேண்டும்-என்பதாம். (௪௬)

தேசம்புகல வயிலேயெனச்சிறை புக்கொருகந் - - - *
தேசம்புகல வணவாரிசெற்றவ னீசற்குப - - - *
தேசம்புகல திகவாசகன்சிறி தோர்கில்லமாந் - - *
தேசம்புகல கமுதவிமரினைச் செருச்செய்வதே - - *

(இ-ள்.) தேசம்- எனக்குறைவிடமும்—புகல்- அடைக்கலஸ்தா
னமும்—அயிலேயென-வேலாயுதமேயென்று சொல்லும்படியே

டுது—சிறைப்புக்கு-சிறையிற்பட்டு—ஒருகம் - ஐந்துதலையிலொன்,
ற—தேசம்பு-இழந்தபிரம்மா—கல - மரக்கலங்களையுடையதும்
—வணை-அழகையுடையதுமான—வாரிசெற்றவன்-வருணனைவிய
கட்டலையுக்கிரபாண்டியனுக்கிவற்றச்செய்தோனாகிய—ஈசற்கு - பரம
சிவனுக்கு—உபதேசம்புகல்-உபதேசஞ்செய்த—அதிக-மிகுதியா
ன—வாசகன்-மொழியையுடையகுமாரக்கடவுளானவன்—சிறிது-
சற்றும்—ஓர்கிலன்-அறிந்தானில்லை—மா - மாம்பூவாகிய—தேசு-
ஒளிதங்கிய—அம்பு-பாணமானது—கலகமுதவி - கலகஞ்செய்து
—மானை-மானினது விழியையுடைய விம்மங்கையுடன்—செருச்
செய்வது-போர்செய்கின்றதை—(எ-று.) அதிகவாசகன்-எழுவாய்-
ஓர்கிலன்-பயனிலை-எ-அசை. (கருத்து.) ஒருதலையிலந்த பிரம்மா
சிறைபட்டு வேலாயுதமேயுனக் கடைக்கலமென்றுசொல்லச்செய்
தவரும் சமுத்திரத்தைவற்றச்செய்த பரமசிவனுக் குபதேசித்தவ
ருமாகிய முருகக்கடவுள் மன்மதனதுமாம்பூவாளி யிம்மங்கைமே
ற்றைத்துப்போர்செய்வதைசற்றுமறிந்தாரில்லை-என்பதாம். (சரு)

செருக்கும்பராக வயிராவதத்தெய்வ யானைமணஞ் - *
செருக்கும்பராக தனந்தோய்கடம்ப செகமதநூல் - *
செருக்கும்பராக நிருபனந்தத் தெளிவியம்பு - - *
செருக்கும்பராகம் விடுங்கடைநாளுந் திடம்பெறவே - *

(இ-ள்.) செரு-போரினையும்—கும்ப - மத்தகத்தையும்—ராக-
கோபத்தையுமுடைய—அயிராவத- அயிராவதத்திடம்வளர்ந்த—
தெய்வயானை-தெய்வானைநாயகியினது—மணம்- வாசனையையும்-
செருக்கும்-இறுமாப்பையையும்—பராக- மலர்த்தாதுக்களையுமுடை
ய—தனம்-கொங்கையில்—தோய்-முழுகுகின்ற—கடம்ப- வெட்
சிமாலையையுடையவனே—செக-உலகத்திலுள்ள—மதநூல்- சமய
சாஸ்திரங்களில்—செருக்கும்-மயக்கத்தையும்—பராகம்-இதரவே
றுபாடுகளையும்—நிருபன்- நிருமித்ததேவனே—அந்தம்-முடிவா
னபொருளை—தெளிவி-இஃதென்றெனக்கு விளக்கியருளவேண்டு
ம்—அம்புசெர்- தாமரையில்வாசஞ்செய்கின்ற பிரமாக்களெல்லா
ம்—உக்கு-இறந்து—உம்பராகம்விடும்-தேவர்களெல்லாமழிகின்ற
—கடைநாளும்-இறுதிகாலத்திலும்—திடம்பெற - அடியேனித்தி
யத்துவமடையும்பொருட்டு—(எ-று.) நீ-தோன்றுவெழுவாய்-தெ

ளிவி-பயனிலை-ஏ-அசை. (கருத்து.) அயிராவதத்திடம்வளர்ந்தெய்வயானையைத்தழுவுங் கடப்பமாலையையுடையவனே உலகமயக்காகிய பரசமயவழியில்மயங்காமலும்- பிரமாதிதேவர்களழியுங்காலத்திலழியாமலும் - நித்தியத்துவமடையும்பொருட்டு அவற்றின்முடிவானபொருளை யெனக்குவிளக்கியருள்-என்பதாம். (௬௬)

திடம்படுகத்துங் கெடீர்கன்மலோகச் சிலுகுமச்சோ - - *
திடம்படுகத்துந் திரித்தம்புவாலியு ரத்தும்பத்துத் - *
திடம்படுகத்துந் தெரித்தான்மருக திருகுமும்ம - *
திடம்படுகத்துங் கநகங்குனித்தவன் சேயெனுமே - *

(இ-ள்.) திடம்-உறுதிநிலை—படு-அழிகின்ற—உகத்தும்-யுகாந்தத்திலும்—கெடீர்-நிலைகெடாதுநித்தியராயிருப்பீர்கள்—கன்ம-பூர்வவினையால்—லோக-உலகத்திலுண்டாகிய—சிலுகு-கஷ்டத்திரயங்களையும்—அச்சேர்திடம்படுகத்தும்-அக்கல்விச்செருக்கைக்குத்தருங்கணிதநூலைபிதற்றுதலையும்—திரித்து-மாற்றுதல்செய்து—அம்பு-முன்னிராமபாணத்தை—வாலி-வாலியினுடைய—உரத்தும்-மார்பிலும்—பத்து-புத்தெல்கிற—திடம்படு-வலிமைபொருந்திய—கத்தும்-இராவணனுடையதலைகளிலும்—தெறித்தான்-செலுத்தியஸ்ரீராமருடைய—மருக-மருகோனே—திருகு-மாறுபட்ட—மும்மதில்-முப்புரங்களும்—தம்படு-தோற்றியவிடத்திலேயே—உக-நீறாகிவிழ—துங்க-உயர்ந்த—நகம்-மகமேருவை—குனித்தவன்-வில்லாகவளைத்த பரமசிவனது—சேயெனும்-மைந்தனாகிய குமாரக்கடவுளென்றுதுதியுங்கள் - (எ-று.)நீங்கள்-தோன்றிவெற்றுவாய்-கெடீர்கள்-பயனிலை-ஏ-அசை. (கருத்து.)நமர்காள் நீங்களிஷ்டத்திரயங்களையும் சத்தமுஞ் சோதிடமுமாகிய நூல்களைப்பிதற்றுதலையுமொழித்து- இராவணனையும்வாலியையுஞ் சங்கரித்த திருமால் மருகோனே மேருவில்விறற் றிரிபுராதகனுஞ் செய்த பரமசிவனதுமைந்தனேயென்று துதிப்பீர்களானால் யுகாந்தகாலத்திலுமழியாமனித்தியராயிருப்பீர்கள்-என்பதாம். (௬௭)

சேயவன்புந்தி வனவாசமாருடன் சேர்ந்தசெந்திற் - - *
சேயவல்புந்தி கனிசாசிராந்தக சேத்தவென்னிற் - - *
சேயவன்புந்தி பனிப்பானுவெள்ளிபொன் செங்கதிரோன் - *
சேயவல்புந்தி தமோமாறவேதருஞ் சேதமின்றே - - *

(இ-ள்.) சேய-அழகினையுடைய—அன்பு-இச்சையோடு—உந்திக்காய்யாற்றின்—வன-காட்டில்—வாச-வாசஞ்செய்த—மாதுடன்-வள்ளிநாயகியுடன்—சேர்ந்த-கூடியிருந்த—செந்தில்-திருச்செந்தூரில்வாழாநின்ற—சேய-குமாரக்கடவுளே—வன்பு-வலிமையில்—உந்து-உயர்ந்த—இகல்-மாறுபாட்டையுடைய—நிசாசராந்தக-அசுரர்குலத்திற்கியமனே—சேந்த-கந்தனே—என்னில்-என்றுதுதிப்போராகில்—சேயவன்-செவ்வாய்—புந்தி-புதன்—பனிப்பானு-சந்திரன்—வெள்ளி-சுக்கிரன்—பொன்-வியாழம்—செங்கதிரோன்-ஆதித்தன்—சேயவன்-அவ்வாதித்தன்மைந்தன் சனியாகிய நவக்கிரகங்களின்வக்கிரோதையத்தால்—புந்திதடுமாறவேதரும்-புத்தியைச்சலனப்படுத்துகின்ற—சேதமின்று-கேடில்லை—(எ-று.) சேதம்-எழுவாய்-இன்று-பயனிலை-ஏ-அசை. (கருத்து.) காய்யாற்றும் புனத்திலிருந்த வள்ளிநாயகிபேரிலன்புகூர்ந்த செந்திநாயகனே, அசுரர்குலாந்தகனே-சேந்தனேஎன்று துதிக்கின்றவர்களுக்கு நவக்கிரகங்களின் வக்கிரோதையத்தாலாகுந் தீமையில்லை என்பதாம். (௪௮)

சேதகமொன்று மனுதியுந்தாதையுந் தேடரியார் - *
சேதகமொன்றுஞ் சதங்கையுங்கிண்கிணி செச்சையந்தாள் - *
சேதகமொன்றும் வகைபணியாயினித் தீயவினைச் - *
சேதகமொன்று மறியாதுழலுயிர்ச் சித்திரமே - *

(இ-ள்,) சேதகமொன்று-ஒருதலைபின்னமான—மன்-நிலைபெற்ற—ஆதியும்-பிரம்மாவும்—தாதையும்-அப்பிரமாவின்றந்தையாகிய மகாவிஷ்ணுவும்—தேடரியார்-தேடுதற்கரிதான பரமசிவனது—சே-மைந்தனே—தகமொன்றும்-தகுதியாய் முழங்குகின்ற—சதங்கை-சதங்கையையும்—அம்-அழகிய—கிண்கிணி-கிண்கிணியையும்—செச்சை-வெட்சிமாலையையுமுடைய—அம்-சிரேஷ்டமாகிய—தாள்-திருவடித்தாமரையில்—சேது-சிவந்த—அகம்-என்னிருதயமானது—ஒன்றும்வகை-கூடும்வண்ணம்—பணியாய்-அருள்செய்யவேண்டும்—இனி-இனிமேல்—தீய-கொடிய—வினை-இருவினையாகிய—சேதகம்-சேற்றினுள்ளே—ஒன்றுமறியாது-ஒருநெறியுமறியாமல்—உழல்-கிடந்துழலுகின்ற—உயிர்-ஆவியின்வாழ்க்கை—சித்திரம்-பொய்யாயிருக்கின்றது—(எ-று.) நீ-தோ

ன்றாவெழுவாய்-பணியாய்-பயனிலை-ஏ-அசை- (கருத்து) நான்மு கனுந்திருமாலுமறியவொண்ணாத பரமசிவனது மைந்தனே- இரு வினைச்சேற்றிலழுந்தி வருந்து மென்னுயிர்வாழ்க்கைநித்தியமல்ல வாதலாலுன்றிருவடியையென்மனம்பற்றும்வகையருள்-ஏ-ம். ()

சித்திரமிக்கன வில்வாழ்வெனத்தெளி யுந்தவவர் - *
சித்திரமிக்க னெறிக்கழிந்தேற்கினிச் செச்சைநல்வி - *
சித்திரமிக்க தனக்குறத்தோகை திறத்தமுத்தி - *
சித்திரமிக்க வருளாய்பிறவிச் சிகையறவே - - *

(இ-ள்.) சித்திரம்-பொய்யாகிய—இக்கனவு- இப்போதுகாணுங் கனாப்போலாகும்—இல்வாழ்வு-பாசபந்தங்களாற்சிக்கிய மனைவா ழ்க்கையானது—எனத்தெளியும்- என்றுநிச்சயத்தைக்கொடுக்கின் ற—தவவாசி-தபோபலத்தின்—திரம்- உறுதியைநாடாமல்—இக்க ன்-கருப்புவில்லையுடையமன்மதனது--நெறிக்கு-காமநூல்வழியில் ---அழிந்தேற்கு-கெட்டவெனக்கு—இனி- இனிமேலாவது—செச் சை- வெட்சிமாலையைப்புனையும்—நல்- திவ்வியமான—விசித்திர- அழகனே — மிக்க-பெருத்த—தன- கொங்கையையுடைய—குறத் தோகைதிறத்த - குறவர்வளர்த்த வள்ளிநாயகனே— முத்திசித்தி- மோட்சப்பேறனது—ரமிக்க- குறைதீர்ந்து திருப்தியாகும்படி —அருளாய்- நீகிருபைசெய்யவேண்டும்—பிறவிச்சிகை- ஜனனமரணபந்தங்கள்—அற- அறும்பொருட்டு—(எ-று.) நீ- தோ ன்றாவெழுவாய்-அருள்வாய்-பயனிலை-ஏ-அசை, (கருத்து.) வெட் சிமாலையோனே-வள்ளிநாயகனே- ஆத்மாவுக்குறுதியானதவத்தை நாடாமல்சிற்றின்பவிஷயத்திலாழ்ந்து பொய்யுங்கனவும்போன்ற மனைவாழ்க்கையிலிருக்கின்ற வெனக்கினியாகிலு முத்தியெய்தும் பொருட்டும் சனனமரணமறும்பொருட்டும் அதைநாடக்கிருபை செய்யவேண்டும்-என்பதாம். (௫௰)

சிகைத்தோகைமாமயில் வீராசிலம்புஞ் சிலம்பம்புரா - *
சிகைத்தோகைமாமயில் வாங்கிப்பொருது திசைமுகன்வா - *
சிகைத்தோகைமாமயில் வானில்வைத்தோவெஞ் செருமகள்வா *
சிகைத்தோகைமாமயில்செவ்விதற்கீரர்சொற் றித்தித்ததே - *

(இ-ள்) சிகை-கொண்டையையும்—தோகை- தூவியையுமுடை ய—மா-பெரிய — மயில்வீரா- மயிலேறும்வீரனே —சிலம்பும்-கி

ரவுஞ்சகிரியையும்—சிலம்பு-முழங்குகின்ற—அம்புராசி-சமுத்திரத்தின்கண்—கை-ஒழுங்காக—தோலகை-துவசத்தையுடைய—மா-மாமரமாய்நின்றசூரனையும்—மய்- இருளுக்கு—இல்- இடமாகிய மாயையையும்— வாங்கி-விலக்கி—யொருது-போர்செய்துவென்று—திசைமுகன்-நான்முகப்பிரமன்—வாசி-பிரணவப்பொருளறியாமல்வாசித்தகுற்றத்திற்கு—கைத்து-கோபித்து—ஓகை-மகிழ்ச்சியை—மாமய்- அழகுக்கு—இல்- இருப்பிடமாகிய—வானில்- தேவருலகத்தில்—வைத்தோ- விளைத்தவனே—வெஞ்செரு-வெவ்வியபோரிற்சிறந்த—மகள்வாசி - பாண்டியனது குதிரைமுகத்தையுடைய பெண்ணுக்கு—கைத்தோ - அக்குதிரைமுகத்தைத்தீர்த்தவனே—கைமா-அயிராவதம்வளர்த்த—மயில் - தெய்வானையினது—செவ்வி-கலவிப்புதுமையினும்—நற்கீரர்சொல்-நற்கீரர்சொல்லிய திருமுருகாற்றுப்படை—தித்தித்தது- (உனக்கு) இனிமையாயிற்று—(எ-று) சொல்-எழுவாய்-தித்தித்தது-பயனிலை-ஏ-அசை(கருத்து.) மயில்வீரனே- மாவாய்நின்றசூரனையும் கிரவுஞ்சகிரியையும் மாயையையுமறச்செற்று - அமராபதியைப்பீடேற்றினவனே - பிரமாவைக்கோபித்தவனே - தெய்வானையின் கலவியின்பத்தினும்நற்கீரர்துதித்தபாடல் குதிரை முகத்தையுடையபெண்ணுக்கு அம்முகத்தைமாற்றினை வுனக்கு இனிமையாயிற்று-என்பதாம். (௫௧)

தித்திக்குந்தொந்திக் குதித்தம்புரியுஞ் சிவன்செவியத் - *
தித்திக்குந்தொந்திக் கறமொழிபாலக தேனலைத்துத் - *
தித்திக்குந்தொந்திக் கிளையாய்விளையுயிர்க் குஞ்சிதைதோற் ,, *
தித்திக்குந்தொந்திப் பனவேதுசெய்வினைத் தீவிலங்கே - *

(இ-ள்.) தித்திக்கும்- தித்தியென்னுந்தாளத்துக்கும்—தொந்திக்கும்-தொந்தியென்னுந்தாளத்திற்குமேற்க—நிர்த்தம்புரியும் - நடனஞ்செய்கின்ற—சிவன்-பரமசிவனது—செவியத்தித்திக்கு- இருசெவிகளின்புலனிடத்து—உற்று-நன்மையும்படி—ஓம்- பிரணவப்பொருளை—திக்கற-மயக்கநீங்க—மொழி - உபதேசித்த—பாலக-பாலகனே—தேனலைத்து-பலகாரநைவேத்தியத்தாற்றேனொழுகி—தித்திக்கும் - இனிப்புற்றிருக்கின்ற—தொந்திக்கு - வயிற்றையுடையகணபதிக்கு—இளையாய் - இளையோனே—விளை- கருப்பையிலுருவான—உயிர்க்கும்-சீவனுக்கும்—சிதை - அழிந்துபோகின்ற—

தோற்றித்திக்கும்- தோற்பையாகியவுடம்புக்கும்—தொந்திப்பன்
வேது- சம்பந்தப்பட்டுப்பிறப்புண்டாவதற்குக்காரணம்—செய்-
யான் முன்னியற்றிய—வினை-இருவினையினது—தீ-கொடிய—வில
ங்கே-தளைதானோ—(எ-று.) நீ- எனுந்தோன்றுவெழுவாய்- சொல
லென்னும்-பயனிலையைக் குறிப்பாகக்காட்டிநின்றது. (கருத்து.)
தித்தித்தொந்தியென்று நடனஞ்செய்யும் பரமசிவனது திருச்செ
வியிற் பிரணவப்பொருளை மயக்கறவுபதேசித்தபாலகனே - தொ
ந்திவிநாயகருக்கிளையோனே- உடலுமுயிருஞ் சம்பந்தப்பட்டுப்
பிறவியுண்டாவதற்கு முன்செய்த வினைப்பாசந்தான் காரணமோ
நீசொல்-என்பதாம். (ருஉ)

தீவில்ங்கங்கை தரித்தார்குமார திமிரமுந்நீர் *
தீவிலங்கங்கை வருமான்மருக தெரிவற்றவான் *
தீவிலங்கங்கை வராவிரைக்குத் திரிந்துழலுந் *
தீவிலங்கங்கை யமன்றொடராமற் றிதம்பெறவே *

(இ-ள்.) தீ-கரத்திலக்கினியையும்—விலம்- புயத்தில்வில்வத்தை
யும்—கங்கை-சென்னியிற்கங்கையையும்—தரித்தார்- தரித்தபரம
சிவனது—குமார-மைந்தனே—திமிர- இருணிறமான—முந்நீர்-
சமுத்திரமும்—தீ-வறண்டுபோகத்தக்க—வில்-வில்லின்—அங்கம்-
வித்தையில்—கைவரு- வல்லவரான—மால்மருக - திருமான்மரு
கோனே—தெரிவற்ற-அறிதற்கரிய—வான்-பெரிய—தீவில்- தீவுக
ளிலும்—அங்கங்கு-மற்றும்பலவிடங்களிலும்—ஐவர்- பஞ்சேந்தி
ரியங்களால்—அவாவு-இச்சிக்கத்தக்க—இரைக்கு- உணவின்பொரு
ட்டு—திரிந்துழலும்-அலைந்துதிரிகின்ற—தீ- புத்தியினது—விலங்
கம்-உலத்தொடர்ச்சியை—கை-ஒழிக்கவேண்டும்—யமன்றொட
ராமல்-இயமன்றொடர்ந்துபற்றாமல்—திதம்பெற-உனதுதிருவடி
யிலின்புற்றுறுதிப்படும்பொருட்டு —(எ-று.) நீ-தோன்றுவெழு
வாய்-கை-பயனிலை-ஏ-அசை. (கருத்து.) கங்கையும்வில்வமுஞ்சூடி
யனலேந்திய பரமசிவனதுமைந்தனே- கடலும்வறளும்படி விற்
போர்செய்யுந் திருமான்மருகோனே-என்னை நமன்பிடித்துக்கொ
ள்ளாமல்-யானுன்னடியை யுறுதியாய்ப்பற்றும்படி ஐம்புலன்
களினிச்சையை யொழித்தருள்-என்பதாம். (ருங)

திதத்தத்தத்தித்தித்தி திசைதாதத்துத் தித்தத்திதா *
திதித்தத்தத்தித்ததி தித்தித்தசேதுதுத்து தித்தித்ததா *
திதத்தத்தத்தித்தத்தை தாததிதே துதைதாதத்தி *
திக்கத்தத்தித்திக்கி [illegible] *

(இ-ள்.) திதத்தத்தத்தித்த - திதத்தத்தத்தித்தவென்னுந் தாளம
னங்களை—திதி-திருநடனத்தாற்காக்கின்ற—தாதை- பரமசிவனு
—தாத-பிரமனும்—துத்தி-படப்பொறியினையுடைய—தத்தி-பு
ம்பினுடைய—தா-இடத்தையும்—தித- நிலைபெற்று—தத்து- த
ம்புகின்ற—அத்தி - சமுத்திரத்தையும்பாயலாகக்கொண்டு—ததி
தயிரானது—தித்தித்ததே - தித்திக்கின்றதென்று—து-உண்டகண்
ணனும்—துதித்து- துதிசெய்துவணங்குகின்ற—இதத்து- பேரின்
பசொரூபியான—ஆதி-முதல்வனே—தத்ததத்து- தந்தத்தையுடை
ய—அத்தி - அயிராவதத்தால்வளர்க்கப்பட்ட—தத்தை - கிளியே
ன்றதெய்வயானைக்கு—தாத - தொண்டனே—திதே- தீமையே—
துதை-நெருங்கிய—தாது - சப்ததாதுகளானிறைந்ததும்—அக
து-மரணத்தோடும்—உதி- சனனத்தோடும்—தத்து - பலதத்து
வோடும்— அத்து - இசைவுற்றதுமான — அத்தி - எலும்புகளை
மூடிய—தித்தி-பையாகியவிவ்வுடல்—தீ-அக்கினியினால்—தீ- தகி
கப்படுகின்ற—திதி- அந்நாளிலே—துதி- உன்னைத்துதிக்கும்—தீ
புத்தி—தொத்தது-உனக்கேயடிமையாகவேண்டும்—(எ-று.) தீ-
பூவாய்-தொத்தது-பயனிலை-ஏ-அசை- (கருத்து.) திதத்தத்தத்தி
தவென்னுந்தாளத்தானடிக்கும் -பரமசிவனும்-பிர்மாவும்-தயிரை
யுண்டு பாற்கடலையும் ஆதிசேடனையும் பாயலாகக்கொண்ட திரு
மாலும்-வணங்குகின்றமுதல்வனே - தெய்வயானைதாசனே-சனன
மரணத்திற்கிடமா யெலும்புமுதலிய தாதுகணிறைந்த பொல்லா
தவிவ்வுடற்பை-தீயில் வேகுங்காலுன்னைத் துதிக்குமென்புத்தியை
யுனதடியிணைக் காட்படுத்தவேண்டும்-என்பதாம். (௫௪)

தீதோமரணந் தவிரும்பிறப்பறுந் தீயதற்புந்
தீதோமரணம் பரமீதுகானவர் சேனைமுற்றுந்
தீதோமரணந் தனபூசுரர்திரண் டேத்துயமுத்
தீதோமரண மலையாளியென்றுளா தென்னுறவே

(இ-ள்.) தீதோ-தீங்குமாத்திரமோ—மரணம்- இறப்பும்—தவி
ரும்-ஒழியும்—பிறப்பு- சனனமும்—அறும் - நீங்குமாதலால்—தீ
ய-கொடியதொழிலை—கல்-கற்கின்ற—புந்தி-மனமே—தோம்-கு
ற்றத்திற்கு—அரண்-இடமாகிய—அம்பரமீது-சமுத்திரத்திலே—
தானவர்-அசுரருடைய—சேனைமுற்றும்- சேனையனைத்தையும்—
தீ-தகித்த—தோமர-லகுவேலையுடையோனே—னந்தனே கிருபை
யாளனே—பூசுரர்-வேதியர்கள்—திரண்டு- கூட்டமாகக்கூடி—ஏத்
திய- வணங்கத்தக்க—முத்து - சரவணபுத்திரனே—ஈது- இந்த

—ஓமரண-மறையோர்செய் வேள்வியினவிர்ப்பாகத்திற் குரியவனே—மலையாளி-குறிஞ்சிநிலத்தையாள்பவனே—என்றுலா- என்றுதிசெய்--தென்னுற- அழகுபெறும்படியாக—(எ-று.)நீ-தோன்றுவெழுவாய்-உளா-பயனிலை-ஏ-அசை (கருத்து.) தீமையையே கருதுகின்றபுத்தியே- சமுத்திரத்தின்கண்ணசுரர்களையறமாய்த்தவேலையுடையவனே வேதியர்க டொழத்தக்க சரவணமுத்தானவனே-மறையோர்செய்யும் யாகத்தினவிர்ப்பாகத்திற் குரியவனே-குறிஞ்சிநிலத்திற்கிறைவனான கந்தனே-யென்றுதுதித்தாலுனதுதீமைமாத்திரமல்ல சனனமரணமுமறும்-என்பதாம். (௫௫)

தென்னவனங்கனஞ் சூழ்காத்திரிநக சூலகரத்
தென்னவனங்கனந் தப்பதநீட்டினன் செல்வமுன்பின்
தென்னவனங்கனன் னீற்றாற்றிருத்திய தென்னவின்னந்
தென்னவனங்கனங் கைச்சிலைக்கணையுந் தீர்த்தருளே

(இ-ள்.) தென்னவனம்-தென்னஞ்சோலைகளையும்—கனம்-மேகங்கள்—சூழ்-கவிந்திராநின்ற—கா- பூஞ்சோலைகளையுமுடைய—திரிநக-திருத்தணி—பரங்குன்று-செங்கோடென்னுமூன்றுமலைகளையுமுடையானே—சூலகர-கையிற்சூலாயுதத்தையுடைய—தென்னவன்- தென்றிசைத்தலைவனாகியயமனது—அங்கனந்த-உருவழியும்படி--பதநீட்டினன்-திருப்பாதத்தைநீட்டியுதைத்தபரமசிவனது--செல்வ-மைந்தனே--முன்-முற்காலத்தில்—பின்-பின்னே கூனையுடைய --தென்னவன்-பாண்டியனது---அங்க- உடலை---நன்னீற்றால்-நன்மையைத்தருவிபூதியினால்---திருத்திய தென்ன - நிமிர்த்தினதுபோல---இன்னம்-இப்போதும்---தென்னை- வனப்புவாய்ந்த---அனங்கன்-மன்மதனது---அம்-அழகிய---கை-கையிற்பிடித்த---சிலை-கருப்புவில்லினது---கணையும்-வலிமையும்---தீர்த்து-நீக்கி---அருள்-மதனென்மேற்பாணப்பிரயோகஞ் செய்யாதபடி உன்மாலையைத்தந்தருளவேண்டும்---(எ-று.) நீ-தோன்றாவெழுவாய்-தீர்த்தருள்-பயனிலை-ஏ-அசை. (கருத்து.) திருத்தணிகை திருப்பரங்குன்று திருச்செங்கோடென்னு மூன்றுமலைகளிலுமுறைபவனே-கூற்றையுதைத்த பரமசிவனதுமைந்தனே - முன் பாண்டியனதுகூனை நிமிர்த்தினதுபோல என்னைவருத்த மன்மதன் கருப்புவில்லை வளைத்தலையுந் தீர்த்தருளவேண்டும்-என்பதாம். (௫௬)

சித்தன்பரவை வெளநீங்கிச்செய்தொழச் செல்பதவுத்
சித்தன்பரவை மனையிடமாங்குறை சிந்தைறவே

தீத்தன்பரவை தழைக்கவிண்ணகாவெனச் சென்னியின்மேற் - *
றித்தன்பரவையில் வேலத்தனேகுரு சீலத்தனே - *

(இ-ள்.) தித்தன்-கிரணங்களையுடையசூரியன்---பரவு-சஞ்சரிக்கின்ற---ஐ-அழகிய---வெளி-ஆகாசத்தையும்---நீங்கி - கடந்து---சேய்-பிள்ளையாகியபிரமாவும்---தொழ-வணங்கும்படி---செல் - சென்று---பதவுத்தித்தன் - பாதத்தையூர்த்தாண்டவமாகவெடுத்த திருமாலும்---பரவை-சமுத்திரமும்---முறையிட-அலறுகையில்--மா-மாவுருக்கொண்டுநின்றசூரனால்---குறை - உண்டான குறைபாட்டையும்---இங்கு- இம்மையையும்---உறவே-முழுதும்---தீத்து - அற்றுப்போகும்படியொழித்து---அன்பர் - அடியார்களுடைய---அவை-கூட்டம்---தழைக்க-அதிகரிக்கும்படி---விண்ண- அமராபதியை---காவென-காப்பாற்றென்றுசொல்லி---சென்னியின்மேல்- முடியின்மேல்---தித்தன்-கங்கையைச்சூடியபரமசிவன்---பரவு- துதித்த---ஐயில்-கூரிய---வேல் - வேலாயுதத்தை---அத்தனே - கரத்திலுடையமுருகக்கடவுளே---குருசீலத்தனே-குருவாகிப் பரமசிவனுக்குப் பிரணவப்பொருளையுபதேசித்தநற்குணக்குன்றமே--(எ-று.)
(கருத்து.) திருநெடுமால் முறையிடுகின்றதைக்கண்டு சமுத்திரத்தின்கண் மாவுருக்கொண்டுநின்ற சூரனைவதைத்துப் பத்தர்குழாந் துன்பமற்றுவாழும்படி. யமராபதியைக் காப்பாற்றென்று பரமசிவன்சொல்லுங்கால்வணங்கி யப்படியேமுடித்த வேலாயுதனே-அப்பரமசிவனுக்குக் குருவாயுபதேசித்தவனே-என்பதாம். (௫௭)

சீலங்கனமுற்ற பங்காகரசல தீரக்கதி - - *
சீலங்கனமுற்ற முத்தூர்செந்தூரசி கண்டியஞ்சு - *
சீலங்கனமுற்ற வேதனைமேவித் தியங்கினஞ்சீ - *
சீலங்கனமுற்ற விப்பிறப்பூடினிச் சேர்ப்பதன்றே - *

(இ-ள்.) சீலம்- தயாளத்திலும்—கன- மகத்துவத்திலும்—முற்று- மேற்பட்ட—அபங்கா- பங்கமிலாதவனே—கர - கோபத்தையுடைய—சலதி-சமுத்திரத்தின்கண்—ரக்க-அசுரக்கூட்டமாகிய—திசி-இருளை—லங்கன-கடந்தவனே—முற்றம்- முன்றிலின்கண்—முத்து- முத்துகள்—உளர்- இறைந்திருக்கின்ற—செந்தூர்- திருச்செந்தூரில்வாழ்பவனே—சிகண்டி-மயில்வாகனனே—அம்- அழகிய—சுசீ-பரிசுத்தமானவனே—லங்கனம்-பசியாகியவக்கினியினால்—உற்ற-பொருந்திய—வேதனை-வருத்தத்தை---மேவி- அடைந்து—தியங்கினம்- மயங்குகின்றேன்—சீசீ- இதுமிகவுமிகழ்ச்சியானு—லங்கனம்- பங்கமாம்—முற்ற- முழுதுமாதலால்—இப்பிறப்

பூடு- இப்படிப்பட்டசனனத்திலே—இனி- இனிமேலும்—சேர்ப்பது-சேரப்பண்ணுவது —அன்று- நன்றல்ல —(எ-று,) இக்கவியிரண்டும்- சேர்ப்பதென்னுமொரோவெழுவாயையும்- அன்றென்னுமொரோபயனிலையையுங் கொண்டுமுடிந்தன (கருத்து.) பங்கமற்றவனேசமுத்திரத்திலின்கண்ணசுரர்கிளையைமாய்த்தவனே திருச்செந்தூர்நாயகனே-மயில்வாகனனே-பரிசுத்தமானவனே- உதராக்கினிக்கே யிரைதேடிவருந்துகின்ற யிகழ்ச்சிக்கிடமான விச்சனனத்தையின்னும் யானடையாதிருக்கும்படி யெழுந்தருள்வாய்-எ-ம்.()

சேர்ப்பதுமாலய நீலோற்பலகிரித் தெய்வவள்ளி - *
சேர்ப்பதுமாலய முற்றாரெனப்பலர் செப்பவெப்புச் - *
சேர்ப்பதுமாலய வத்தைமன்யாக்கை சிதைவதன்முன் - *
சேர்ப்பதுமாலய வாசவன்செப்பிய செப்பதத்தே - *

(இ-ள்.) சேர்-நெருங்கியிருக்கின்ற---பதும் - தாமரைகளும்---ஆல-அசைகின்ற---அம்- சலத்தின்கண்---நீலோற்பல- செங்கழுநீர்மலர்கின்ற---கிரி-திருத்தணியில்வாழும்---தெய்வ- தெய்வீகமாகிய---வள்ளி-வள்ளியம்மைக்கு---சேர்ப்ப---தலைவனே---துமா- தும்பலினால்---லயமுற்றார்-மரணமடைந்தார்---என-என்று---பலர்-பலரும்---செப்ப- சொல்ல---வெப்பு- வெதும்புகின்ற---சேர்ப்பது- சிலேத்துமமும்---மால்-மயக்கமும்---அயவத்தை-பஞ்சாவஸ்தைகளும்—மன்-நிலைபெற்ற—யாக்கை- இவ்வுடல்-- சிதைவதன்முன்- அழிவதற்குமுன்னமே---சேர்ப்பது- என்னைச்சேர்த்தருளவேண்டும்---மால்-விஷ்ணுவும்---அய-பிரம்மாவும்---வாசவன்- இந்திரனும்---செப்பிய-புகழ்ந்தோதிய---செ-சிவந்த---பதம்- திருவடித்தாமரையில்---(எ-று.) நீ-தோன்றுவெழுவாய்-சேர்ப்பது- பயனிலை-அத்து- சாரியை-ஏ-அசை- (கருத்து.) திருத்தணிமலையோனே-வள்ளிநாயகனே- வெப்பும் சிலேத்துமமும்மயக்கமுமாகிய வவஸ்தைநிறைந்தவென்னுடலழிந்துவிடுவதற்குமுன்னும்- தம்பினவுடனேயிறந்தானென்று பலர்சொல்வதன்முன்னும்- பிரமா-விஷ்ணு இந்திரன் முதலினோர் புகழுநின்பாததாமரையி லென்னைச்சேர்த்துக்கொள்ளவேண்டும்-என்பதாம். (ருசு)

செப்பத்தமதிலை மாற்றார்கொளுமுன்னஞ் செல்வர்க்கிடச் - *
செப்பத்தமதிலை யெங்ஙனுய்வார்தெய்வ வேழமுகன் - *
செப்பத்தமதிலை வானுந்தேனுக்கினவர் சேனைவெள்ளிச் - *
செப்பத்தமதிலை வென்றார்குமாரவத் திக்கரசே - *

(இ-ள்.) செப்ப-நடுவுநிலைமையால்---தமது- தங்களுடைய---இ

லை-இல்வாழ்க்கைக்குரியமனைவியையும்---மாற்றார்-பகைஞர்கள்--
கொள்ளுமுன்னம்-கைப்பற்றிக்கொள்ளுமுன்னமே --செல்வர்க்கு-
ஐசுவரியவான்களுக்கு---இ- (வறியோர்க்கு) இட்டுண்ண---செப்பு-
சிவந்த---அத்தமது- கையானது---இலை- இல்லையாயின்---எங்ஙனம்-
எப்படி---உய்வார்-பிழைப்பார்கள்---தெய்வ- தெய்விகமாகிய--
வேழமுகன்-யானைமுகவிநாயகரால் --செப்பு-புகழப்பட்ட---அத்
தம்-(அவரது) தம்பியே---தில்லை-சிதம்பரநடேசரான---வாள்-ஒளி
பொருந்திய---நுதலோனுக்கினர்- நெற்றிக்கண்ணையுடையவரும்--சே
ணில்-ஆகாசத்தில்---வெள்ளி-வெள்ளியும்---செப்பு- செம்பும்---அ
த்த-பொன்னுமான---மதிலை - மதிலையுடைய திரிபுரத்தை---வென்
றார்-செயித்தவருமாகியபரமசிவனது---குமார- மைந்தனே---அ
த்திக்கு-தெய்வயானைநாயகிக்கு---அரசே-தலைவனே—(எ-று.) செ
ல்வர்-தோன்றுவெழுவாய்-எங்ஙனுய்வார்-பயனிலை- எ-அசை-(கரு
த்து.) கணபதிக்கிளையோனே- பாலலோசனருந் திரிபுரதகனருந்
தில்லை நடேசருமானபரமசிவனதுமைந்தனே-தெய்வயானைநாய
கனே- செல்வமுடையாரஃது நிலையாமையென்றறிந்து மதனன
ல்லறஞ்செய்யாதிருப்பாராயினெப்படி கடைத்தேறுவார்கள்-எ-ம்.

திக்கரசத்தி தவன்சென் றுமுன்றி திகுமரர்வந் - *
திக்கரசத்தி யிடத்தோயென்செய்வ தெனத்தருநீ - *
திக்கரசத்தி விதிர்த்திலையேலவன் செய்குவரத் - *
திக்கரசத்தி யலைவாய்வளர்நித் திலக்கொழுந்தே - - *

(இ-ள்.) திக்கர்-திக்குப்பாலகர்களும்---அச-ஆட்டை---திதவன்-
நிலைபெற்றவாகனமாகவுடையவக்கினியும்---சென்றுமுன்- முற்கா
லத்திற்பரமசிவனிடத்திற்போய்---திதிகுமரர்-திதியின்பிள்ளைகளா
கியவசுரர்கள்செய்த-- வந்திக்கு-கொடுமைக்கு---அர-சங்கரனே--
சத்தி-உமையை---இடத்தோய் - இடப்பாகத்திலுடையோனே --
என்செய்வது-எப்படித்தப்பிப்பிழைப்போம்-- என-என்றுமுறை
யிடுகையில்-- தரும்-அப்பரமசிவனுமக்களித்தருளிய---நீதி (அடி
யாரிடரைநீக்கும்) நெறியையுடைய---கரசத்தி - திருக்கரத்தின்வே
லாயுதத்தை---விதிர்த்திலையேல் - நீயெறிந்தவ்வசுரர்களையழிக்
காவிடில்---எவன்செய்குவர்- அத்தேவர்களென்னசெய்துபிழைப்
பார்கள்-- அத்திக்கு-தெய்வயானைக்கு---அரசு-நாயகனே---அத்தி-
சமுத்திரத்தின்---அலைவாய்- அலைமோதுகின்றதிருச்செந்திற்பதியி
ல்---வளர்-வளர்கின்ற--நித்திலக்கொழுந்தே-முத்தின்கொழுந்தொ
ளியானவனே---(எ-று.) அவர்கள்-தோன்றுவெழுவாய்- எவன்செ

ழ்குவர்-பயனிலை-ஏ - அசை. (கருத்து.) தெய்வயானைநாயகனே-திருச்செந்திற்பதியில்வாழுமுத்தொளியானவனே-முன்தேவர்கள் முறையிடக்கேட்டுப் பரமசிவனருளிய வேற்படையை நீர் செலுத்தாவிடி லசுரர்கள்செய்த தீமையைக்கடந்தவர்கள் பிழைப்பதெப்படி-என்பதாம். (௬௧)

திலமுந்தயில முநீகரவெங்குந் திகழ்தருசெந் - - *
திலமுந்தயில முருகாவெனாதத் திநகையினித் - - *
திலமுந்தயில முதத்தாலுருகிய சித்தவென்னே - - *
திலமுந்தயில கலவினைமேவித் தியங்குவதே - - *

(இ-ள்) திலமும்-எள்ளும்—தயிலமும்- எண்ணெய்யும்—நிகர-ஒப்பாக—எங்கும்- எவ்விடங்களிலும்---திகழ்தரு-நிறைந்துவிளங்குகின்ற---செந்தில-திருச்செந்திற்பதியோனே---முந்து-ஆயுதவருக்கங்களின்முதன்மையான---அயில- வேலாயுதத்தையுடையவனே---முருகா-குமாரக்கடவுளே---எனாது- என்றுதுதித்தோலமிடாது---அத்தி-தெய்வயானைநாயகியினது---நகை-தந்தமாகிய-- இன்-இனிய---நித்திலம்-முத்தானது- -உந்து-செலுத்துகின்ற---அயில்-நுகரப்பட்ட---அமுதத்தால்-அதராவமுதத்தால்---உருகிய- குழைந்த---சித்த-இருதயத்தையுடையோனே---என்- என்னகாரணம்---ஏதிலம் - (வழியடிமையாகியயாம்) அயலோர்போல---முந்தயில்-முற்சனனத்தினால்வந்த---அகல-பெரிதான---வினைமேவி-தீவினையுற்று---தியங்குவது-வருந்துகின்றது---(எ-று) தியங்குவது- எழுவாய்-என்-பயனிலை-ஏ-அசை. (கருத்து.) தெய்வயானை நாயகியினதரபானத்தாலுருகுமிருதயனே- எங்குமெள்ளு மெண்ணெய்யும்போனிறைந்துவிளங்குகின்றவனே-முருகனே-வேலாயுதனே-செந்திப்பதியோனே- என்றுதுதியாமலுன்துவழியடிமையாகிய யாமயலோர்போலப்பழவினையான் மயங்குகின்றதென்ன-எ-ம். ()

தியங்காப்பொறியுண் டெனுந்தனுத்தீதலு மேதியையூர் - *
தியங்காப்பொறியுனை டவமிலியேயென்று செப்பனுஞ்சத் - *
தியங்காப்பொறியுண் டயங்கைப்படாது திரவெற்புநீ - - *
தியங்காப்பொறியுண்டை[illegible]ண்டியப்போர்செய்த சேவகனே . *

(இ-ள்.) தியங்கா-மயங்காத---பொறியுண்டெனும்-ஐம்பொறிகளையுடைய---தனு-உடல்---தீதலும்-வேகின்றதும்---மேதியை-எருமைக்கடாவை---ஊர்தி- வாகனமாகவுடையயமன்-- அங்கா- (என்னைக்கொண்டுபோய்) வாயைத்திறவென்றும்---பொறி- யான்செய்

தபாவத்திற்காகதீயை---உன்- இல்லெனென்றும்---தவமிலியேயென்
று-நற்றவத்தைச்செய்யாதபாவியேயென்றும்-- செப்பலும்-சொ
ல்லுதலும்-- சத்தியம்- உண்மையாதலால்---கா- இனியாவதுகாத்
தருளும்---பொறியுங்டு- பிரமலிபியடைந்து---அயன்கைப்படா
து-பிரமதேவன்சிருஷ்டிக்குள்ளாகாமற் பிறப்பொழியும்படி---நி
ர-நிலைபெற்ற---வெற்பு-கிரவுஞ்சகிரியை---நீதியம்- சங்கநிதிபதுமநி
தியும்---கா-கற்பகதருவும்---பொறியுண்டை- செல்வத்திரளையுமு
டைய பொன்னுலகானது---பண்டு-பூர்வத்தில்---உய- பிழைக்கும்
படி---போர்செய்த-போரினைச்செய்துவென்ற- -சேவகனே-வீர
னே- (எ-று.) நீதோன்றுவெழூவாய்-கா- பயனிலை-ஏ-அசை. (கரு
த்து) முன்கிரவுஞ்சகிரியைப்பிளந்து தேவலோகத்தைக்காத்த வீ
ரனே, ஐம்பொறிகளையுடையவுடல்சாய்பலாவருய்செய்த பாவத்
துக்குத்தக்கபடி தீப்பொறியையூட்டும் யமதண்டனைக்கு நானுள்
ளாவதும் சத்தியமினியாவதிவ்வுடற்சுமைகொள்ளாமற் பிறப்பறக்
காப்பாற்றவேண்டும் என்பதாம். (௬௩)

சேவகமன்ன மலர்க்கோமுன்னீசொலத் தெய்வவள்ளி - ✻
சேவகமன்ன வதனம்புயகிரி செற்றமுழுச் - ✻
சேவகமன்ன திருவாவினன்குடிச் செல்வகல்விச் - ✻
சேவகமன்ன முனிக்கெங்ஙனுணித் திகைப்புற்றதே - ✻

(இ-ள்.) சே-இடபவாகனத்தில்---அகம்-மேல்---மன்னு- நிலை
பெற்றுவருகின்ற- -அமலர்க்கு- பரமசிவனுக்கு- -ஓம் -பிரணவப்
பொருளை---முன் பூர்வத்தில்---நீசொல - நீயுபதேசிக்க---தெய்வ-
தெய்வீகமாகிய --- வள்ளி-வள்ளிநாயகியினது---சே-சிவந்த---அக
மன்ன-இருதயதாமரைபோன்ற---வதனம்புய-முகாரவிந்தனே---
கிரி-கிரவுஞ்சகிரியை---செற்ற பிளந்த---முழுகச்சேவக- ஒப்பற்ற
வீரனே---மன்ன-தலைவனே---திருவாவினன்குடிச்செல்வ- இறந்த
பழனிப்பதிவாழுங்குமாரக்கடவுளே---கல்விச்சேவகம்-வேதமோ
துந்திறத்தையும்---அன்னம் - அன்னவாகனத்தையுமுடைய---மு
னி-பிரமா---எங்ஙன்-எவ்விதத்திலுமே---நாணி- வெட்கி---திகைப்
புற்றது- அப்பிரணவப்பொருடெரியாமல் மயங்கினது--(எ-று.)
திகைப்புற்றது-எழுவாய்-எங்ஙன்-பயனிலை-கு- சாரியை-ஏ-அசை.
(கருத்து.) வள்ளிநாயகியிருதயதாமரைபோன்ற வதனம்புயனே-
கிரவுஞ்சகிரியைப் பிளந்தவீரனே-பழனிப்பதியானே-தலைவனே
பரமசிவனுக்குபதேசித்த பிரணவத்திற்கு வேதமோதுந்திறத்தை
யுடைய பிரம்மா-பொருடெரியாமலுணித்திகைப்புற்றிருந்த தெ
ப்படி-என்பதாம். (௬௪)

திகைப்படங்கப்புயந் தந்தருளானென்ப டிங்களிய - *
திகைப்படங்கத்தமை யார்செந்திலானென்ப டென்னனுய - *
திகைப்படங்கப்புகல் சேயென்பள்கன்னிகண் ணீர்தரவி - *
திகைப்படங்கத்தமை யாதெமையாட்கொளுஞ் சீகரமே - *

(இ-ள்) திகைப்பள்-மயங்குகிறாள்—தங்க - தழுவியுயிர்பெற்றிருக்கும்படி—புயம்-தனதுபுயத்தை--தந்தருளான்- தந்துகிருபைசெய்கின்றானில்லை—என்பள்-என்கிறாள்--திங்கள்-சந்திரனை—நியதிகைப்பள்-நித்தியமுழுபாலம்பனஞ்செய்கிறாள்—தம்-தனது---கத்து-இப்படிவருந்திமுறையிடுதலை—அமையார்- க்ஷமித்திரக்ஷிக்கின்றாரில்லை—செந்திலார்-செந்திற்குமரர்—என்பள்-என்கிறாள்--தென்னன்-கூன்பாண்டியனது—உயதி -(சுர) வுருத்தத்தில்—கைப்பு-வெப்பம்—அடங்க-தணியும்படி—புகல் - (தமிழ்வேதமாகிய தேவாரத்தை) மொழிந்தருளிய—சேயென்பள் - சம்பந்தப்பிள்ளையேயென்றுஞ்சொல்லுகிறாள்—கன்னி - எனதுயிராகியபெண்ணானவள்—கண்ணீர்தர - கண்ணீர்சோரும்படியாக—(ஆதலால்) விதி-பிரமனது—கைப்படு- கையிற்சிருஷ்டிக்கப்படுகின்ற—அங்கத்து-உடற்பைக்குள்— அமையாது - இவ்வான்மாவமைக்கப்பட்டு சனனமுறாதபடி—எம்-எம்முடைய—ஐ - குலதெய்வமே—ஆட்கொளும்-அடிமைகொண்டருளவேண்டும்—சீகரமே - அழகியகுமாரக்கடவுளே—(எ-று.) நீர்-தோன்றுவெழுவாய்- ஆட்கொளும்-பயனிலை-ஏ-அசை. (கருத்து.) எங்கள் குலதெய்வமானவழகனே-என்னுயிராகிய பெண்ணானவள் செந்திற்பதியான் யான் முறையிடுங்குறையைத் தணிக்கின்றானில்லை- அவன்புயத்தைத்தழுவத் தரவுமில்லையென்றும்- கூன்பாண்டியன் சுரந்தணித்தவனேயென்றும்-சொல்லுகிறாள்-சந்திரனையுந் தினந்தோறும்வெறுத்துமயங்குகிறாளினியிப்படிப்பட்ட சனனமுற்றுவருந்தாதவண்ணமாண்டுகொள்ளவேண்டும்-என்பதாம். (௬௫)

சீகரசிந்துர வுத்தவெஞ்சூர செயபுயவ - - - *
சீகரசிந்துர வல்லிசிங்கார சிவசுதசு - - - *
சீகரசிந்துர கந்தரவாகன் கிறைவிடுஞ்சு - - - *
சீகரசிந்துர மால்வினைக்குன்றைச் சிகண்டிகொண்டே - *

(இ-ள்.) சீகரம்-அலைகளையுடைய—சிந்து-சமுத்திரத்தின்கண்—ரவுத்த-இராவுத்தனை—வெம் கொடிய—சூர சூரனை—செய-வென்றவனே—புய-உனதுதிருப்புயத்தை—வசீகர- வசீகரித்தலில்வா

சூரிய—சிங்கார-அலங்காரத்தையுடையவனே—சிவசுத-பரமசிவனது மைந்தனே—சுசி-அக்கினியினது—கர-கையிலிருந்தவனே—சிந்துர-வெள்ளையானையையும்—கந்தர-மேகத்தையும்—வாகன்-வாகனமாகக்கொண்டவிந்திரனது—சிறை-சிறையை—விடுப்-களைந்த—சுசிகர-பரிசுத்தனே—சிந்து-சிதறவடி—உற-வலிய—மால்-மயக்கத்தைத்தரா நின்ற—வினை-இருவினையாகிய—குன்றை-கன்மலையை—சிகண்டி கொண்டு-மயில்வாகனரூடரா யென்முன்னெழுந்தருளி--(எ-று.) நீ-தோன்றாவெழுவாய்-சிந்து-பயனிலை-ஏ-அசை (கருத்து.) சமுத்திரத்தின்கண் வலியசூரனைவென்றவனே, அழகிய புயாசலனே, வள்ளிநாயகனே, பரமசிவன்மைந்தனே, அக்கினியின்கையிலிருந்தவனே, இந்திரனதுசிறையைக்களைந்தபரிசுத்தனே, நீ மயிலேறிவந்தென்வினையாகிய குன்றைப் பொடிபடுத்தவேண்டும்-என்பதாம். (௬௬)

சிகண்டிதத்தத்த மரவாரிவிட்ட திதிபுத்ரரா - - *
சிகண்டிதத்தத்த நகபூதரதெய்வ வள்ளிக்கொடிச் - *
சிகண்டிதத்தத்த மலர்மேற்குவித்திடை செப்புருவஞ் - *
சிகண்டிதத்தத்த கற்போபலமென்னுஞ் சேகரனே - *

(இ-ள்.) சிகண்டி-மயில்வாகனத்தை—தத்த-சதிபாய்ந்துசெல்லும்படி—தமர-முழங்குகின்ற—வாரி-சமுத்திரத்தின்கண்—விட்டு-நடத்தி—அ-அந்த—திதி-திதியினுடைய—புத்ரராசி-பிள்ளைகளாகியவசுரக்கூட்டங்களை—கண்டித-சேதித்தவனே—தத்த-தந்தத்தையுடைய—நகபூதர-பாம்புபோன்றதிருச்செங்கோட்டுக்கதிபனே—தெய்வ-தெய்வீகமான—வள்ளிக்கொடிச்சி-குறமாதாகிய வள்ளிநாயகியை—கண்டு-பார்த்து—இதம்-இதமாக—அத்தமலர்-உன் கைகளாகியமலரை—மேற்குவித்து-சென்னிமேற்கூப்பி—இடை-யெல்லேணையுன் இடையானது—செப்பு-சிறப்பித்துச்சொல்லத்தக்க—உரு-வடிவமாகிய—வஞ்சி-வஞ்சிக்கொடியே—கண்-விழி—தித-நிலைபெற்ற—தத்து-ஆபத்துகளெல்லாம்—அகல்-நீங்குகின்ற—தபோபலம்-(விரகாக்கினையைத்தணித்தலால் நான்செய்) தவத்தின்பயனே—என்னும்-என்றுநலம்புனைந்துரைத்தும்—சேகரனே-தலைவனே—(எ-று.) (கருத்து.) சமுத்திரத்தின்கண்மயிலேறிச்சென்றசுரர்கிளையைமாய்த்தவனே,-திருச்செங்கோட்டுமலையாதிபனே- வள்ளிநாயகியைநோக்கிச்சென்னிமேற்கைகூப்பியுன்னிடைவஞ்சிக்கொடியே யுன்கண்களென்றவப்பயனே என்று நலம் பாராட்டுங்குமாரக்கடவுளே-என்பதாம். (௬௭)

சேகரவாரண வேல்வீரவேடச் சிறுமிபத - *
சேகரவாரண மேவும்புயாசல தீவினையின் - *
சேகரவாரண வெற்பாளநாளுந் த்ரியம்பகனார் - *
சேகரவாரண நின்கையில்வாரணஞ் சீவனொன்றே - *

(இ-ள்.) சே- (அடியார்களை) காத்தலில்—கரவா- வஞ்சித்தலில்லாத—ரண-யுத்தத்தில்வலிதங்கிய—வேல்- வேலாயுதத்தையுடைய—வீர-வீரனே—வேடச்சிறுமி- குறச்சிறுமியாகிய வள்ளிநாயகியினது—பத-பாதத்தை—சேகர- முடியிற்றரித்தவனே—வாரணம்-தெய்வயானை—மேவும்-தழுவும்—புயாசல- மலைபோன்றபுயத்தையுடையவனே—தீவினையின்-கொடியவினையின்—சேகு- வயிரத்தை—அர-சங்கரிப்பவனே—ஆரண- வேதம்பூசிக்கின்ற—வெற்பாள-திருச்செங்கோட்டுமலைக்கதிபனே—நாளும்-நாடோறும்—திரியம்பகனார்-திரிநேத்திரங்களையுடையபரமசிவனது—சே- இடபவாகனமாகியவிஷ்ணுவின்—கர- கையிலிருக்கின்ற—வாரணம்-சங்கும்—நின்-உனது—கையில்-திருக்கரத்திலிருக்கின்ற—வாரணம்-கொடியாகியகோழிக்கும்—சீவனொன்றே-இரவுநீடியாமல்விடிதலைக்காட்டித்தொனிசெய்தலாலுங்கூவுதலாலும் பிராணனொன்றாகவேயிருக்குமோ—(எ-று.) சீவன்-எழுவாய்- ஒன்றே- பயனிலை- ஏ-அசை. [இவ்விரண்டுகவியுங்குளகம்] (கருத்து.) அடியார்களைக் காக்கும்வேலாயுதத்தையுடையவனே-வள்ளிநாயகிபதசேகரனே- தெய்வானைதழுவும்புயனே வயிரமானவினையையொழிப்பவனே- திருச்செங்கோட்டு மலையையுடையவனே- பரமசிவனுக்கிடபவாகனமாகிய விஷ்ணுவின்கையிலிருக்கின்ற சங்கும்- உனதுகரத்திலிருக்கின்றகொடியாகிய கோழியும்- பொழுதுவிடிதலைக்காட்டித் தொனிசெய்தலுங்கூவுதலுமொன்றாயிருத்தலா லவற்றிற்குப்பிராணனுமொன்றாகவேயிருக்குமோ-என்பதாம். (௬௮)

சீவனசத்துரு கன்பாற்பிறப்பறத் தேவருய்யச் - *
சீவனசத்துரு மிக்குமெய்யோன்கையிற் சேர்த்தசெவ்வேள் - *
சீவனசத்துருச் செய்யாண்மருகவெனுதிடையே - *
சீவனசத்துரு வெய்தியெய்தாப்பழி சிந்திப்பதே - *

(இ-ள்.) சீவன்-பிராணன்—அசத்து- சத்தல்லவாகையால் (சீவனுந்தனுவுமிசைந்திருக்கும்போதே)—உருகு-இளகத்தக்க—அன்பினால்-பக்தியினால்—பிறப்பு-சனனம்—அற- (சத்தின்னதென்றறிந்து) ஒழியும்படி—தேவர்-தேவர்கள்—உய்ய-பிழைக்கும்படியாய்—சீவன்- சிவகாரணனானபரமசிவனால்—அசத்து- ஆட்டுவாகனத்தையுடைய —உருமிகும்-வெப்பத்தைத்தருகின்ற—மெய்யோ

ன்- தேகத்தையுடையவக்கினியினது—கையில் - கரத்தில்—சேர்த்த- சேர்க்கப்பட்ட—செவ்வேள்-குமாரக்கடவுளே—ஶ்ரீ- பிரகாசம்பொருந்திய—வனசத்து- தாமரைத்தவிசையுடைய—உருச்செய்யாள்- சிவந்ததிருமேனியையுடைய மகாலட்சுமிக்கு—மருக-மருகனே—எனது - என்றுள்ளத்திருத்தித்தியானிக்காமல்—இடையே-மத்தியில—சீவன்- சீவனானது (சத்தாகியபரத்தையு மசத்தாகியதன்னையுமறிவதைவிட்டு)—அசத்து- அசத்தாகிய— உரு- (மலபாண்டமாகிய) உடலை—எய்தி- அடைந்து—எய்தாப்பழி- அதற்கேற்கத்தகாதபெரும்பழிகளை—சிந்திப்பது-(என்னிருதயம்) சிந்தித்துக்கொண் டவமேகாலங்கழிக்கின்றது— (எ-று.) இருதயம்-தோன்றுமெழுவாய், சிந்திப்பது- பயனிலை- ய அசை- (கருத்து.) சீவனசத்தாயிருந்து மவ்வசத்தைப் பற்றிவருந் தேகாதிமுதலிய பிறப்பொழியும்படிசத்தாகியபரனே-தேவர்களைக்காத்தசெவ்வேளே- யிலக்குமியின்மருகோனே - என்றன்பினுலுருகித் துதியாமலத்தேகம்பிழைத்தற்குரிய சீவனத்தைப்பற்றி யடாதபழியையென்னிருதயஞ்சிந்தித்துக்கொண் டிருக்கின்றது-என்பதாம். (௬௯)

சிந்துரவித்தக வாரும்புகர்முகத் தெய்வவெள்ளைச் - ✻
சிந்துரவித்தக வல்லிசிங்காரசெந் தூரகுன் றஞ் - ✻
சிந்துரவித்தக முத்திக்குமாய்நின்ற செல்வதுஞ்சாச் - ✻
சிந்துரவித்த கனம்போலுமிங்கிளந் திங்களுமே - ✻

(இ-ள்.) சிந்துர-திலதந்தீட்டிய—இத்தகவு இத்தகைமைப்பாடு—ஆரும்-நிறைந்திருக்கின்ற—புகர்-புள்ளிபொருந்திய—முக-முகத்தையுடைய—தெய்வ-தெய்வீகமான—வெள்ளைச்சிந்துர- ஐயிராவதத்தினிடம்வளர்ந்த—வித்தக-அற்புதமான—வல்லி- தெய்வயானைக்கு—சிங்கார- இனிமையானவனே—செந்தூர- செந்திற்பதிக்குநாயகனே—குன்றம்- கிரவுஞ்சகிரியை—சிந்து- பொடிசெய்த—உர-வல்லவனே—வித்தக-சர்வக்கியனே—முத்திக்கும்- மோக்ஷத்திற்கும்—ஆய்-ஆராய்ந்தருள்செய்—நின்ற-அடியவர்கட்கெல்லாந்தாய்போலநின்ற- செல்வ-செல்வனே-துஞ்சா-கண்ணுறங்காமன்முழங்குகின்றது—சிந்து-சமுத்திரமும்— ரவி-சூரியனுடையு—தகனம்போலும்-காந்தியைப்போலதகிக்கின்றது—இங்கு-இவ்விடத்தில் (இடைவிடாமல்)—இளம்-இளமைதங்கிய —திங்களும்-குளிர்ந்தசந்திரனும்—(எ-று.) நீ-தோன்றுமெழுவாய் - ஆய்-பயனிலை-ஏ-அசை, (கருத்து.) சிந்துரந்திட்டும் புகர்முகத்தையுடைய வயிராயதத்தினிடம்வளர்ந்த தெய்வயானைநாயகனே- முத்திக்குவித்த

தனே - கிரவுஞ்சகிரியைத்தகர்த்தசெந்திநாயகனே - நிறைந்தசெல்வனே - சமுத்திரமுழங்கியும் - சந்திரன்வெப்பத்தைத்தந்தும் - என்னைவருத்துவதை நீயாய்ந்தருள் - என்பதாம். (௭௰)

திங்களு மாசுணமும் புனைவார்செல்வ னென்னுயிரு - *
திங்களு மாசுணமாக்கும் பதாம்புயன் செந்திலன்னாள் - *
திங்களு மாசுணமன்போல்விழியுஞ் செழுங்கருப்புந் - *
திங்களு மாசுணநன் றாமாற்றமுந் தீட்டினன்றே - *

(இ-ள்.) திங்களும்-சந்திரனையும்—மாசுணமும்-அரவத்தையும்—புனைவார்-தரித்துக்கொள்ளுகின்றபரமசிவனது—செல்வன்-புதல்வனும்—என்-என்னுடைய—உயிர் திங்களும்-பத்துமாதமென்னுங்காலவளவுக்குட்பட்டுத்தாயின்கர்ப்பத்திலுற்றுப் பிறவித்துன்பத்தையும்—மா-மிகவும்—சுணமாக்கும்-நீறாக்கத்தக்கமகத்துவம்பொருந்திய— பதாம்புயன்-திருவடித்தாமரையையுடையவனுமாகிய குமாரக்கடவுளது—செந்தில்- திருச்செந்திற்பதியை—அன்னாள்-ஒத்துவிளங்காநின்றவிம்மங்கையினுடைய—திங்கு- தீமைகளை—அளும்-உண்டாக்கும்—மாசு- (ஆத்துமகோடிகளாற்செய்யும் பாதகங்களாகிய) குற்றத்தை—உண்-ஆராய்கின்ற—நமன்போல்-யமனையொத்த—விழியும்-கண்ணையும்—செழும்- செழுமைதங்கிய—கரும்பும்-கன்னலும்—தீம்-தித்திப்பான—களும் - தேனும்- - மாசுண-(ஒப்பாகாமையால்) குற்றமுறும்படிசெய்கின்ற - நன்று - ஆ-மிகவுமினிமையான—மாற்றமும் - மொழியையும்—தீட்டின்- எழுதவுன்றற்கூடுமானால்—நன்று- நன்மையாகும்—(எ-று.) மடலூர்தல்-தோன்றாவெழுவாய்-நன்று-பயனிலை-வ-ஆசை. (கருத்து.) சந்திரனையுஞ் சர்ப்பாபரணத்தையுந் தரித்தபரமசிவனது மைந்தனாகிய வென்பிறவியைமாற்றி தமது திருவடியையருளுங்குமாரக் கடவுளது செந்தூரையன்ன விம்மங்கையினது யமனையொத்தகண்ணையும் தேனினுங்கன்னலினு மினியமொழியையு முன்றலெழுதக்கூடுமானாலாகும்-கூடாததால் மடலூர்தலன்றென்று-எ-ம். ( )

தீட்டப்படாவினியுன்றனையென்சென்னிகறைப்பிறப்பில் - *
தீட்டப்படாவியவரல்லன்யானீக்குநான்மருட்புத் - *
தீட்டப்படாவிதமுகாசலன்சிறைவிட்டவன்றாள் - *
தீட்டப்படாவிவனையேநினைவன்றிசாமுகனே - - *

(இ-ள்.) தீட்டப்படா-எழுதப்படாது—இனி-இனிமேல்—உன்- உன்னை—என்-என்னுடைய—சென்னி-தலையில்விதியை—கறை

உதிரமுதலியவற்றானிறைந்த—பிறப்பில்- கருவிற்சனித்தலினால்—திட்டப்படு-அருசியையடைகின்ற—ஆவியவர்- உயிர்களையுடையவரைப்போல—அல்லன்யான்-யானல்லேன்—திக்கு-எட்டு திக்குகளிற்சென்று—நால்மருப்பு- தனது நான்குகொம்புகளையும்—தீட்டு-கூர்மையிடுகின்றதும்—அ-அந்த—படா-பட்டமும்—வித- சித்திரவிதங்களும்பொருந்திய—முகாசலம்- முகத்தையுமுடைய மலைபோன்றவயிராவதத்திலேறுகின்றவிந்திரனது—சிறை-சிறையை—விட்டவன்-நீக்கியாண்டகுமாரக்கடவுளினுடைய—தாள்- திருவடித்தாமரையை—தீட்ட-அடைய—படா-ஒருகாலுமழிவில்லாத—இவனையே-இப்படிப்பட்டமுருகனையே—நினைவம்-உள்ளத்திலிருத்தித்தியானிப்பேம்—(ஆதலால்)திசாமுகனே-பிரமனே—(எ-று.) சென்னி- எழுவாய்- தீட்டப்படா-பயனிலை- ஏ-அசை, (கருத்து) பிரமாவேயினியென்னை யுதிரநிறைந்த கருக்குழியி லழுந்துவோரைப் போனினையாதே- இந்திரனதுசிறையைத் தவிர்த்தாண்ட குமாரக்கடவுளது பாததாமரையையடையும்பொருட்டவனையே தியானித்துக்கொண்டிருக்கிறேனாதலாலெனது தலை யுன்கையாலினியெழுதப்படாது-என்பதாம். (௭௨)

திசாமுகவேதனையன்பாற்கரன்றிங்கடங்களவ - - *
திசாமுகவேதனையீறிலுமீறிலர்சீறுமம்போ - - *
திசாமுகவேதனைவெங்கண்டவேலன்றினைப்புனத்தந் - *
திசாமுகவேதனைநண்ணுதண்கார்வரைசேர்பவரே - - *

(இ-ள்.) திசாமுக-நான்குதிக்குமுகங்களையுடைய—வேதன்- பிரமனும்—ஐயன்- அவனதுபிதாவாகியவிஷ்ணுவும்—பாற்கரன்- சூரியனும்—திங்கள்-சந்திரனும்—தங்கள்-தங்கடங்கள்—அவதி-ஆயுசுமுடிந்து—சாம்-இறக்கின்ற—உகவேதனையீறிலும்-யுகாந்தத்திற்றுன்புறுங்காலத்திலும்—ஈறிலர் - அழியார்கள்—சீறும் - கோபித்தொலிக்கின்ற—அம்போதி - சமுத்திரத்தின்கண்தோன்றி—சாமுக-சாமுகத்தையுடையவனும்—வேதனை-தேவர்கட்குத்துன்பத்தைவிளைக்கின்றவனுமாகியசூரனை—வெங்கண்ட- புறங்காட்டச்செய்த—வேலன்-வேலாயுதத்தையுடைய முருகன்வாசஞ்செய்கின்ற—தினைப்புன-தினைப்புனங்களையும்—தந்தி- யானைகளின்—சாமுக-கூட்டங்களையும்—வேதனை-மூங்கில்களையும்—நண்ணு- பொருந்தியிருக்கின்ற—தண்-குளிர்ச்சி பொருந்திய—கார்-மேகங்கள்தவழாநின்ற—வரை-பழமுதிர்சோலைமலையை—சேர்பவர் - அடைந்திடைவிடாமற்றியானிப்பவர்—(எ-று.) சேர்பவர்-எழுவாய்-ஈறிலர் பயனி

லை-ஏ-அசை. (கருத்து.) சமுத்திரத்தின்கட் சூரனைவென்றவேலாயுதப் பெருமானுறைந்தருளிய சோலைமலையையடைபவர் பிரமா-விஷ்ணு-சந்திரசூரியர்களெல்லாமழியும் யுகாந்தகாலத்திலுந் துன்பமின்றி நித்தியராயிருப்பார்கள் என்பதாம். (௭௩)

சேரப்பொருப்பட வித்தேனிறைவன் றிரைசிறையைச் *
சேரப்பொருப்பட வல்லவன் சூரைச் சிகரியுடன் - *
சேரப்பொருப்பட வென்றண்டரேத்திய சேவகன்வான் - *
சேரப்பொருப்பட வேணியிற்சேர்த்தவன் செய்தவமே - *

(இ-ள்) சேர - சேரராசனது—பொருப்பு- கொல்லிமலைச்சாரலையும் வெள்ளிமலைச்சாரலையுமுடைய—அடவி - வனத்தில்வாழ்கின்ற—தேன் - தேன்மொழியையுடையவள்ளிநாயகிக்கு—இறைவன் காதலனே—திரை- அலையானது—சிறையை-கரையை—சேர-அழியும்படி—அப்பு - மோதுகின்ற—ஓர்-ஒப்பற்ற—உப்பு-உவர்க்கடலை—அட- வற்றும்படிவேல்விட்ட—வல்லவன்-வல்லவனே—சூரை-சூரனை—சிகரியுடன்-கிரவுஞ்சகிரியுடன்—சேர- அடியோடு—பொரு-போர்செய்து—பட அழியும்படி—வென்று - செயித்து—அண்டர்-தேவர்களால்—ஏத்திய - துதிசெய்யப்பட்ட—சேவகன்-வீரனே—வான்சேரப்பு-ஆகாயகங்கையை—ஒருப்பட- ஒன்றாக—வேணியில்-சடையின்கண்—சேர்த்தவன்- அடக்கித்தரித்தபரமசிவன்—செய்தவமே-செய்தவமாகியமைந்தனே-எ-று. (கருத்து) கொல்லிமலை வெள்ளிமலைச்சாரலையுடையவனத்தில்வாழ்கின்ற வள்ளிநாயகிக்குக் காதலனும், சமுத்திரத்தைவேலால்வற்றும்படி செய்தவனும், சூரனையுங் கிரவுஞ்சகிரியையும் நிர்மூலமாக வழித்துத் தேவர்களால் துதிக்கப்பட்டவனும்-கங்காதரராகிய பரமசிவன் செய்தவமென்னுமைந்தனுமாகிய குமாரக்கடவுளே-என்பதாம். (௭௪)

செய்தவத்தாலஞ்சுசீரெழுத்தோதிலந்தீதலருஞ் - - *
செய்தவத்தாலஞ்சுகம்பெறச்சேயுளாக்கேற்றருப்போய்ச் *
செய்தவத்தாலஞ்சுவைக்கனியீன்றதென்னேவிளைய *
செய்தவத்தாலஞ்சுகின்றனமும்மலச்செம்மல்கொண்டே *

(இ-ள்) செய்தவத்தால் - அழகியதவத்தினாலாவது—அஞ்சுசீரெழுத்து - சிறந்தபஞ்சாக்ஷரத்தை—ஓதிலம்-துதிக்கின்றோமில்லை—தீது-தீமை—அலரும்-வினையும்—செய் - நரகபூமி—தவ-அழிந்துபோகவும்—காலம்-உலகெல்லாம்—சுகம்- நன்மையை—பெற-அடையவும்—சேயுளாக்கு - சம்பந்தப்பிள்ளையாகவவதரித்துத்திரு.

வாய்மலர்ந்தருளியதேவாரத்தினால்---எற்றுருப்போய்-ஆணுருமாறி---செய்த-சிவந்த—அத்தாலம்- அப்பெண்ணுருவாகியபனை---சுவைக்கனி-இனியபழத்தை---ஈன்றது - தந்தது---என்னேம்-என்றுதுதிக்கின்றோமில்லை---வினையேசெய்து- தீவினையேபுரிந்து —அவத்தால்-வந்ததுன்பத்தினால்—அஞ்சுகின்றனம் - அச்சமுற்றிருக்கின்றனம்—மும்மலச்செம்மல்கொண்டு-மும்மலமாகியபோர்வையைத்தரித்துக்கொண்டு--(எ-று.)யாம்-தோன்றுவெரூவாய்-அஞ்சுகின்றனம்-பயனிலை-இவ்விரண்டுகவியும் குளகம் (கருத்து.)நெஞ்சமே யுலகத்தார் நரகமெய்தாமல் இன்பத்தையடையவும் ஆண்பனை பெண்பனையாகிப் பழத்தைக்கொடுக்கவும்சம்பந்தராயவதரித்துத்தேவாரத்தையருளிச்செய்தகுமாரக்கடவுளைத் துதியாமலும் அவரது பஞ்சாக்ஷரத்தை யனுஷ்டிக்காமலும் தவத்தில்முயலாமலும், தீவினைத்தொடர்பால் மும்மலப்பிணிப்புண்டு யாமவத்தின்முயன்று அஞ்சுகின்றனம் என்பதாம். (௭௫)

செம்மலைவண்டு கடரங்கமாவென்ற திண்படைவேற் - *
செம்மலைவண்டு வசவாரணத்தனைச் செப்பவுன்னிச் - *
செம்மலைவண்டு தவந்தமிழ்ப்பாணதெண் டீங்கையில்வாய் *
செம்மலைவண்டு விருப்புறுமோவிது தேர்ந்துரையே - *

(இ-ள்.) செம்-சிவந்தநிறத்தையுடைய—மலை- கிரவுஞ்சகிரியையும்—வண்டு-சங்கினங்கள் —உகள்-உலாவுகின்ற—தரங்கம் - கடலின்கண்—மா-மாவடிவாய்நின்றசூரனை—வென்ற-செயித்த—திண்-திண்ணிய—படைவேல்-வேலாயுதத்தையுடைய—செம்மலை-கடவுளை---வண்-வளப்பமிகுந்த---துவசவாரணத்தானை- கோழிக்கொடியையுடையகுமாரக்கடவுளை---செப்ப- புகழ்ந்துபாட---உன்னி-நினைத்து—செம்மலை-மனதைப்புதைத்துவிடாதே---வண்டு - குற்றம்---தவு-நீங்கிய---அம்-அழகிய---தமிழ்ப்பாண - தமிழ்ப்பாணனே--தெள்-தெளிந்தும்--தீம்-இனிப்புற்றும்---கையில் - கரத்தில்--வாய்-வாய்ப்பினும்---செம்மலை - பழமையாகியபூவை---வண்டு-சுரும்பினங்கள்---விருப்புறுமோ-இச்சிக்குமோ---இது-இதை---தேர்ந்து-ஆராய்ந்து---உரை-அக்கடவுளை பலகாலும் புகழ்ந்துபாடு --(எ-று.) நீ-தோன்றுவெழுவாய்-உரை-பயனிலை-ஏ-அசை.(கருத்து) குற்றமின்றி யின்னிசைபாடும் பாணனே-வண்டுகள்-அன்றலர்ந்த மலர்களைவிட்டுப் பழமையாகியமலர்களைவிரும்புமா-அத்தன்மையள் யானென்றறிந்து-நீகிரவுஞ்சகிரியையும் -சமுத்திரத்தில் மாவடிவாய்நின்ற சூரனையும்வென்ற கோழிக்கொடியோனைகந்தசுவா

மியினது திருப்புகழைக் குறைவின்றிப் பலகாலும் புகழ்ந்து புக
ழ்ந்து பாடுவாயாக-என்பதாம். (௭௬)

தேனைவிடப்பணி யேறேறிமுப்புரஞ் செற்றபிரான் *
றேனைவிடப்பணி சூராரியென்க தெரிவையர்பாற் *
றேனைவிடப்பணி வாய்ப்படுமாறு செறிந்தலகைத் *
தேனைவிடப்பணித் தென்றேடியென்றுந் திரியவரோ *

(இ-ள்) தேனை- தேவர்களெல்லாங் கூடிச்செய்ததேனை—விட-அச்சுறியும்படி—பணி-செய்து—ஏறு-இடபவாகனத்தின்மேல்—ஏறி-இவர்ந்து—முப்புரம்- திரிபுரத்தை—செற்ற-நகைத்தெரித்த—பிரான்-பரமசிவனுக்கு—தேர் - பிரணவப்பொருள்தெளியச்செய்த—ஐ-சுவாமியே—விள்-சொல்லத்தக்க—தப்பு-குற்றத்தால்—அணி-நெருங்கிய—சூராரி-சூரசங்காரனே—என்க-என்றுதுதிக்கக்கடவீர்கள்—தெரிவையர்பால்- காமவாஞ்சையால்பரத்தையரிடத்தில்--தேனா-தேனையானது—விட-விஷத்தையுடைய—பணி-பாம்பினது—வாய்-வாயில்—படுமாறு- அகப்பட்டாற்போலும்—செறிந்து-சிக்கிக்கொண்டு—அலகைத்தேனை - பேய்த்தேனென்னுங்கானலை—விடு-ஊறுகின்ற—அப்பு- சலமானது—அணித்தென்று - சமீபமாயிருக்கின்றதென்று—ஓடியென்றும் - எப்போதுமோடியோடி—திரியவரோ- அலைந்துதிரிகின்றவர்களே—(எ-று) நீங்கள்-தோன்றுவெழுவாய்-என்க-பயனிலை. (கருத்து) பாம்பின்வாய்ப்பட்ட தேனைபோல மாதராதுமயக்கத்திலகப்பட்டு கானலை நீரென்றெண்ணிச் செல்பவர்போல லவர்கள் பொய்யின்பத்தைநம்பி வருந்துவோரோ- யதைவிட்டு தேவர்கள்கட்டிச்சமைந்ததேனை முறித்து இடபமேறித்திரிபுரமெரித்த பரமசிவனது சுவாமியே-சூரசங்காரனேஎன்று துதியுங்கள்- என்பதாம். (௭௭)

திரிபுரத்தப்புப் புவிதரத்தோன்றி சிலைபிடிப்பத் *
திரிபுரத்தப்புத் தலைபடநாண்டொடுஞ் சேவகல்கோத் *
திரிபுரத்தப்புத் திரமான்மருக திருக்கையம்போ *
திரிபுரத்தப்புத் துறையாயுதவெனச் செப்புநெஞ்சே *

(இ-ள்.) திரி-நீயென்றுந்திரிவாயாக—புரத்து-பூரநாளில்—அப்பு-கடல்சூழ்ந்த—புவி- பூவுலகத்தை—தர - பெற்றருளும்படிக்கு—தோன்றி-அவதரித்தவுமாதேவி—சிலை- தன்னுள்பாகமாகியவிடதுகரத்தால்மேருவாகியவில்லை—பிடிப்ப-பிடித்துக்கொள்ளச்செய்து—திரிபுரத்து- முப்புரத்தின்மேல்—அப்புத்தலைப்பட - விஷ்ணுவாகியபாணத்தைப் பிரயோகஞ்செய்யும்பொருட்டு—நாண்-

னது பாகமாகியவலதுகரத்தால்வாசுகியாகிய நாணை—தொடுத்திட்ட—சேவகன்-பரமசிவனது—கோத்திரி-திரிச்செங்கோட்டுமலையை—புரத்து-நகரமாகக்கொண்ட—அப்புத்திர-அந்தமைந்தனே—மான்மருக-திருமான்மருகோனேயென்றும்—திருக்கை-திருக்கையென்னுமீனையுடைய—அம்போதி-சமுத்திரத்தின்கண்—ரிபு-அசுரராகியசத்துருக்களது—ரத்தப்புத்துறை-இரத்தங்களையே புதியவுறையாகத்தோய்ந்த—ஆயுதவென-வேலாயுதத்தையுடையவனேயென்றும்—செப்பு-புகழ்ந்துசொல்லி—நெஞ்சே-மனமே—(எ-று.) நீ-தோன்றாவெழுவாய்-திரி-பயனிலை-ஏ-அசை. (கருத்து.) நெஞ்சமே-பூரநாளிற்பிறந்த லோகமாதாவாகியபார்வதிவில்லைப்பிடித்துக்கொள்ளத் தா நாணேறிட்டுத் திரிபுரத்தின்மேல் விஷ்ணுவாகிய பாணப்பிரயோகஞ்செய்த பரமசிவனது மைந்தனாகிய திருச்செங்கோட்டுமலையாதிபனே-திருமான் மருகோனே-சமுத்திரத்தில் அசுரரைவதைத்த வேலாயுதனேயென்றுசொல்லிக் கொண்டு நீ திரிவாயாக-என்பதாம். (எஅ)

செப்பாரமுதலை மன்னோதிகனங் குரும்பைமுலை *
செப்பாரமுதலை கண்கானகைமுருந் தீரிருகன்ன *
செப்பாரமுதலை வாவியிற்சென்ற பிரான்மருகன் *
செப்பாரமுதலை வேர்களைவான்வரைச் சீரிணுக்கே *

(இ-ள்.) செப்பு-சொல்லானது—ஆரமுது-ஆரமுதம்போலும்—அல்-இருணிறமும்—ஐ-அழகும்—மன்-நிலைபெற்ற—ஓதி-கூந்தலானது—கனம்-மேகம்போலும்—குரும்பை-குரும்பையொத்த—முலை-தனமானது—செப்பு-செப்புப்போலும்—ஆர-முத்துகளையுடைய—முது-பழமையாகிய—அலை-கடல்போலும்—கண்-விழியானது—கால்-ஒளிதங்கிய—நகை-பல்லானது—முருந்து-மயிலிறகினடிபோலும்—ஈரிருகன்ன-நான்குகன்னங்களையுடைய—செ-சிவந்த—பாரமுதலை-பெரிய முதலைவாயிற்சிக்கிய யானையை—வாவியில்-தடாகத்தின்கண்—சென்ற-ரக்ஷிக்கும்படிவிரைந்துபோன—பிரான்-திருமாலின்—மருகன்-மருகோனும்—செப்பார-மிகவுந்தன்னைப்புகழ்ந்து துதிப்பவர்களது—முதலை-பிறப்பின்மூலத்தை—வேர்களைவான்-நிர்மூலமாக்குவோனுமாகியகுமாரக்கடவுளது—வரைச்சீரிணுக்கு-மலையில்வாழு மங்கைக்கு—(எ-று.) செப்புமுதலிய-எழுவாய்-ஆரமுதமுதலிய-பயனிலை-ஏ-அசை. (கருத்து.) தடாகத்தின்கண் முதலைவாயிற்சிக்கிய யானையை ரக்ஷித்ததிருமான்மருகோனுந் தன்னைத்துதிப்பவர்களது பிறப்பையொழிப்பவனுமான குமாரக்கடவுளினது மலையில்வாழுமங்கைக்

குமொழி-அமுதமும்-கூந்தல்-மேகமும்- தனம் - செப்பம்-கண்-உடலும்-போன்றிருக்கின்றன-என்பதாம். (௭௯)

ஸ்ரீராமராம சிவசங்கரா நுந் திருமுடிக்குச் *
ஸ்ரீராமராம துகரத்துழாயென்பர் தெண்டிரைமேற் *
ஸ்ரீராமராம னிறந்திறக்கத்தொட்ட சேய்கழற்குச் *
ஸ்ரீராமராம னிமையோர்மகுடச் சிகாவிம்பமே *

(இ-ள்.) ஸ்ரீ-இலக்குமிக்குநாயகனான—ராம-அழகிய—ராம- திருமாலே—சிவசங்கரா-பரமசிவனே—நும் - உங்கள்—திருமுடிக்கு-அழகியசென்னிகளுக்கு—ஸ்ரீர்- சிறந்ததன்மையாவது—ஆம்-கங்காசலத்தோடே—அரா-அரவாபரணமும்—மதுகர- தேன்பொருந்திய—துழாய்-திருத்துழாய்மாலையும்—என்பர்- என்றுசொல்லுவார்கள்—தெள்-தெளிந்த—திரைமேல்- அலையையுடையகடலின்கண்—ஸ்ரீரா- கவசத்தை—மராம - மாமரமாய்நின்றசூரனது—நிறம்-மார்பை—திறக்க-பிளக்கும்படி—தொட்ட- தனதுமெய்யிற்புனைந்த—சேய்கழற்கு- முருகக்கடவுளது திருவடிக்கு—ஸ்ரீராம்-சிறப்பாயமைந்திருக்கும்—அரா-நெருங்கிய—மன் - நிலைபெற்ற—இமையோர்-தேவர்களுடைய—மகுட-கிரீடமணிந்த—சிகாவிம்பம்- வட்டவடிவாகியதலைகள்—(எ-று.) சிகாவிம்பம்-எழுவாய்-ஸ்ரீராம்-பயனிலை-ஏ-அசை. (கருத்து.) பரமசிவனே-யுமது திருமுடிக்கு-கங்கையும்-பாம்பும்-மாலையாம் திருமாலேயுமது திருமுடிக்கு சிறந்ததிருத்துழாய்மாலிகையாம்- மெய்யிற்கவசத்தை யணிந்து-சமுத்திரத்தின்கண் சூரனை வென்ற குமாரக்கடவுளது திருவடிக்கோ தேவர்களது முடித்தலைகளேமாலையாம்- என்பதாம். (௮௰)

சிகாவலவன்பரி தப்பாடுசெய்யுஞ்செவ் வேலவிலஞ் *
சிகாவலவன்பரி வூரார்மதனித் திலஞ்சலரா *
சிகாவலவன்பரி யங்கங்குழல்பெற்ற தேமொழிவஞ் *
சிகாவலவன்பரி யானலமன்றி லுந் தென்றலுமே *

(இ-ள்.) சிகாவல-மயில்வாகனனே—அம்பர்- தனக்கன்புள்ளவடியார்க்கு—இதப்பாடுசெய்யும் - இன்னருள்செய்கின்ற— செவ்வேல்-அழகியவேலாயுதத்தையுடையவனே—இலஞ்சிகாவல- இலஞ்சிப்பதியைக்காத்தளிப்பவனே—வன்பரிவூரார்- என்னையலர்தூற்று மிவ்வூரினராகிய கொடியவர்களும்—மதன் - மன்மதனும்—நித்திலம்-முத்துவிளைகின்ற—சலராசி-சமுத்திரமும்—கா-சோலையும்—அலவன்-சந்திரனும்—பரியங்கம்- கட்டிலும்—குழல்- புள்

ளாங்குழலும்—பெற்ற- என்னைப்பெற்றவளாகிய—தேமொழி-தே
னியமொழியையுடைய—வஞ்சி- தாயின்—காவு- காவலும்—அவ
இவையெல்லாம்பெரிதல்ல—வன்- வலிய—பரியானலம்- வடவ
முகாக்கினிபோன்றுவருத்துகின்றன—அன்றியும்- (காமசின்னமா
கிய) அன்றிப்பட்சியும்—தென்றலும் (தேராகிய) தென்றற்கா
றும்—(எ-று.) அன்றிலும்-தென்றலும்-எழுவாய்-பரியானலம்-ப
யனிலை-ஏ-அசை. (கருத்து.) மயில்வாகனனே - அன்பர்க்கருளுட்
வேலாயுதனே- இலஞ்சிப்பதியோனே எனக்குப்பகைவராகிய ஊ
ராராலும்-காமனாலும் கடலாலும் சோலையினாலும்-கட்டினாலும்
வேய்ங்குழலாலும்- தாயின்காவலாலும்- உண்டாகுமிடர்பெரிதல்
ல-அன்றிலும்தென்றலுமேவடவாமுகாக்கினிபோன்றிருக்கின்றன
ஆகையாலெனக்கருள்செய்ய விதுசமயம்-என்பதாம். (௮௧)

தென்றலையம்பு புனைவார்குமார திமிரமுந்நீர்த் - *
தென்றலையம்புய மின்கோமருக செழுமறைதேர் - *
தென்றலையம்பு சகபூதரவெரி சிந்திமன்றற் - *
றென்றலையம்பு படுநெறிபோயுயிர் தீர்க்கின்றதே - *

(இ-ள்.) தென்- வண்டுகளிசைபாடுகின்ற—தலை - சிரசின்கண்—அம்பு- கங்கையை—புனைவார்- அணியும்பரமசிவனது—குமார- மைந்தனே—திமிர-இருணிறமுடைய—முந்நீர்- கடல்சூழ்ந்த—தென்-அழகிய—தலை- பூதேவிக்கும்—அம்புயம்- செந்தாமரைப் பூவில்வாசஞ்செய்கின்ற—மின்-சீதேவிக்கும்—கோ- நாயகனாகிய திருமாலினது-மருக- மருகோனே—செழு- செழுமைதங்கிய—மறைதேர்-நான்குவேதங்களுந்துதிக்கின்ற—தென்றலை- தெற்கின் கண்ணதாகிய—அம்-அழகிய—புசக-பாம்புபோன்ற—பூதர-திருச்செங்கோட்டுமலையாதிபனே—எரி- அக்கினியை—சிந்தி- கொட்டிக்கொண்டு—மன்றல்-வாசனைதோய்ந்த—தென்றல்- தென்றற்காற்றுனது—ஐயம்பு-என்தேகத்தில் மன்மதனதுபஞ்சபாணங்களும்—படு-தைத்த—நெறி-புண்வழியே—போய்- நுழைந்து—உயிர்-என்னுயிரை—தீர்க்கின்றது- (வருத்தி) நீக்குகின்றது— (எ-று.) தென்றல்- எழுவாய்- தீர்க்கின்றது- பயனிலை-ஏ-அசை. (கருத்து.) கங்கையைச்சூடிய பரமசிவனதுமைந்தனே - பூதேவிசீதேவிகளி னாயகனான திருமான்மருகோனே - வேதங்கள்துதிக்கின்ற பாம்பு போன்ற திருச்செங்கோட்டு மலையில்வாழ்பவனே - காமபாணந் தைத்த புண்வழியே தென்றற்காற் றென்னுடலினுழைந் துயிரை வருத்துகின்றது- என்பதாம். (௮௨)

தீராகமல் சலிகிதபோக மெனத்தெளிந்துந் - *
தீராகமலமெனக்கருதாத தென்சேயவநூல் - *
தீராகமல குகரம்பொறுப்ப னெனத்திருக்கண் - - *
தீராகமல மரவேகருகச் சிவந்தவனே - - - *

(இ-ள்.) தீரா-நீங்காமல்—கமல-விஷ்ணுவினது நாபிக்கமலத்தில்—ச-சனித்தபிரம்மா—லிகிதபோகமென-எழுதிய தலைவிதிப்பிராப்தமென்று—தெளிந்தும்-அறிந்திருந்தும்—தீ - என்னறிவானது—ராகம்-இச்சையினால்—அவமென-இனியபயனுடையோமல்லேமென்று—கருதாதது-சிந்தியாதது—என்-என்னகாரணம்—சேய்-குமாரக்கடவுளே—அவம்-பயனின்மையான—நூல் - சாஸ்திரங்களை—தீர்-நீங்கிய—ஆகம-பரிசுத்தமான வாகமமுரைத்தோனே—லகு-அக்கினியானவனிப்பொறிஅற்பமானது—கரம் - கையில்—பொறுப்பன்-தாங்கிக்கொள்வேன்—என-என்றுசொல்ல—திருக்கண்-உனதுசிறந்தவிழியினாலே—தீ-அவ்வக்கினியினது—ராகம்-காந்தியோடுற்றசிவந்தநிறமெல்லாம்—அலமரவே - வருத்தமுற்றே-கருக-கருகும்படி—சிவந்தவனே-கோபித்தவனே—(எ-று.) அறிவு-எழுவாய்-கருதாததென்-பயனிலை-ஏ-அசை-(கருத்து.) குமாரக்கடவுளே-பரிசுத்தவேதாகமமொழிந்தோனே-இக்கனற்பொறிலகுவானது நாம்கரத்திற்றாங்கிக்கொள்வேனென்று வன்மைபேசினவக்கினியின்விறலடங்கி யுடல்கருகக் கோபித்தவிழியையுடையவனே-கமலோற்பவனான-பிரம்மாவிதியினாலுபவந்தவருமென்று தெளிந்தும்-என தறிவானதாசை - பயன்படுவதல்லவென்று கருதாததென்னை என்பதாம்.

(௮௫)

சிவசிவசங்கர வேலாயுததினை வஞ்சிகுறிஞ் - - - *
சிவசிவசங்கர வாம்மயில்வீர செகந்திருக்கண் - - *
சிவசிவசங்கர மாவையெனுந்திற லோய்பொறைவா - *
சிவசிவசங்கர மான்பட்டவாவொளி சேர்ந்தயிம்மே - *

(இ-ள்.) சிவ- ஏகவஸ்துவான—சிவ - பரமசிவனிடத்தில்—சம்-உற்பவித்த—கர-திருக்கரத்தில்—வேலாயுத- வேலாயுதத்தையுடையமுருகோனே—தினை-தினைப்புனத்தையுடைய—வஞ்சி - பெண்ணாகிய—குறிஞ்சி-குறிஞ்சிநிலத்தில்—வசி- வாசஞ்செய்கின்றவள்ளிநாயகியினது—வசங்கரவா-பக்கத்தைவிட்டகலாத—மயில்வீர-மயிலேறுஞ்சேவகனே—செகம் - உலகத்தின்கண்—திரு-சிறந்த—கண்-விழியினால்—சிவ-சிவ—கோபி-கோபி—சங்கர-எல்லாரையுமழிக்கின்ற—மாவை- சூரனுருக்கொண்டமாமரத்தை—

னுவேலாயுதத்தையேவும்—திறலோய் - வீரனே—பொறைவாகி-யிருந்தபொறுமையென்னும்பாணத்தின்— வசிவசம் - கூர்மையினிடத்தில்-- கர-கோபமுதலிய---மான்பட்ட-மிருகங்கள்விழுந்துவிட்டன--ஒளி-உனதுதிருவருளாகியபிரகாசம்---சேர்ந்தபின்-என்னிற்கலந்தவுடனே-- (எ-று.) கரமான்- எழுவாய்-பட்ட-பயனிலை-ஏ-அசை-ஆ-அசை. (கருத்து.) ஏகவஸ்துவான பரமசிவனதுமைந்தனாகிய-வேலாயுதத்தையுடையோனே- தினைப்புனத்தில் வாழ்கின்ற வள்ளிநாயகனே-மயிலேறும்வீரனே-மாவடிவாய்நின்ற சூரனைவென்றவீரனே-நின்திருவருளின்பிரகாசத்தினால் எனதுகோபமென்னும் மிருகம் பொறுமையென்னு மாயுதத்தாலழிந்ததன்மையதாயிற்று-என்பதாம். (௮௪)

சேந்தமராத்துடர் தானவர்சேனையைத் தெண்டிரைக்கண் - *
சேந்தமராத்துடன் கொன்றசெவ்வேல திருமுடிமேற் - *
சேந்தமராத்துட ரச்சூடிமைந்த திளைத்திளைத்தேன் - *
சேந்தமராத்துட னின்னுரியென்னுமிச் சேறுபுக்கே - *

(இ-ள்.) சேந்த-கந்தனே—மராத்துடர்- கடப்பமாலிகையைப் புனைந்து—தானவர்சேனையை-அசுரர்கூட்டங்களை—தெள்- தெளிந்த—திரை-அலையையுடையகடலினிடத்தில்—கண்சேந்து- விழிகள்சிவந்து—அ-அந்த—மராத்துடன்-மாமரமாய் நின்றசூரனுடன்—கொன்ற-வதைசெய்த--செவ்வேல-சிவந்தவேலாயுதத்தையுடையோனே—திருமுடிமேல்-அழகியசிரசின்கண்—சே - இளமையான—இந்து-சந்திரனையும்—அம்-கங்காசலத்தையும்—அரா-சர்ப்பத்தையும்—துள்-துள்ளலை—தர-கொம்பை—சூடி-தரித்தபரமசிவனது—மைந்த-புதல்வனே--திளைத்து-மூழ்கி—இளைத்தேன்-மெலிந்துவருந்தினேன்—சே - என்னைக்காத்தருள்வாய் — தமரா-சுற்றத்தாராக—துடர்-பற்றிய—இல் - மனைவாழ்க்கையும்— நாரி-பெண்ணாசையும்—என்னும் - என்றுசொல்லப்பட்ட—இச்சேறு-இந்தச்சேற்றில்—புக்கு-பிரவேசித்து—(எ-று.) நீ-தோன்றாவெழுவாய்-சே-பயனிலை-ஏ-அசை. (கருத்து.) கடப்பமாலையைப்புனையுஞ்சேந்தனே-சமுத்திரத்தின்கண் மாமரமாய்நின்ற சூரனோடு அசுரர்கிளையையழித்த வேலாயுதனே-சந்திரனையும்- கங்கையையும்-சர்ப்பாபரணத்தையும்-தரித்தபரமசிவனதுமைந்தனே- என்னைச்சூழ்ந்திராநின்ற சுற்றத்தார்-மனைவி-மனை-என்னுஞ்சேற்றில் மூழ்கிவருந்துகின்றேன்-இனியாகிலுமென்னைக் காப்பாற்றவேண்டும்-என்பதாம். (௮௫)

சேறலைத்தாறலைக் கப்பாலெழுந்து செழுங்கமுகிற் - *
சேறலைத்தாறலைக் குஞ்செந்திலாய்சிந்தை தீநெறியிற் - *
சேறலைத்தாறலைத் தீர்க்குங்குமார திரியவினைச் - - *
சேறலைத்தாறலைக் கத்தகுமோமெய்த் திரங்கண்டுமே - *

(இ-ள்.) சேறு-சேற்றை—அலைத்து-உழக்கி—ஆறு - ஆற்றினின்றும்—அலைக்கப்பாலெழுந்து-அலைகளுக்குமேலெழும்பி—செழும்-செழுமைதங்கிய—கமுகில்-கமுகமரத்தில்—சேல்-சேற்கெண்டையானது—தலை-அக்கமுகின்றலையிலிருக்கின்ற—தாறு-குலைகளை—அலைக்கும்-அலைக்காநின்றவளப்பத்தையுடைய—செந்திலாய்-திருச்செந்திநாயகனே—சிந்தை-என்மனதானது—தீநெறியில்-கொடியமார்க்கத்தில்—சேறலை-செல்லுதலையும்—தாறு-அளவுபடாத—அலை-அக்கியானவிருளையடைதலையும்—தீர்க்கும்-நீக்கியருளுகின்ற—குமார-குமாரக்கடவுளே—திரிய-மாறுபடும்படி—வினை-இருவினையாகிய—சேறு-சேற்றின்கண்—அலைத்து-துன்பப்படுத்தி—ஆறலைக்கத்தகுமோ-வழிப்பறிப்போர்போலென்னுயிரைச் சோரக வரத்தகுமோ—மெய்த்திரம்-உனதருளினுண்மைமந்திரத்தை—கண்டும்-கண்டதுவே பற்றாயிருக்கவென்னுகிற வென்னை—(எ-று.)நீ-தோன்றுவெருவாய்-ஆறலைக்கத்தகுமோ-பயனிலை, (கருத்து.) சேற்றையுழக்கி யாற்றினின்று மலைகளுக்குமேலெழும்பி கமுகின்குலையை யலைக்குஞ் செந்திற்பதியோனே-அடியார்களது வக்கியானவிருளை நீக்கி யவரை நன்னெறியிற்செலுத்துங் குமாரக்கடவுளே-உன்னருளின் றிறத்தைக்கண்டறிந்தவென்னை யிருவினைச்சேற்றினுட்படுத்தலாகுமோ-என்பதாம். [தவிர்த்தாளவேண்டுதல்-குறிப்பு.] (௮௯)

திறம்பாடுவர்தன் புனத்தெய்வமேயென்பர் சேதத்துமாந் *
திறம்பாடுவர்மூது நீரெனக்காய்பவர் செந்திலைமேல் - - *
திறம்பாடுவரிதழ் கண்டுருகாநிற்பர் செப்புறச்செந் , - - *
திறம்பாடுவரி விவர்வல்லவர்நஞ் செயல்கொள்ளவே - - *

(இ-ள்.) திறம்-தமதுவெற்றியை—பாடுவர்-துதிக்கின்றார்—தன்-தண்ணிய—புன-புனத்தில்வாழும்—தெய்வமே-தேவந்தயே—என்பர்-என்றழைக்கின்றார்—(அவரியாரெனில்) சேதத்து-கேட்டையுடைய—மாந்திறம்-வலிபொருந்தியமாமரமாய்நின்ற சூரன்றன்கிளையோடு—பாடு-அழிந்தான்—உவர்-உவர்ப்பையுடைய—மூது-பழமையாகிய—நீர்-கடலின்கண்ணே—என-என்று (தேவர்கள்சொல்லும்படி)—காய்பவர்-கோபித்தவராகும்—செம்-சிவந்

து—திணைமேல்-திணைப்புனத்தின்கண்—திறம்பாள்-நீங்காதிருக்கின்றவளாகிய வள்ளிநாயகியேயுனது—துவர் பவழம்போன்ற—இதழ்கண்டு-அதரத்தைப்பார்த்துக்கொண்டே—உருகாநிற்பர் - மனமுருகிநிற்கின்றார்—செப்புற-ஏதோவொருவார்த்தைசொல்லுதற்காகவே—செந்தில்-செந்திற்பதியென்னும்—தம்பாடு-தம்மிடத்தில்—வரில்-வருவாராகில்—இவர்- இப்பேர்ப்பட்டவர்—வல்லவர்-சாமர்த்தியரோ—நம்-நமது—செயல் - உபசாரச்செய்கையை—கொள்ள-பெற்றுக்கொள்வதற்கு—(எ-று.) இவர்-எழுவாய்-வல்லவர்-பயனிலை. (கருத்து.) நாயகியே சமுத்திரத்தின்கண் சூரன் கிளையோடு அழிந்தானென்று தேவர்கள்சொல்லும்படி வதைத்தவர்-வந்தேதோ வொருவார்த்தைசொல்லும்பொருட்டிங்கேநமதுவெற்றியைப்புகழுகின்றார்புனத்தெய்வமேயென்றழைக்கின்றார்-திணைப்புனத்திலிருக்கு முனது பவழநிறம்போன்ற விதழைப்பார்த்து மனதுருகிநிற்கின்ற-இவர் தமதுசெந்திற்பதியில்வருவாராகில் நாம்செய்யு முபசாரத்தைப்பெற வல்லவர்தான்-என்பதாம். (அஎ)

செயலங்கைவாளை யிறைகோயிலைச்சிவ னாரமுதைச் - *
செயலங்கைவாளை முனிகொண்டல்வாளியைத் தேவர்பிரான் *
செயலங்கைவாளை முனைவேலையன்னவிச் சேயுறையுஞ் - *
செயலங்கைவாளை யுகள்செந்தில்வாழ்பவள் சேல்விழியே - *

(இ-ள்.) செயல்-சேற்றிலுண்டாகின்ற—அம்- அழகிய—கை-ஒப்பற்ற—வாள்-ஒளிபொருந்திய—ஐ-சிரேஷ்டமான—இறை-பிரம்மாவின்—கோயிலை-ஆலயமாகியதாமரையையும்—சிவனார்- பரமசிவனுண்ட—அமுதை- விஷத்தையும்—செய- வெற்றிபொருந்திய—லங்கை- இலங்காபுரியினது—வாளை- பிரகாசத்தினழகை—முனி-கோபித்த—கொண்டல்-மேகநிறத்தையுடையஸ்ரீராமரது—வாளியை-பாணத்தையும்—தேவர்பிரான் - தேவர்களுக்குத்தலைவனாகியவிந்திரனது-செயல்-போர்புரிகின்ற—அங்கை - அங்கையிற்பற்றிய—வாளை-வாளாயுதத்தையும்—முனை- கூர்மைபொருந்திய—வேலை-வேலாயுதத்தையும்—அன்ன - ஒத்துவிளங்காநின்றன—இச்சேயுறையும்-இக்குமாரக்கடவுளமர்ந்தருளிய—செய்- வயலையுழுகின்ற—அலம்-கலப்பையை—கை- கோபித்துமோதி—வாளை-வாளைமீன்கள்—உகள்-புரளுகின்ற (வளப்பத்தையுடைய)—செந்தில்-திருச்செந்திற்பதியில்—வாழ்பவள்- வாழும்பெண்ணினது—சேல்- சேற்கெண்டைபோன்ற—விழி- கண்களிரண்டும்—(எ-று.) விழி-எழுவாய்-அன்ன-பயனிலை-ஏ-அசை.(கருத்து.) குமாரக்கடவுளமர்ந்தருளிய திருச்செந்திற்பதியில்வாழும் பெண்ணினது கண்

கள் பிரம்மாவுக்குறைவிடமாகிய தாமரையையும், இலங்கையை யழித்த ஸ்ரீராமரதுபாணத்தையும், பரமசிவனுண்ட நஞ்சையும், இந்திரன் கைவாளையும் ஒத்துவிளங்குகின்றனவென்பதாம். (௮௮)

சேலையிலாருந் தவஞ்சூலமேறச் சினத்தவன்கண் *
சேலையிலாருந் திவனேற்பவையர சிந்திரியச் *
சேலையிலாரும் பராபரிபுக்குறச் சிக்கெனுமிச் *
சேலையிலாருந் திறையிட்டனர்தங்கள் சித்தங்களே *

(இ-ள்.) சேலை-அசோகமரத்தை—இலார்-இல்லிடமாகவுடைய வமணர்கள்—உந்து-உயர்ந்த—அ- அந்த—வல்-வலிய—சூலம்-கழுவில்—ஏற-ஏறியழியும்படிக்கு—சினத்தவன், சம்பந்தப்பிள்ளையாய்த் தேவாரம்பாடிசெயித்தவன்—கண்- விழியானது—சேல்-சேற்கெண்டைக்கும்—ஐயில்-வேலுக்கும்—ஆர்-ஒப்பாகிய—உந்தி- காண்டாற்றையுடைய—வனேற்பவை- வனத்திலுற்பவித்தவள்ளிநாயகிக்கு—அரசு- தலைவனான குமாரக்கடவுள்—இந்திரியச்சேலை- பஞ்சேந்திரியச்செய்கைகளை—இலார்- நீக்கியதபோதனர்கட்கும்—உம்பர்- தேவர்கட்கும்—ஆப- துன்பத்தைவிளைத்த—ரிபு-சத்துருவாகியசூரனை—குற- குற்றும்படி—சிக்கெனும்- இறுக்கிக்கட்டிய—இச்சேலையில் - சிதாம்பரக்கச்சையில்—ஆரும் மாதர்களெல்லாம்— திறையிட்டனர் - கப்பமாகசமர்ப்பித்தார்கள்— தங்கள்-தங்கடங்கள்—சித்தங்கள்-இருதயங்களை—(எ-று.) ஆரும்-எழுவாய்-திறையிட்டனர்-பயனிலை-ஏ-அசை. (கருத்து.) சம்பந்தப்பிள்ளையா யவதரித்துச்சமணரைக் கழுவேறும்படிசெய்தவனும், வள்ளிநாயகிக்குத் தலைவனுமாகியகுமாரக்கடவுள்தேவர்முதலியோரை வருத்தியசூரனை வெல்லும்படி யழகியவரையிற்கட்டிய சிதாம்பரக்கச்சையினிடத்தில் மாதர்களெல்லாருந் தங்கடங்க ளிருதயங்களைக் கப்பமாகசமர்ப்பித்தார்கள்-என்பதாம். (௮௯)

சித்தத்தரங்கத்தர் சித்தியெய்தத்திரி கின்றதென்னச் *
சித்தத்தரங்கத்தர் சந்ததியேசெந்தி லாய்சலரா *
சித்தத்தரங்கத் தரக்கரைச்செற்றகந் தாதிங்களிந் *
சித்தத்தரங்கத்தர் சேயாரணத்தந் திகிரியையே *

(இ-ள்.) சித்த-இருதயமானது—தரங்கத்தர்- நிலைப்படாமலலைபோற்புரளுந்தன்மையையுடையவர்—சித்தி- மோக்ஷத்தை—எய்த அடையும்படி—திரிகின்றது-அலைந்துதிரிகின்றது—என்னென்ன

காரணம்—அர்ச்சித்து-பூசைசெய்தே—அத்தர்-சுவாமியாகிய, அரங்கத்தர்-எலும்பைமாலையாகவணிந்த பரமசிவனது—சந்ததியே மைந்தனே—செந்திலாய்-திருச்செந்திற்பதியோனே—சலராசி சமுத்திரத்தின்கண்—தத்தரம்-தங்கடங்கள்வலிமையை—கத்து-கூர்ப்பரித்துச்சொல்லிய—அரக்கரை-அசுரரை—செற்ற-செயித்த—கந்தா-முருகனே—திங்கள்-சந்திரன்—இஞ்சி-மதிலின்கண்—தத்து-தவழுகின்ற—அரங்கத்தர்-திருவரங்கநாதருடைய—சேய்-பிள்ளையாகிய (பிரம்மாவினால்)—ஆரண-வேதம்பூசிக்கின்ற—தந்தி-பாம்புபோன்ற—கிரி-திருச்செங்கோட்டுமலையில்வாழும்—ஐ-சுவாமியே—(எ-று.) திரிகின்றது-எழுவாய்-என்-பயனிலை-ஏ-அசை (கருத்து.) திருச்செந்திற்பதிக்கதிபனே-சமுத்திரத்தின்கண் அரக்கரை மாய்த்தோனே-கந்தனே-வேதம்பூசித்ததிருச்செங்கோட்டுமலையில்வாழ்கின்றவனே-பரமசிவனது மைந்தனே-சித்தநிலையற்றவர்கள் வெளிப்பூசைசெய்து மோக்ஷத்தையடையும்படி அலைந்துதிரிகின்றதென்ன காரணம்-என்பதாம். (௬௰)

திகிரிவலம்புரி மாற்கரியார்க்குப தேசஞ்சொன்ன - *
திகிரிவலம்புரி செய்யாரிலஞ்சி செந்தூர்கனதந் - *
திகிரிவலம்புரி வேறும்படைத்தருள் சேய்தணியில் - *
திகிரிவலம்புரி சூடியவாநன்று சேடியின்றே - *

(இ-ள்.) திகிரி-சக்கராயுதத்தை—வலம்-வலதுகரத்தில்—புரி-தரித்த—மாற்கு-விஷ்ணுவுக்கு—அரியார்க்கு-அறிதற்கரிதானபரமசிவனுக்கு—உபதேசஞ்சொன்ன-ஓங்காரப்பொருளையுபதேசித்தருளிய—திகிரி-சுவாமிமலையென்றுந்திருவேரகத்தையும்—வலம்புரி-சங்கினங்கள்—செய்-வயல்களின்கண்—ஆர்-நிறைந்திருக்கின்ற—இலஞ்சி-திருவிலஞ்சிப்பதியையும்—செந்தூர்-திருச்செந்தூரையும்—கன-மேகங்கள்தவழாநின்ற—தந்தி-பாம்புபோன்ற—கிரி-திருச்செங்கோட்டுமலையையும்—வலம்-திருவலத்தையும்—புரி வேறும்-மற்றைஸ்தலங்களையும்—படைத்தருள்-தனக்குறைவிடமாகக்கொண்டருளிய—சேய்-குமாரக்கடவுளது—தணியில்-திருத்தணிகையில்—திகிரி-மூங்கிலானது—வலம்புரி-நந்தியாவட்டத்தை—சூடியவா-சூடியவிதத்தின்குறி—நன்று-நன்றாகவிருக்கின்றது—சேடி-தோழியே—இன்று-இன்றையதினம்—(எ-று.) சூடியவா-எழுவாய்-நன்று-பயனிலை-ஏ அசை-(கருத்து.) தோழியே பரமசிவனுக்குபதேசித்த-சுவாமிமலை-திருவிலஞ்சி-திருச்செந்தூர்-திருச்செங்கோட்டுமலை-திருவலம்-இவைமுதலாகிய பலவே

 12476 (8118) 

றுஸ்தலங்களிலும்முறைந்தருளிய குமாரக்கடவுளது திருத்தணிகை மலையில் மூங்கிலின்மேல் நந்தியாவட்டத்தைச் சூடியிருக்குங்குறி நன்றாயிருக்கின்றது-என்பதாம். (௯௧)

சேடிவணங்கு வளைத்தோளெனப்புணர் சேயவட - *
சேடிவணங்கு திருத்தணிகாவல நின்செருக்காற் - *
சேடிவணங்கு கொடியிடையாளையென் செப்புமுலை - *
சேடிவணங்கு தலைக்களிறீந்தது செல்லநில்லே - *

(இ-ள்.) சேடு-அழகியதாகும்—இ-இந்த—அணங்கு-மங்கையினது—வளை-வளையலையணிந்த—தோளென-தோளென்றுமிகவுமகிழ்ந்து—புணர்-முன்வேண்டினகாலத்தென்னை மணம்புணர்ந்த—சேய-முருகனே—வட.சேடி-வடக்கிலுள்ளகன்னனாகிய விஞ்சையருலகம்—வணங்கு-வழிப்படத்தக்க—திருத்தணி-திருத்தணிகைக்கு—காவல-தலைவனே—நின்-நினது—செருக்கால்-செருக்கினால்—சேடி-கர்வித்திருக்கின்ற—வணங்கு-துவளாநின்ற—கொடி-கொடிபோன்ற—இடையாளை-இடையையுடையபரத்தையை—என்செப்பு-நிந்தித்துப்பேசவேண்டியகாரணமென்னவிருக்கின்றது—முலைச்சேடு-எனதுகொங்கையின்றிரக்ஷியை—இவணம்-இப்படி—திரட்சி-இன்மையாகும்படி—குதலை-மழலைச்சொல்லையுடைய—களிறு-என்பாலன்—ஈந்தது-தந்துவிட்டது—(ஆதலால்)செல்லா என்னிடத்துவராமற் செலலும்படி—நில்-தூரமாகநில்லு—(எ-று.) நீ-தோன்றுவெழுவாய்-நில்-பயனிலை-எ-அசை.(கருத்து.) தணிகைமலையில்வாழ்வோனே-பண்டென்னை மிகவுமழகுடையவளென்று மணம்புணர்ந்தசேயோனே-நீ இப்போதுகலந்தகளிப்பால்மிகுதியடைந்தபரத்தையையானிந்தித்துப்பேசவேண்டியகாரணமென்னவிருக்கின்றது-எனதுயௌவனபருவத்தைமழலைச்சொல்லையுடைய பாலகன் வேறுபடுத்தினனாதலா லப்பரத்தையர்பாற்றானேசெல் லென்பால்வரவேண்டியதில்லை-என்பதாம். (௯௨)

செல்லலையம்பொழில் சூழ்செந்திலானறி யானிறைகைச் - *
செல்லலையம்பொழி லெங்கணுமேறப வெனத்தெறித்த - *
செல்லலையம்பொழி லங்கைக்கருடிரு மானிறம்போற் - *
செல்லலையம்பொழி லாகவமாதுயிர் சேதிப்பதே - *

(இ-ள்.) செல்-மேகத்தை—அலை-அசைக்கின்ற—அம்-அழகிய—பொழில்சூழ்-சோலைசூழ்ந்த—செந்திலான்-திருச்செந்திற்பதியையுடையவன்—அறியான்-அறிகின்றானில்லை—இறை-பரமசிவனது—கை-கரத்தில்—செல்லல்-போகாதே—ஐயம்-பிச்சைக்கு—

பொழிலெங்கணும்-உலகமெங்கும்—எற்க-இரக்கும்படியாய் —எ
ண-என்று—தெறித்த-தமதிரத்தத்தைபிரமகபாலத்திற்றெறித்தவரு
ம்—செல்லல்-துன்பத்தையும்—ஐயம் - பயத்தையும்—பொழில்-
பெருமையையுமுடைய—லங்கைக்கு-இலங்காபுரிக்கு — அருள்-உ
ண்டாக்கினவருமாகிய--திருமால்-ஸ்ரீராமராது — நிறம்போல் - நீல
நிறத்தைப்போல—செல்-நடக்கின்ற—அல்- இராக்காலத்தில்— ஐ
யம்பு-மன்மதனதுபஞ்சபாணமானது—ஒழி- அழியும்படி—லா
கவம்-மிகவுநொய்யதான—மாதுவிர்- மங்கையினுயிரை—சேதிப்
பது-வதைக்கின்றதை—(எ-று.) செந்திலான்-எழுவாய்- அறியா
ன்-பயனிலை-எ-அசை. (கருத்து.) பரமசிவனது கையிலிருக்கின்ற
பிரம்மகபாலத்தில் தமதிரத்தத்தை பலியாகவார்த்தவரும் - இலங்
காபுரியைச்செயித்தவருமான விஷ்ணுவின்னிறம்போலிருண்ட வி
ராக்காலத்தில் காமபாணங்க ளிம்மங்கையினுயிரைப் பிளக்கின்ற
தைச்செந்திருயகணறியானோ-என்பதாம். (௯௩)

சேதிக்கனைத்து களதாக்குநோக்கினன் செல்வசெந்திற் - *
சேதிக்கனைத்து நிலைபெறச்சூரங்கஞ் சீரங்கமால் - *
சேதிக்கனைத்து வரிதோயயில்கொடெற் சேர்க்கவந்தாற் - *
சேதிக்கனைத்து வருமாமறலி திறலினையே - *

(இ-ள்.) சேது-சிவந்த—இக்கனை- கருப்புவில்லையுடையமன்மத
னது—துகளதாக்கும்- சாம்பலாகும்படியெரித்த—நோக்கினன்-
நெற்றிக்கண்ணையுடையபரமசிவனது—செல்வ-மைந்தனே—செ
ந்திற்சே-திருச்செந்தூர்முருகனே—திக்கனைத்தும் - திசைகளெல்
லாம்—நிலைபெற-நிலைபெற்றிருக்கும்படியாயும்—சூர்-சூரனுடை
ய—அங்கம்-உடலை—சீரங்கம்-திருவரங்கத்தில் வாசஞ்செய்கின்ற—
மால்-விஷ்ணுவினது—சே-பிள்ளையாகியபிரம்மா—திக்க - திகைக்
கும்படி—நைத்து-அழித்து — உவரி-சமுத்திரத்தில்- -தோய்-மூழ்
கிய—அயில்கொடு- வேலாயுதத்தைக்கொண்டு — எற்சேர்க்கவந்தா
ல்-என்னையமபடாள்கட்டிக்கொண்டுபோகவந்தால்--சேதி-கண்டி
ப்பாயாக—கனைத்துவரும்-கனைத்துக்கொண்டுவராநின்ற—மாமற
லி-பெரியயமனது—திறலினை-உக்ரவல்லமையை--(எ-று.) நீ-தோ
ன்றாவெழுவாய்-சேதி- பயனிலை-எ-அசை. (கருத்து.) கருப்புவில்
லையுடைய மன்மதனையெரித்தநெற்றிக்கண்ணையுடைய பரமசிவன
துமைந்தனே-திருச்செந்திற்பதியில்வாழ்கின்றசுவாமியே-நீ பிரம
ன்றிகைக்கவும்-திக்குகளெல்லாநிலைபெறவும்-சூரனைவென்று சமுத்
திரத்திற்றோய்ந்தவேலாயுதத்தினாலேஎன்னைக்கட்டிக்கொண்டுபோ
… -என்பதாம். (௯௪)

திறவாவனக புரிவாசனீக்கச் சிகரிநெஞ்சத் *
திறவாவனச முனியைவெஞ்சிறைய்தென் றிசைத்திருச்செந் *
திறவாவனமயி லோயந்தகாலமென் சிந்தைவைக்கத் *
திறவாவனநின் றிருவானதண்டைத் திருவடியே *

(இ-ள்.) திறவு-திறவுகோல்—ஆ-ஆனவனே—அனக-பாவமற்ற—புரி-கயிலாயத்தினது—வாசல்-கதவை—நீக்க-திறக்க—சிகரி-கிரவுஞ்சகிரியினது—நெஞ்சம்-மார்பை—திறவு-பிளந்து—ஆ-ஆச்சரியமாக,வனச-தாமரையில்வாசஞ்செய்கின்ற,முனியை-பிரமனையும்—வெஞ்சிறைய்-செயித்தவனே—தென்றிசை-தெற்கின்கண்ணதாகிய—திருச்செந்தில்-திருச்செந்தூரில்—தவா-நீங்காதமர்ந்தருளுகின்ற—வன-அழகிய—மயிலோய்-மயில்வாகனத்தையுடையவனே—அந்தகாலம்-என்னுடல்கெடு மரித்தியகாலத்தில்—என்சிந்தை-எனதுசிந்தனையை—வைக்க-ஒருவழிப்படுத்திச்சேர்ப்பதற்கு—திறவாவன-அடைக்கலஸ்தானமென்னவெனில்—நின்-நினது—திருவான-சிறப்பையுடையனவாகிய—தண்டை-தண்டையையணிந்த—திருவடி-திருவடியே—(எ-று.) திருவடி-எழுவாய்-திறவாவன-பயனிலை-ஏ-அசை. (கருத்து.) கயிலாயத்தின் கதவுதிறக்கும்படி செய்கின்றவனே-கிரவுஞ்சகிரியைப்பிளந்துபிரமாவையும் வென்றோனே-தெற்கின்கண்ணதாகிய திருச்செந்தூரில்வாழும்மயில்வாகனனே-என்மரித்தியகாலத்தி லுனதுதண்டையணிந்ததாளே யென்சிந்தையைவைக்குமடைக்கல ஸ்தானமாம்-எ-ம். ( )

திருக்கையம்போதிக ளோகஞ்சமோநஞ்ச மோதிருமால் *
திருக்கையம்போசெய்ய வேலோவிலோசனந் தென்னனங்கத் *
திருக்கையம்போருகக் கைநீற்றின்மாற்றிதென் னூல்சிவபத் *
திருக்கையம்போக வுரைத்தோன்சிலம்பிற் சிறுமிதற்கே *

(இ-ள்.) திருக்கை-திருக்கையென்னும் மீனையுடைய—அம்போதிகளோ-சமுத்திரங்களோ—கஞ்சமோ-தாமரையோ—நஞ்சமோ-விஷமோ—திருமால்-விஷ்ணுவினது—திருக்கை-திருக்கரத்திலிருக்கின்ற,அம்போ-பாணமோ—செய்ய-சிவந்த—வேலோ-வேலாயுதமோ—விலோசனம்-கண்—தென்னன்-கூன்பாண்டியனது—அங்கத்திருக்கை-முதுகின்கூனை—அம்போருகம்-தாமரைமலர்போன்ற—கைநீற்றின்-கரத்திற்றரித்ததிருநீற்றினால்—மாற்றி-நீக்கி—தென்னூல்-தமிழ்நூலாகிய—சிவபத்தி-சிவபத்தியை விளைவிக்கும்—ருக்கு-ருக்குவேதசாரமாகிய (தேவாரத்தை)—ஐயம்போக-பரசமயநூல்களினாலுண்டாகுஞ் சந்தேகநிவர்த்தியாக—

உணர்த்தோன்- சம்பந்தப்பிள்ளையாயவதரித்துத்திருவாய்மலர்ந்தருளியகுமாரக்கடவுளது—சிலம்பில்- மலையின்கண்ணிருக்கின்ற—சிறுமிதற்கு - சிறியாளாகியகன்னிக்கு—(எ-று) விலோசனம்-எழுவாய்- சமுத்திரமுதலிய-பயனிலை-ஏ-அசை. (கருத்து.) முன்சம்பந்தமூர்த்தியாயவதரித்துத்திருநீற்றாற்சமணமதத்தழுந்திருந்த பாண்டியனதுகூனைமாற்றியும்-எச்சமயம்பெரிதோவென்றுமையமற்றுச் சைவமேபெரிதென்று நம்பும்படிதமிழ்வேதமாகிய தேவாரத்தை மொழிந்தருளிய- குமாரக்கடவுளது- மலையின்கண்வாழும் கன்னியினதுகண் சமுத்திரமோ - தாமரையோ - விடமோ- அம்போ-வேலோ-என்பதாம். (௬௯)

சிறுமிக்குமர நிகர்வீர்பகிரச் சிதையுயிர்த்துச் - *
சிறுமிக்குமர சரணமென்னீருய்விர் செந்தினைமேற் - *
சிறுமிக்குமர புரைத்துநின்றோன்சிலை வேட்டுவனெச் - *
சிறுமிக்குமர வணிமுடியான்மகன் சீரடிக்கே - *

(இ-ள்.) சிறு- சிறிதான—உமிக்கும் - குற்றுமியையாயினும்—மரநிகர்வீர்பகிர - பிறர்க்கிட்டுண்ணமனங்கூடாமல் மரம்போன்றிருப்பவரே—சிதை- அழிந்துபோவதும்—உயிர்- பிராணனுக்கு—அச்சில்-ஒதுக்கிடமுமாகியவிவ்வுடலின்கண்—துமி-ஒருதும்மலுண்டாகுங்காலையினும்—குமர- குமரனே—சரணம்- உனக்கடைக்கலம்— என்னீர்-என்றுசொல்லுங்கள்—உய்விர்- பிழைப்பீர்கள்—செம்-சிவந்த—தினைமேல்-தினைப்புனத்தில்வாசஞ்செய்த—சிறுமிக்கு- வள்ளிநாயகிக்கு—மரபு - தமதுமரபின்வழிகளை— உரைத்து-எடுத்துரைத்து—நின்றோன்-குறையிரந்துநின்றவனும்—சிலை- வில்லையுடைய—வேட்டுவன்- வேடத் திருமேனியையுடைய கண்ணப்பநாயனார்—எச்சில்- ஊன்முதலியவற்றை முன்ருசிபார்த்துநிவேதித்தவெச்சிலை—து- உவப்புடனேயுண்டவராகிய—மிக்கும்-மேன்மையாக—அரவு- சர்ப்பாபரணத்தை—அணி- தரித்த—முடியான்- முடியையுடையபரமசிவனது—மகன்- மைந்தனுமாகிய குமாரக்கடவுளினது—சிற்றடிக்கு-சிறியதிருவடியைக் கருதிக்கொண்டே—(எ-று.) நீர்-தோன்றாவெழுவாய்- உய்விர்- பயனிலை-ஏ-அசை. (கருத்து.) சிற்றுமியுமீயாமல் மரம்போன்றிருப்பவர்களே நீங்கள்பிழைப்பதெப்படி- நீர் தும்முங்காலையிலாவது தினைப்புனத்தின்கண் வள்ளியம்மையினிடஞ்சென்று தமது மரபையோதிநின்றவனும், கண்ணப்பநாயனார் நிவேதித்த வெச்சிலையினிதாக்கொண்ட பரமசிவன்மைந்தனுமாகிய கந்தசுவாமியின்றிருவடியைக் கருதிக்குமாரனே-சரணமென்றீரானால் பிழைப்பீர்கள்-எ-ம்.

சீரங்கராக மறமோதுதிகிரி செங்கைக்கொண்ட *
சீரங்கராக மருகந்ததேசிக செந்தினைமேற் *
சீரங்கராக தனகிரிதோய்கந்த செந்தமிழ்நூற் *
சீரங்கராக விநோதவென்பார்க்கில்லை தீவினையே *

(இ-ள்.) சீரம் கலப்பையையும்—கரா-முதலையினது—கம்-தலை—அற-அறும்படி—மோது-அமர்செய்த—திகிரி-சக்கரத்தை—செம்-சிவந்த—கை-கரத்தில்—கொண்ட-தரித்திருக்கும்—சீரங்கர்-திருவரங்கத்தையுடையதிருமாலும்—ஆகமர்-ஆகமவேதத்தை ருளியபரமசிவனும்—உகந்த-விரும்பத்தக்க—தேசிக-அழக ர—செம்-சிவந்த—தினைமேல்-தினைப்புனத்தில்வாழும்—சீர்-சிறந்தவள்ளிநாயகியினது—அங்கராக-சாந்தணிந்த—தனகிரி-தனமாகியமலையை—தோய்-தழுவிய—கந்த-குமாரக்கடவுளே—செந்தமிழ் நூல்-செவ்வியதமிழ்ப்பனுவலின்—சீரங்க-சீர்முதலிய வெட்டுறுப்புக்குரியபாவலனே—ராகவிநோத-கீதத்திலுல்லாசனே—என்பார்க்கு-என்றுநாடோறுந்துதிக்கின்றவர்கட்கு—இல்லைத்தீவினை-கொடியவினைசேராது—(எ-று.) தீவினை-எழுவாய்-இல்லை-பயனிலை-ஏ-அசை. (கருத்து.) கலப்பையாயுதத்தையும் சக்கராயுதத்தையுமுடைய திருமான்மருகோனே-சுந்தரனே-தினைப்புனத்தில் வாழ்கின்ற வள்ளிநாயகியைத் தழுவுங்கந்தனே-இயலிசைமுதலிய தமிழ்நூற்குரியவிநோதனே-என்றுதுதிப்பவர்கட்குத் தீவினையில்லை-என்பதாம். (கஅ)

தீவினையற்ற சினந்திரகத்துண்மெய்த் தீபநந்தந் *
தீவினையற்ற வநந்தாதெடுத்தனஞ் செந்தினைமேல் *
தீவினையற்ற புனமான்கொழுநன் செழுங்கநகத் *
தீவினையற்ற வடியார்க்கருள்பெருஞ் செல்வனுக்கே *

(இ-ள்.) தீ-அக்கினியானவன்—வினையற்ற-தீக்ஷண்ணியமாகதகிக்கின்றதன்செய்லையற்றதுபோல்—சினந்திர்-கோபநீங்கிய—அகத்துள்-நமதுசாந்தவிருதயத்துள்—மெய்-உண்மையாகிய—தீபம்-ஞானவிளக்கை—நந்தந்தீவினை-நம்முடையதீவினையாகிய—அல்-இருளானது—தவ-கெடும்படி—நந்தாது-அவிந்துபோகாமல்—எடுத்தனம்-ஏற்றிவைத்தோம்—செம்-சிவந்த—தினைமேல்-தினைப்பயிர்விளைவில்—தீ-தீய்ந்துபோகும்—வினையற்ற-செய்கையில்லாத—புன-புனத்தில்வாழும்—மான்-மான்போன்றகண்ணையுடையவள்ளியம்மைக்கு—கொழுநன்-நாயகனாகிய—செழும்-செழு [illegible] த்தீவினை - பொன்மயமாய்ப் பிரகாசிக்கின்ற

மோக்ஷவுலகத்தை—அற்ற- பாசபந்தங்களை நீங்கிய—அடியார்க்கு தமதடியார்கட்கு—அருள்-கொடுத்தருள்கின்ற—பெரும்-பெரிய—செல்வனுக்கு-அருணிறைந்த செல்வனுக்கு—(எ-று.) யாம்-தோன்றாவெழுவாய்-எடுத்தனம்-பயனிலை-ஏ-அசை. (கருத்து.) வளமைமிகுந்த-தினைப்புனத்தில்வாழ்கின்ற வள்ளியம்மைக்கு நாயகனாம்-பற்றற்றவடியார்கட்கு- மோக்ஷவுலகத்தை யளிப்பவனுமாகிய குமாரக்கடவுளுக்கு நமதுகாந்தவிருதயத்தகழியிலுண்மையாவாஞானவிளக்கை ஏற்றிவைத்தோம்-என்பதாம். (கூம்

செல்வந்திகழு மலநெஞ்சமேயவன் றெய்வமின்னூர்
செல்வந்திகழு நமதின்மைதீர்க்கும்வெங் கூற்றுவற்குச்
செல்வந்திகழுந் திருக்கையில்வேறினை காத்தசெல்வி
செல்வந்திகழு மணவாளனல்குந் திருவடியே

(இ-ள்.) செல்-அங்குசென்று—வந்தி-வணக்கஞ்செய்—கழுமலம்-குமாரக்கடவுளானவர்ஞானசம்பந்தப்பிள்ளையா யவதரித்தருளிய சீகாழிப்பதியின்கண்—நெஞ்சமே- இருதயமே—அவன்றெய்வமானது—தெய்வ-தெய்வீகமாகிய—மின்-தெய்வயானை—ஊர்ந்துவருகின்ற—செல்-மேகவாகனமானது—வந்து-வந்து—இகழு(கின்றதால்) இகழப்படும்—நமது-நம்முடைய—இன்மை- இல்லாமையாவும்—தீர்க்கும்-நீக்கிவிடும்—வெம் - கொடிய—கூற்றுவனுக்கு—செல்-நம்மேனடப்பதாகிய—வந்தி- கொடுமையை—கழும்-துடைத்துவிடும்—திருக்கையில் (முருகக்கடவுளது) திருக்கரத்தின்—வேல்-வேலாயுதமானது—தினைகாத்த- தினைப்புனங்காவல்பூண்ட—செல்வி-வள்ளிநாயகியினது—செல்வம்- பெருஞ்சிறப்பாக—திகழும்- (நிறைந்து) பிரகாசிக்கின்ற—மணவாளன்-நாயகனாகிய கந்தசுவாமியானவர்—நல்குந்திருவடி-தனது திருவடித்தாமரையைநமக்குத்தந்தருள்வார்—(எ-று.) நீ-தோன்றாவெழுவாய்-வந்தி-பயனிலை-ஏ-அசை. (கருத்து.) நெஞ்சமே தெய்வயானையின் வாகனமாகிய மேகநமது வறுமையைத்தவிர்க்கும் குமாரக்கடவுளது வேலாயுதம்நமக்குவரும் யமதண்டனையை நீக்கிவிடும்- வள்ளிநாயகிக்கு மணவாளராகிய கந்தசுவாமி தமதுதிருவடித்தாமரையைத் தந்தருளுவாராதலால் நீ யக்கடவுண்முன் சம்பந்தப் பிள்ளையா யவதரித்த சீகாழியிற்சென்றவரை வணங்கு - என்பதாம்.

கந்தரந்தாதியுரை - முற்றிற்று.

குமரகுருபரன்றுணை.

MAHAMAHOPADHYAYA